Not for sale

ஜூலை - ஆகஸ்டு 2018

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## இரட்சிப்பாளர்களிடமிருந்து பாடங்கள்


யோசுவாவுக்கு எதிராக எரிகோ • ஒரு புதிய தலைமுறை • தெபோராள் மற்றும் பாரக்கு

கிதியோன் மற்றும் மீதியானியர்கள் • யெப்தாவுக்கு எதிராக அம்மோன்

சிம்சோன், நேற்று, இன்று, நாளை • விக்கிரகாராதனையும் தாண் கோத்திரத்தாரும்

நான் இந்த வீட்டை மகிமையால் நிரப்புவேன் • சகரியாவின் எட்டு இரவு தரிசனங்கள்

குற்றவாளியா - இல்லையா? • மேலும் கற்றுக்கொள்வதற்கு

இரட்சிப்பாளர்களிடமிருந்து பாடங்கள்

# ஆதியிலே



இஸ்ரயேலின் நியாயாதிபதிகள் உண்மையில் விடுதலை வீரர்கள் அல்லது விடுதலையாளர்கள் ஆவர். தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் புவியியல் அவர்களுக்கு சாட்சியமளிக்கிறது. அவர்கள் மேற்கொண்டு நடத்தின முக்கியமான யுத்தங்கள், அர்மெகதோனுக்கு நிழலாக இருக்கிறது அவர்கள் நமக்கு அநேக பண்புகளுக்குரிய பாடங்களை கொடுக்கிறார்கள்.

"யோசுவாவும், எரிகோவும்", பாபிலோனின் வீழ்ச்சியையும் மற்றும் வேதாகமத்தில் உள்ள ஏழு எக்காளங்களின் கருப்பொருளை நமக்கு அடையாளப்படுகிறது.

"இஸ்ரயேலின் வரலாற்றில் ஒரு புதிய தலைமுறை மற்றும் ஒரு புதிய வழி நடத்துதல்" (ஒத்னியேல் மற்றும் ஏகூத்) என்ற தலைப்பில், விசுவாசம், மனம் திரும்புதல் மற்றும் இரட்ச்சிப்பு -தீவிரமான துன்மார்க்கத்தை தோற்கடிப்பதற்கும், செழுமையான செல்வம் தோற்கடிப்பதற்குமான பாடமாக உள்ளது.

பாராக்கின் விசுவாசம் தெபோராளுடைய விசுவாசத்தோடு ஒத்துபோகவில்லை என்று "தெபோரா மற்றும் பாராக்கும், யாபீன் மற்றும் சிசேராவும்" என்ற கட்டுரை பதிவு செய்கிறது. ஆனால், அந்த நேரத்தில் உயர் தொழில் நுட்பத்தை மேற்கொள்வதற்கு அது இன்னும் போதுமானதாகவே இருந்தது. எண்ணற்ற திரளான ஜனங்கள், தேவனுடைய திட்டத்தை முறியடிக்க இயலாது என்பதை "கிதியோனும் மீதியானியரும்" என்ற கட்டுரை விளக்குகிறது. அடக்குமுறையின் கீழ் இருந்த இஸ்ரயேலரை விடுவிக்க,தன் சகோதரர்களால் நிராகரிக்கப்பட்டு முறை தவறி பிறந்த ஒரு மகனை யேகொவா தேவன் எவ்வாறு பயன்படுத்தினார் என்று "யெப்தாவும், அம்மோனும்" என்ற கட்டுரை கூறுகிறது. பிற்பாடு, முறை தவறி பிறந்தவரை போல இயேசுவையும் இஸ்ரயேல் நிராகரித்தது, ஆயினும் அவர் உயிர்த்தெழுப்பப்பட்டு இப்பொழுது இஸ்ரயேலில் சீரமைப்பை துவங்கிவிட்டார். அவர் தம் பொருத்தனையை காத்து. சிம்சோன் தன்னுடைய மீதியுள்ள ஜீவனை தேவனுடைய ஜனங்களுக்கு கொடுக்கும் வரையில், பெலிஸ்தியர்களின் அநீதிக்கு எதிராக சிம்சோனை தேவன் எவ்வாறு உந்தினார் என்பதை "சிம்சோன் - அப்போது, இப்போது மற்றும் எதிர்காலம் " என்ற தலைப்பு தொடர்புப்படுத்துகிறது. விசுவாசமுள்ள சபையின் நிறைவு, அர்மெகதோனோடு ஒத்திருக்கும் என்று அவருடைய மரண சாதனை கருதுகிறது.

மோசேயின் பேரன் வேலை தேடி, விக்கிரகாராதனையில்தானும் விற்றுப் போட்டதை"விக்கிரகாரதனையும், தெய்வங்களும்" என்ற தலைப்பு கூறுகிறது. நமக்கும் இதில் பாடம் உள்ளது.

"குற்றவாளியா, இல்லையா ?" என்பதில் உள்ள பாடம் - கடந்த காலத்தை கடந்தாக வைத்து, அதற்குபின் நம்மால் சிறந்ததைச் செய்வது.

"கற்றுக்கொள்ள இன்னும் பல" என்ற கட்டுரை, தொல்பொருளியலைப் பற்றி கூடுதலான நுண்ணறிவை தருகிறது. நம்முடைய யுகத்தின் இறுதியில், நம் ஒவ்வொருவருக்கும் கற்றுக் கொள்ள பாடங்களை வழங்குகிறது. அனைவருக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட நன்றியறிதலுக்காக வேண்டி கொள்கிறோம் .

**ஜுலை - ஆகஸ்ட் 2018**

**(தொகுப்பு 100, எண் 4)**


**யோசுவாவுக்கு எதிராக எரிகோ** 37
பாபிலோன் தேவனிடமிருந்து தன்னை பாதுகாக்க முடியாது

**இஸ்ரயேலின் வரலாற்றில் ஒரு புதிய தலைமுறை மற்றும் ஒரு புதிய வழிமுறை** 40
ஒத்னியேல் மற்றும் ஏகூத் இரட்டிப்பான தீமை மற்றும் செல்வ வளம் இனி நீடிக்காது

**தெபோராள் மற்றும் பாராக்கிற்கு எதிராக யாபீன் மற்றும் சிசெரா** 45
உயர்தொழில் நுட்பம் தேவனை தோற்கடிக்க முடியாது

**கிதியோன் மற்றும் மீதியானியர்கள்** 49
மாபெரும் எண்ணிக்கையுள்ளவர்கள் தேவனை தோற்கடிக்க முடியாது

**யெப்தாவுக்கு எதிராக அம்மோன்** 54
முறைதவறி பிறந்த கிதியோனின் மகனை, தேவன் விடுவிப்பதற்காக பயன்படுத்தினார்

**சிம்சோன், நேற்று, இன்று மற்றும் நாளை** 58
சபைநிறைவடையும் போது பாபிலோன் விழும்

**விக்கிரகாராதனையும் தாண் கோத்திரத்தாரும்** 63
ஒருவரும் விசுவாச துரோகத்ததை எதிர்க்கும் சக்தி படைத்தவர்கள் அல்ல

**குற்றவாளியா–இல்லையா?** 67
கடந்த கால குற்றம் ஒருவருடைய எதிர்காலத்தை அழித்துவிடக்கூடாது

**மேலும் கற்றுக்கொள்வதற்கு** 71
புவியியல், அர்மெகதோன் மற்றும் பண்புக்குரிய பாடங்கள்

**இன்றைய தீர்க்கதரிசனத்தில்** 73
வட மற்றும் தென் கொரியா போரை நிறுத்தியது

எரிகோ, பாபிலோன் மற்றும் அர்மெகதோன்

# யோசுவாவுக்கு எதிராக எரிகோ



"ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்." (எபிரெயர் 11:30)

**James Parkinson**

யோசுவா மோசேயின் உதவியாளராக இருந்தார், பின்னர் அவருடைய வாரிசாக அல்லது பதிலாளாக நியமிக்கப்பட்டார். தேவனுடைய ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு யோசுவா வழி நடத்த வேண்டியிருந்தது. அரணான நகரமாகிய எரிகோ அந்த வழியில் இருந்தது. ஆனால் எரிகோ இஸ்ரயேலுக்கு எதிராக அதன் வாயில்களை மூடிக்கொண்டது - விரோதமான ஒரு செயல், அவர்களுக்கு உணவை விற்க கூட விரும்பாதிருந்தார்கள்.

யோசுவாவுக்கு யேகொவா தேவன் ஒரு போர் திட்டத்தை வெளிப்படுத்தினார்.(யோசுவா 6) யோசுவா முதல் நாளில் அதிகாலையில் எழுந்து, இஸ்ரயேலின் சேனையோடும், உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்த ஆசாரியர்களோடும் நகரத்தை சுற்றி அணிவகுத்துச் சென்றார்கள். இதுபோல தொடர்ந்து ஆறுநாட்களும் நகரத்தை சுற்றி வந்தார்கள். பின்பு இஸ்ரயேலர்கள் ஏழாம் நாள் அதாவது கடைசி நாளில் எழுந்து, ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதிக்கொண்டு, நகரத்தைச் ஏழுமுறை சுற்றி நடந்தார்கள். கடைசி சுற்றின் முடிவில், எக்காளத்தின் ஒரு நீண்ட தொனி கேட்கையில், எரிகோவின் மதில்கள் அவர்களுக்கு முன் விழுந்தது.

எரிகோ மதில் 15-20 அடி உயரமும், வெளிப்புறமாக அதை சுற்றி தண்ணீர் நிற்பதற்கான ஒரு குளம் தோண்டப்பட்டிருந்தது என்று ஜான் கார்ஸ்ட்டாங்கு, காத்லீன் கென்யான் மற்றும் பிற தொல்பொருளாளர்கள் கூறுகிறார்கள். அந்த சுவர் வெளிப்புறமாக விழுந்தது. ஒரு பூமியதிர்ச்சி, அந்த மதிலை அந்த அகளிக்குள் விழச்செய்திருக்கலாம். இஸ்ரயேலர்கள் நகருக்குள் செல்ல சுவருக்கும் அகழிக்கும் பதிலாக, தற்போது உருளைக்கல் பாதையிருந்தது. ஜனங்கள் அவர் நேராக பட்டணத்திற்குள் நடந்து சென்று பட்டணத்தை கைப்பற்றும்படிக்கு, மதில் சுவர் மட்டமாக அகழியின் மேல் விழுந்தது. (யோசுவா 6:20)

துவக்கத்தில் ஒரு முந்தைய கால வெண்கல சுவரும், மத்தியில் இரண்டு மத்திய வெண்கல சுவர்களும் எரிகோவைச் சுற்றியிருந்தது. ஆனால் நகரத்தின் கீழ்நோக்கிய கிழக்குப் பகுதிக்கு தேவைப்படவில்லை. வெளிப்புறத்தில் உள்ள சுவர் வடகிழக்கு பக்கத்தைச் சுற்றி வளைந்திருந்தது. இவ்வாறு, சுவர் (ஒருமை) மட்டமாக விழுந்தபோது, அது வடகிழக்கு மூலையில், இஸ்ரயேலின் பாளையத்திற்கு எதிராக விழுந்திருக்க வேண்டும். எரிகோவின் தென்கிழக்கு மூலையில், பட்டணத்து வாயிலுக்கு எதிரில், ராகாபின் வீடு இருப்பதை குறிப்பிடும்படிக்கு வடமேற்கு மூலையில் உள்ள சுவர் மட்டுமே முழு உயரத்தில் சாயாமல் நின்றது.

வசந்த கால அறுவடை செய்யப்பட்டதை உறுதிப்படுத்தும்படி, தானிய கிடங்குகள் நிரம்பி காணப்பட்டது, சிறிது காலமே முற்றகையிட்டு, "பட்டணத்தை சுட்டெரித்தார்கள்" எல்லாம் கருகிபோயிற்று (யோசுவா 6:24)

## எரிகோவில் உள்ள யோசுவாவுக்கும் ஒரு தீர்க்கதரிசன முக்கியத்துவம் உண்டு

பவுல், 1தெசலோனிக்கேயர் 4:16 ம் வசனத்தில் யோசுவாவும் எரிகோவும் என்பதிலிருந்து கடைசி நாள் தீர்க்கதரிசனத்தை எடுத்துக்காட்டுகிறார். (அட்டவணையில் உள்ளதை பார்க்கவும்) அங்கு அவர் நான்கு நிகழ்வுகள் தலைகீழான வரிசையில் கொடுக்கப்படுகிறது. மேலும், ஏழு ஆசாரியர்கள், உடன்படிக்கை பெட்டிக்கு முன் ஏழு ஆட்டுகடா கொம்பின் எக்காளங்களை பிடித்து நிற்பவர்கள், வெளிப்படுத்தலில் உள்ள ஏழு எக்காளங்களுக்கு அடிப்படையாக உள்ளது. எரிகோவைச் சுற்றி வந்த ஏழு நாட்களும், சுவிசேஷ யுகத்தின் ஏழு காலங்களாக பிரிக்கப்படுகிறது. அந்த ஏழு ஆசாரியர்களும் ஏழு காலத்திற்குரிய (வெளி 8:11) ஏழு தூதர்கள் ஆவர். ஏழு காலங்களுக்கும் ஏழு தூதர்கள் கொடுக்கும் ஏழு செய்திகள், சுவிசேஷ யுகம் முழுவதையும் உள்ளடக்குகிறது. (வெளி 2:3) (ஒரு வேளை எக்காளம் ஊதும் ஏழு ஆசாரியர்கள் ஒன்றாக அணிவகுத்து வருவது, பல நூற்றாண்டுகள் இடைவெளி இருந்தாலும், இவர்கள் தொடர்ச்சியாக சொல்லும் செய்திகளை நிறைவே செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.) ஏழாம் நாள்

(கடைசி), எரிகோவைச் சுற்றிவரும் அந்த ஏழு சுற்றுகள், வெளிப்படுத்தல் 16ம் அதிகாரத்தில் உள்ள கடைசி ஏழு வாதைகளை அடையாளப்படுத்தும். இவ்வாறு, யோசுவா 6ம் அதிகாரம் வெளிப்படுத்துதல் புத்தகத்தில் மூன்றில் ஒரு பகுதியை புரிந்துக்கொள்வதற்கான ஒரு கட்டமைப்பை நமக்கு தருகிறது.

**மற்ற மூன்று நிழல்களும் பாடங்களும்:**

(1)யோசுவாவின் நாமத்திற்கான கிரேக்க பதம் "இயேசு" மற்றும் யோசுவா மிக அழகாக இயேசு கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறார். ரோம இராஜ்யத்தோடு அடையாளப்படுத்தும் பாபிலோன் எரிகோவிற்கு நிழலாக உள்ளது. (1பேதுரு 5:13ல் போல)

(2) 1கொரிந்தியர் 15:51,52ம் வசனங்களும் எரிகோவின் வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. “இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன் நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்”

(3) இஸ்ரயேலின் இரண்டு வேவுக்காரர்களின் ஜீவனை ராகாப் முன்பே காப்பாற்றினாள். ஆகவே அந்த நகரம் அழிக்கப்படுவதற்கு முன் அவளும், அவளுடைய குடும்பத்தார் அனைவரும் காக்கப்பட்டார்கள். முற்றுகைக்கு சில நாட்களுக்கு முன்பு தொற்று நோய் ஏற்பட்டதால், எரிகோவின் வீழ்ச்சிக்கு சற்றுமுன் துரிதமான சவ அடக்கங்கள் நடந்ததாக கூறப்படுகிறது. ஆகவே, அவர்களை தனிமைப்படுத்தும்படியாக,"அப்பொழுது வேவுகாரரான அந்த வாலிபர் உள்ளே போய், ராகாபையும் அவள் தகப்பனையும் அவள் தாயையும் சகோதரர்களையும் அவளுக்குள்ள யாவையும் அவள் குடும்பத்தார் அனைவரையும் வெளியே அழைத்துக் கொண்டு வந்து, அவர்களை இஸ்ரவேல் பாளயத்துக்குப் புறம்பே இருக்கும்படி பண்ணினார்கள்." (யோசுவா 6:23) (ஒருவேளை, லேவியராகமம் 13ம் அதிகாரத்தின் படி அவர்கள் செயல்பட்டிருக்க வேண்டும்.) பின்னர், ராகாபுக்கு பரிசாக, யூதா கோத்திரத்தானாகிய சல்மோனை திருமணம் முடித்தார். இதன் வம்சா வழியில் தாவீதும், பின்னர் இயேசு கிறிஸ்துவும் பிறந்தார். (மத்தேயு 1:5)

எரிகோ பிடிக்கப்பட்டு, சுட்டெரிக்கப்பட்ட பின், யோசுவா இஸ்ரயேலுக்கு முன் ஒரு ஆணையிட்டார். “இந்த எரிகோ பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்பட்டிருக்கக்கடவன் அவன் அதின் அஸ்திபாரத்தைப் போடுகிற போது தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிற போது தன் இளைய குமாரனையும் சாகக்கொடுக்கக்கடவன் என்று சாபம் கூறினான்.” (யோசுவா 6:26) சுமார் ஏழு நூற்றாண்டுகளுக்கு பின்னர், இஸ்ரயேலின் இராஜா ஆகாபின் நாட்களில், பெத்தேல் ஊரானாகிய ஈயேலினால் இந்த தீர்க்கதரிசனமும், சாபமும் நிறைவேறியது. (1இராஜாக்கள் 16:33-34)

நிழலை விட நிஜம் எப்போதும் பெரியது, ஆகவே எரிகோவின் அழிவுக்கும் அதை மறுபடியும் கட்டுப்படுவதற்கு இடையில் உள்ள காலப்பகுதி கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சியை அடையாளப்படுத்த வேண்டும். மற்றும் எரிகோவை மறுபடியும் கட்டி எழுப்பிய ஈயேல், கொஞ்ச காலத்தில் அல்லது சொல்லர்த்தமாக ஒரு குறுகிய காலத்தில் மீண்டும் இந்த உலகத்திற்குள் பிரவேசிக்கும் சாத்தானை அடையாளப்படுத்தக்கூடும். (வெளிப்படுத்தல்20:3)எரிகோவை மீண்டும்கட்டியெழுப்புவதில் சாத்தானின் "குறுகிய காலம்" குறிப்பிடத்தக்க காலமாக இருக்க வேண்டும் என்பதை நாம் காண்கிறோம். (இங்கே உள்ள உட்குறிப்பு - ஈயேலின் மூத்த குமாரன்- "கொஞ்சக் காலத்தின்" துவக்கத்தில் இரண்டாம் மரணத்திற்குள் செல்பவர்களையும், அதன் முடிவில் மீதியுள்ளவர்கள் (இரண்டாம் மரணத்திற்கு செல்பவர்கள்)-இளைய குமாரனையும் அடையாளப்படுத்துகிறது. ஏசாயா 65:20ல் காணப்பட்டாலும், இது சிவந்த சமுத்திரத்திற்கு பாரோனின் தேரோட்டிகளிடமும் அல்லது வெளிப்படுத்தல் 20:7-10 லும், அல்லது ஏசாயா 22:15-19 லும் காணப்படுவதில்லை என்பதால் மேலும் ஆய்வுகள் தேவைப்படுகிறது.)

**அர்மெகதோனின் அம்சங்கள்**

வெளிப்படுத்தலின் ஏழு தூதர்கள் / எக்காளத்துடன் நிற்கும் தூதர்கள், ஏழு எக்காளங்களுடன் நிற்கும் ஏழு ஆசாரியர்களுக்கு வெளிப்படையாக ஒத்திருக்கிறார்கள்/ எரிகோவில் அறிவிக்கப்பட்ட செய்திகள் (வேதாகமத்தில் இப்படிப்பட்ட வேறு எந்த குழுவும் காணப்படலில்லை) ஆகவே, எரிகோவை சுற்றி வந்த அந்த ஏழு நாட்களும், சுவிசேஷ யுகத்தின் இரண்டாயிர வருடங்களை சித்தரிக்கிறது. எரிகோவின் வீழ்ச்சி அர்மெகதோனை அடையாளப்படுத்துகிறது. பாபிலோன் யெகோவா தேவனுக்கு எதிராக தன்னை தான் பாதுகாத்துக்கொள்ள முடியாது என்பதும் உண்மை. தொடர்ந்து வரும் கீழ்ப்படியாமை, ஒடுக்குமுறை,

நியாயாதிபதிகளின் போரினால் ஏற்பட்ட விடுதலை, போன்றவைகள் அர்மெகதோனையும் குறித்த மற்றும் இறுதியாக கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சியில், மனித இனத்தின் விடுதலையையும் குறித்து ஒவ்வொரு பாடத்தினை தருகிறது.

**வரலாற்று பாடம்:**

மனிதன் வரலாற்றில் இருந்து கற்றுக் கொள்வதில்லை என்பதை வரலாற்றில் இருந்து மனிதன் கற்றுக்கொள்கிறான். இவ்வாறு, யோசுவாவும் அவருடைய காலத்தில் வாழ்ந்த மூப்பர்களும் மரித்த போது, இஸ்ரயேலர் விக்கிரகாராதனைக்கு திரும்பினார்கள் - பாகால்களையும் அஸ்த்திரோத்தையும் வழிப்பட்டார்கள். ஆகவே நியாயாதிபதிகள் தேவைப்பட்டார்கள்.

| எரிகோ நிகழ்வுகள் - (1 தெச 4:16) - ஓர் ஒப்பிடு | | |
|---|---|---|
| 1.அவர்கள் அதிகாலையில் எழுந்திருந்தார்கள் | - | (4) கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவதாக எழுந்திருப்பார்கள். |
| 2.ஏழாம் தரம் ஆசாரியர்கள் எக்காளம் ஊதுகையில் | - | (3) தேவ எக்காளத்தோடும். |
| 3.யோசுவா ஜனங்களை நோக்கி ஆர்ப்பரியுங்கள் | - | (2) பிரதான தூதர்கள் சத்ததோடும். |
| 4.ஜனங்கள் மகா ஆரவாரத்தோடு முழுங்கினார்கள் | - | (1) ஆரவாரத்தோடும். |

| Comparison of Jericho Events, with 1 Thessalonians 4:16 | |
|---|---|
| (1)They ***rose*** early at the dawning of the day | (4) and the dead in Christ shall ***rise first*** |
| (2) at the Seventh time, when the prisests blew the turmpets | (3) and with the ***trump*** of God. |
| (3) Joshua said unto the people, shout | (2) with the ***voice of the archangel.*** |
| (4) the people shouted with a great shout | (1) with a ***shout*** |

நான் ஒரு சொற்பொழிவைக் காதால் கேட்பதை விடவும்
கண்ணால் காணவே விழைகின்றேன்.
ஒருவர் நான் எப்படி நடக்க வேண்டும் என்று
வாயால் சொல்லிக் கொடுப்பதை விடவும்
என்னுடன் அவர் நடந்து வருவதையே விரும்புகிறேன்.

ஒத்னியேல் மற்றும் ஏகூத்

# இஸ்ரயேலின் வரலாற்றில் ஒரு புதிய தலைமுறை மற்றும் ஒரு புதிய வழிமுறை



"அக்காலத்தில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப் பின் எழும்பிற்று." (நியாயாதிபதிகள் 2:10)

**Thomas Gilbert**

இது மனித வரலாற்றில் மீண்டும் தொடர்ந்து வரக்கூடிய முறை என்னவெனில், ஒரு புதிய தலைமுறை, முன்னிருந்த தலைமுறை அனுபவித்த அதிர்ச்சிகரமான சம்பவங்களை அனுபவிக்காமல், அதன் விளைவாக அந்த நிகழ்வுகளிலிருந்து பெறப்பட வேண்டிய ஆழமான படிப்பினைகளையும், மதிப்புகளையும் கற்றுக் கொள்ளாததினால், இது சமுதாயத்தையும், மனித நிகழ்வுகளையும் முரண்பாடாக தோன்றுகிற வழியில் திசைத்திருப்பிவிடலாம். வாழ்க்கையில் அதிர்ச்சியூட்டும் இந்த நிகழ்வுகளின் வழியாக அந்த மதிப்புகளும், படிப்பினைகளின் ஆழங்களும், உணர்வுப்பூர்வமாக அமைக்கப்படுகிறது. அந்த நிகழ்வுகளின் போது உண்மையில் அங்கு இல்லாதிருந்தும், அவைகளைப் பற்றி கேட்டு அல்லது வாசித்தவர்கள், அந்த பாடங்கள் மற்றும் மதிப்புகளைப் பற்றி அதே ஆழமான உணர்வுகளை பெற முடியாது.

### ஒரு தலைமுறையின் மாற்றம்

யோசுவா மற்றும் அவருடன் வாழ்ந்த சமகால மூப்பர்கள் அனைவரும் மரித்துபோன பின், பிதாவாகிய யெகோவா தேவன் ஜனங்களுக்கு செய்த அனைத்திற்காகவும், அவருக்கு கடன்பட்டிருப்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். இதன் விளைவாக தேவனுடைய நியாயப்பிரமாணம் மற்றும் உடன்படிக்கையிலிருந்தும் விலகினார்கள். இதினிமித்தமாக, மற்ற ஜனங்களால் ஒடுக்கப்பட்டு, துன்பகரமான காலம் தொடர்ந்தது. "அக்காலத்தில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து, தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின அவர்களுடைய தேவனாகிய கர்த்தரை விட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போய், அவர்களைப் பணிந்துகொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள். அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமுண்டவராகி, அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார். கர்த்தர் சொல்லியபடியும், கர்த்தர் அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியும், அவர்கள் புறப்பட்டுப் போகிற இடமெல்லாம் கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருந்தது; மிகவும் நெருக்கப்பட்டார்கள்."(நியாயாதிபதிகள் 2:10-15)

### தேவன் விடுவிப்பாளர்களை வழங்குகிறார்

ஒவ்வொரு முறையும், துன்பம் மிக அதிகமாக பெருகியது. தங்களை ஒடுக்குகிறவர்களிடமிருந்து, விடுவிக்கும்படி, இஸ்ரயேலர்கள் தேவனை நினைத்து அழுவார்கள். ஒவ்வொரு முறையும் யெகோவா தேவன் "நியாயாதிபதி" என்று அழைக்கப்படும், ஒரு இரட்சகரை எழுப்புவார். ஆகையால், அவர்களுடைய வரலாற்றின் இந்த காலப் பகுதிக்குறிய புத்தகத்திற்கு "நியாயாதிபதிகள்" என்ற பெயர் வழங்கப்பட்டது. "கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள். அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல், அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய், அவைகளைப் பணிந்து கொண்டார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த

வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போனார்கள். கர்த்தர் அவர்களுக்கு நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணுகிற போது, கர்த்தர் நியாயாதிபதியோடே கூட இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிளெல்லாம் அவர்கள் சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்து வருவார்; அவர்கள் தங்களை இறுகப்பிடித்து ஒடுக்குகிறவர்களினிமித்தம் தவிக்கிறதினாலே, கர்த்தர் மனஸ்தாபப்படுவார். நியாயாதிபதி மரணமடைந்த உடனே, அவர்கள் திரும்பி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவும் சேவிக்கவும் பணிந்து கொள்ளவும், தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் கேடாய் நடந்து கிர்த்தியங்களையும் தங்கள் முரட்டாட்டமான வழியையும் விடாதிருப்பார்கள்." (நியாயாதிபதிகள் 2:16-19)

ஒழுக்கமற்ற நடத்தை, அந்நிய ஜனங்களினால் அடக்குமுறை, தங்களுடைய துயரத்தில் தேவனை நோக்கி முறையிடுதல் போன்ற இந்த சுற்றுக்களும் மற்றும் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும் ஒரு காலம், இவ்வனைத்தும் நியாயாதிபதிகளின் காலத்தில் மட்டுமல்ல, இராஜாக்களின் காலத்தில் மட்டுமல்ல, தற்போதைய காலத்திலும், உலகம் முழுவதும் சிதறிப்போயிருக்கும் நிலையிலும் அவர்களிடம் சிறிதளவிற்கு காணப்படுகிறது. பொதுவாக, இஸ்ரயேலின் இந்த அனுபவங்கள், சுவிசேஷயுகத்தில் உள்ள போராட்டங்கள், பின்னேற்றங்கள், பகுதியான வெற்றிகள் மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலின் ஆசீர்வாதங்களை சித்தரிக்கிறது. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் இஸ்ரயேலர்கள் வசித்து வந்தனர். யோசுவா கோத்திரங்களுக்கு தேசத்தை பங்கிட்டு கொடுத்தார். ஆனால், வாக்களிக்கப்பட்ட தேசத்தை சுதந்தரித்த போது, இஸ்ரயேலர் எல்லா ஜனங்களையும் வெளியேற்றவில்லை. கானானியர், ஏத்தியர், எமோரியர், பெர்சியர், ஏவியர், எபூசியர் ஆகியோர் இஸ்ரயேலர் மத்தியில் வசித்து வந்தனர். இந்த ஜனங்களுடன் இஸ்ரயேலர்கள் திருமணம் செய்துக்கொண்டு, அவர்களின் பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்தி, அவர்களின் தெய்வங்களை வணங்க ஆரம்பித்தார்கள்.

இது தேவனை வெறுப்படையச் செய்தது. ஆகவே, இஸ்ரயேலர் தங்கள் துன்பத்தில், கர்த்தரை நோக்கிக் கூப்பிடும் வரையில், இஸ்ரயேலின் வடபுறத்திலும் கிழக்கிலும், அராம் நாகாயீம் அல்லது சீரியா - மெசோப்பொத்தாமியாவின் இராஜாவாகிய குஷான் - ரிஷாதாயீமின் அல்லது கூஷான், எட்டு வருடங்கள் இஸ்ரயேலை ஒடுக்க தேவன் அனுமதித்தார்.

**ஒத்னியேல்**

"இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும்படி காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்னியேல் என்னும் ஒரு ரட்சகனை அவர்களுக்கு எழும்பப் பண்ணினார்." (நியாயாதிபதிகள் 3:9)

ஒத்னியேல் என்ற பெயருக்கு "தேவனுடைய பெலன்" அல்லது "தேவனே என் பெலன்" என்று பொருள். இவர் ஒரு அனுபவமுள்ள போர்வீரர். தேசம் பங்கிட்டு கொடுக்கப்பட்ட போது, யூதா கோத்திரத்திற்கு கொடுக்கப்பட்ட தேசத்தின் எல்லையில் இருந்த பலமான கானானிய நகரத்தை கைப்பற்றி, சிறப்பாக வெற்றி கொண்டார். மோசே அனுப்பிய விசுவாசமுள்ள வேவுக்காரர்களில் ஒருவராகிய காலேபுக்கு ஹெப்ரோன் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள் கொடுக்கப்பட்டது.

"எப்புன்னேயின் குமாரனாகிய காலேபுக்கு, யோசுவா, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடி, ஏனாக்கின் தகப்பனாகிய அர்பாவின் பட்டணமான எபிரோனை, யூதா புத்திரரின் நடுவே, பங்காகக் கொடுத்தான். அங்கேயிருந்த சேசாய், அகீமான், தல்மாய் என்னும் ஏனாக்கின் மூன்று குமாரரையும் காலேப் துரத்திவிட்டு, அங்கேயிருந்து தெபீரின் குடிகளிடத்திற்குப் போனான்; முற்காலத்திலே தெபீரின் பேர் கீரியாத்செப்பேர். கீரியாத்செப்பேரைச் சங்காரம்பண்ணிப் பிடிக்கிறவனுக்கு, என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம் பண்ணிக் கொடுப்பேன் என்று காலேப் சொன்னான்." (யோசுவா 15:13-16)

ஒத்னியேல் காலேபின் மருமகனாக இருந்தார். அவருடைய உறவினரான அக்சாவை அவர் நன்கு அறிந்திருந்தார். ஒரு வேளை அவளது அழகும், உன்னதமான பண்புகளின் காரணமாக, அவளை தன்னுடைய மனைவியாக பெறுவதற்கான வாய்ப்பினால் ஒத்னியேல் மிகுவும் உந்தப்பட்டிருக்க வேண்டும். உடனடியாக அவர் நகரத்தைத் தாக்க மனிதர்களுக்கு கட்டளையிட்டார். யுத்தம் வெற்றி அடைந்தது. அவருடைய மணவாட்டியை உரிமை கோரினார். அவர்களுக்கு திருமணம் நடைபெற்றது. "அப்பொழுது காலேபின் சகோதரனாகிய கேனாசின் மகன்

ஒத்னியேல் அதைப் பிடித்தான்; ஆகையால் தன் குமாரத்தி அக்சாளை அவனுக்கு விவாகம் பண்ணிக் கொடுத்தான்." (யோசுவா 15:17)

இதே காரியத்தை நியாயாதிபதிகள் 1:9-13ம் வசுங்களிலும் காணலாம். அக்சாள் தன் கணவனுடன் ஒரு சராசரி வாழ்க்கையை நிறை நிறுத்திக்கொள்ள எதிர்ப்பார்த்தாள். ஹெப்ரோனுக்கு தெற்கே உள்ள நெகோ பாலைவனத்தின் நிலத்தை ஒதுக்கி தருமாறு ஒத்னியேலிடம் அவள் வலியுறுத்தினாள். வெளிப்படையாக, அவர்களுக்கு காலேப் தந்த நிலத்தில் எந்த நீர் வளமும் இல்லாதிருந்தது. எனவே, நீர் பாய்ச்சலான நிலங்கள் வேண்டும் என்று நேரடியாக அக்சாள் தன் தந்தையிடம் முறையிட்டாள். "அவள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல்வெளியைக் கேட்க வேண்டும் என்று அவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கழுதையின் மேலிருந்து இறங்கினாள். காலேப் அவளை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்றான். அப்பொழுது அவள்: எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்; வறட்சியான நிலத்தை எனக்குத் தந்தீர்; நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்; அப்பொழுது காலேப்: மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தான்." (நியாயாதிபதிகள் 1:14.15)

எட்டு வருடங்கள் அந்நிய ஜாதிகளின் ஆக்கிரமிப்புக்கு பிறகு, இஸ்ரயேலர் கூக்குரலிட்டனர். ஓய்வு பெற்ற போர்வீரனாக இருந்த ஒத்னியேலை தேவன் அழைத்தார். "அவன்மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால், அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, யுத்தம் பண்ணப் புறப்பட்டான். கர்த்தர் மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார்; ஆகையால் அவன் கை கூசான்ரீஷதாயீமின்மேல் பலங்கொண்டது. தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது. கேனாசின் குமாரனாகிய ஒத்னியேல் மரண மடைந்தான்." (நியாயாதிபதிகள் 3:10-11)

(ஒரு சுவாரஸ்யமான பக்க குறிப்பு என்னவெனில், ஒத்னியேலின் வாழ்க்கை, அப்போஸ்தலர் 13ல் பதிவு செய்யப்பட்டுள்ள அப்போஸ்தலனாகிய பவுலுடைய சொற்பொழிவுகளில் வரும் நியாயாதிபதிகள் காலம் பற்றின சரியான புரிதலை நமக்கு அளிக்க உதவுகிறது, சில கையெழுத்து பிரதிகளும் மொழிப்பெயர்ப்புகளும் நிகழ்வுகளின் வரிசை முறையை நமக்கு இவ்வாறாக கூறுகின்றன: (1) தேசம் பகுக்கப்படுதல் (2) 450 ஆண்டுகாலம் (3) நியாயாதிபதிகள் (RV மற்றும் ASV பத்தியை சரியாக மொழிப்பெயர்த்து உள்ளன.) ஆனாலும், 450 ஆண்டுகளுக்கு ஒரு இடைக்காலம் இருந்தாலும் கூட, ஒத்னியேல் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை கைப்பற்றுவதில் பங்குப்பெறும் ஒரு வீரராகவும் இஸ்ரயேல் முதல் நீதிபதியாகவும் இருந்திருப்பார் என்று எண்ணுவதில் நியாயமில்லை. தேசத்தில் உரிமை பெறுவதும் நியாயாதிபதிகள் காலம் இரண்டும் சேர்ந்து 450 ஆண்டுகள் எனும் போது, பவுலின் அறிக்கை அர்த்தமுள்ளதாக இருக்கிறது.) ஒத்னியேல் இஸ்ரயேலை 40 வருடங்கள் "நியாயம் விசாரித்தார்" அல்லது ஆட்சிச் செய்தார். சுற்றியுள்ள தேசங்கள் இஸ்ரயேலை உபத்திரவப்படுத்தவில்லை. சமாதானமான இந்த நேரத்தில் அக்சாளும், ஒத்னியேலும் ஒரு குடும்பத்தை உருவாக்கினார்கள். அவர்களுக்கு அதாத், மியோனோத்தாய் என்ற இரண்டு குமாரர்களும், ஓர்பா என்ற ஒரு பேரபிள்ளையும் பிறந்தார்கள். ஒத்னியேல் மற்றும் அக்சாள் ஆகியோர் முன் வைத்த ஒரு விசுவசமுள்ள மாதிரியின் காரணத்தினால், இஸ்ரயேல் தேசத்தார் தேவனுடைய உடன்படிக்கைக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் உண்மையுள்ளவர்களாய் இருந்ததை நாம் கற்பனை செய்யலாம்.

**சுழற்சி மீண்டும் துவங்குகிறது:**

பெரும்பாலும் ஒரு பெரிய இராணுவத் தலைவர் ஒரு தேசத்தின் மீது நீடிய செல்வாக்கை பெற்றிருந்தால், அவர் உயிருடன் இருக்கும் வரை அந்த தலைவரின் கொள்கைகளினால் ஜனங்கள் தொடர்ந்து ஊக்கமளிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் அந்த காட்சியிலிருந்து கடந்துவிட்டால், அந்தக் கொள்கைகளின் செல்வாக்கு பலவீனமாகிவிடும். ஒத்னியேல் மரித்தவுடன், ஜனங்கள் மீண்டும யேகொவா தேவனின் வழிகளிலிருந்து விலகி, தீமைச் செய்ய துவங்கினார்கள்.

"இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்; அவர்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவை இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பலக்கப்பண்ணினார். அவன் அம்மோன் புத்திரரையும் அமலேக்கியரையும் கூட்டிக்கொண்டு வந்து, இஸ்ரவேலை முறிய அடித்தான்; பேரீச்ச மரங்களின் பட்டணத்தையும்

பிடித்தான். இப்படியே இஸ்ரவேல் புத்திரர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவைப் பதினெட்டு வருஷம் சேவித்தார்கள்." (நியாயாதிபதிகள் 3:12-14) எல்ளோன் வடக்கே தனது அண்டை நாடுகளுடன் தன்னை இணைத்துக் கொண்டார். மற்றும் தெற்கில் அம்மோனியரும், மேற்கில் அமலேக்கியர்களும், வெற்றிகரமாக இஸ்ரயேலை ஆக்கிரமித்து, அதை ஒரு அடிமட்ட தேசமாக்கினர். எல்ளோன் எரிகோவை (மனை மரங்களின் நகரம்) கைப்பற்றினார் மற்றும் வெளிப்படையாக அதை மறுபடியும் கட்டியெழுப்பி அல்லது ஒரு பகுதியை கட்டியெழுப்பினார் என்பதையும், இந்த சம்பவங்கள் நிகழ்ந்த காலத்தில், அவர் தங்கியிருந்த கோடைகால அரண்மனையையும் அதற்குள் உள்ளடக்கப் பட்டிருப்பதை வேதாகம பதிவுகள் காட்டுகிறது. எல்ளோன் இஸ்ரயேலிடமிருந்து வருடாந்திர கப்பம் வசூலித்தார். இந்த அடிமைத்தனத்தின் 18 ஆண்டுகளுக்குபின், இஸ்ரயேல் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்களை விடுவிப்பதற்கு மற்றொரு நியாயாதிபதியை தேவன் எழுப்பினார்.

**ஏகூத்:**

"இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் அவர்களுக்குப் பென்யமீன் கோத்திரத்தானாகிய கேராவின் மகன் ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப்பண்ணினார்; அவன் இடதுகைப் பழக்கமுள்ளவனாயிருந்தான்; அவன் கையிலே இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குக் காணிக்கை அனுப்பினார்கள்." (நியாயாதிபதிகள் 3:15) எகூத் இடது கை பழக்கமுள்ளவராக இருந்தது ஒரு வித்தியாசமான காரியமாக தெரிகிறது. பென்யமீன் "வலது கையின் மகன்" என்பதால், பென்யமீன் ஜனங்களிடையே இடது கைபழக்கம் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இஸ்ரயேல் மீது எக்ளோனின் ஆட்சியை, ஏகூத் தூக்கி எறிவதற்கான முயற்சியில் இந்த விவரம் முக்கியமானதாக இருக்கும். இராஜாவாகிய எக்ளோனை திடுக்கிடச்செய்து, கொன்று போடுவதற்கு ஏகூத் ஒரு திட்டம் வகுத்தார். இராஜாவாகிய எக்ளோனிடம் அணுகவும், அவருடைய நம்பிக்கையை பெறவும், வழக்கமாக செலுத்தும் வரிகளை செலுத்தும்படிக்கு எபிரெயர்களை ஏகூத் வழி நடத்தினார். ஏகூத் 18 அங்குல நீளமுள்ள ஒரு பட்டயத்தைத் தயாரித்து தன் வலதுபுறத் தொடையின் துணியின்கீழ் கட்டிவைத்திருந்தார். அவர் இராஜாவுக்கு அந்த நன்கொடையை வழங்கினார். அவரை "மிகவும் ஒரு கொழுத்த மனிதன்" என்று வேதாகமம் விவரிக்கிறது. அந்த நன்கொடையை கொடுத்தபின், அவர்கள் அவ்விடம் விட்டு, தங்களுடைய வீடுகளுக்கு திரும்பினார்கள். ஆயினும், அவர்கள் கில்காலுக்கு அருகில், சில சிலைகளை கடந்து சென்ற போது, (எக்ளோனின் உருவமாக இருக்கலாம்) ஏகூத், மற்ற மனுஷரை அனுப்பிவிட்டு பின், தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற திரும்பினார். எக்ளோன் அவரது கோடைகால அரண்மனையின் மாடியில் அமர்ந்திருந்தார். இராஜாவுக்கு ஒரு தனிப்பட்ட செய்தி இருப்பதாலும், அவரை உடனடியாக பார்க்க வேண்டும் என்றும், ஏகூத் இராஜாவின் அலுவலர்களிடம் துரிதப்படுத்தினார். தேவனிடமிருந்து ஒரு செய்தியை ஏகூத் கொண்டுவந்ததாக இராஜாவிடம் கூறினார். அதனால், எக்ளோன் தன்னுடைய ஊழியர்கள் அனைவரையும் அறையைவிட்டு வெளியேறும்படிக் கேட்டுக்கொண்டார். ஏகூத் இராஜாவை நெருங்கினார், இராஜா தன் இருக்கையிலிருந்து எழுந்தார். ஏகூத் தனது இடது கரத்தோடு இராஜாவின் சரீரத்தை கிட்டி சேர்ந்தபோது, வீரர்கள் தங்கள் வலது கையில் பட்டயத்தை எடுப்பதினால் எக்ளோன் எந்த ஆபத்தையும் சந்தேகிக்கவில்லை, (பதிப்பாசிரியரின் குறிப்பு அரேபிய சமூகங்களில் இன்றும் கூட, கையைப் பயன்படுத்துவது அவமானமாகக் கருதப்படுகிறது.)

"உடனே ஏகூத் தன் இடது கையை நீட்டி, தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டியிருந்த கத்தியை உருவி, அதை அவன் வயிற்றிற்குள் பாய்ச்சினான். அலகோடேகூடக் கைப்பிடியும் உள்ளே புகுந்தது. அவனுடைய வயிற்றிற்குள்போன கத்தியை இவன் இழுக்கக்கூடாதபடிக்கு நிணம் அலகைச் சுற்றிக கொண்டடைத்தது. அது பின் புறத்திலே புறப்பட்டது. ஏகூத் புறப்பட்டு, அறைவீட்டின் கதவைச் சாத்திப் பூட்டிப் போட்டு, கொலுக்கூடத்தின் வழியாய்ப் போய்விட்டான். அவன் போன பின்பு ஊழியக்காரார் வந்து பார்த்தார்கள்; இதோ, அறை வீட்டின் கதவு பூட்டியிருந்தது; ஆகையால் அவர் அந்தக் குளிர்ச்சியான அறையிலே மலஜலாதிக்கிருக்கிறாராக்கும் என்றார்கள். அவர்கள் சலித்துப்போகுமட்டும் காத்திருந்தார்கள்; அவன் அறை வீட்டின் கதவைத் திறக்கவில்லை; ஆகையால் ஒரு திறவுகோலை எடுத்துத் திறந்தார்கள்; இதோ, அவர்கள் ஆண்டவன் தரையிலே செத்துக்கிடந்தான்." (நியாயாதிபதிகள் 3:21-25) ஏகூத் எப்பிராயீம் மலைத்தேசத்திற்குத் தப்பி ஓடி, இஸ்ரயேலின் ஒரு சேனையை திரட்டிக்கொண்டு, அங்கே எக்காளம் ஊதினார். "என்னைப் பின்தொடர்ந்து

வாருங்கள்; கர்த்தர் உங்கள் பகைஞராகிய மோவாபியரை உங்கள் கைகளில் ஒப்புக் கொடுத்தார் என்றான். அவர்கள் அவனைப் பின்தொடர்ந்து போய், மோவாபுக்கு எதிரான யோர்தான் துறைகளைப் பிடித்து, ஒருவனையும் கடந்து போகவொட்டாமல்," (நியாயாதிபதிகள்3:28) என்று அவர் கூறினார். தங்களுடைய தாய் தேசம் திரும்பும்படிக்கு, மோவாபியர்களை முறியடித்து, அவர்கள் யோர்தான் துறைகளைக் கைப்பற்றினார்கள். அவர்களின் இராஜா முன்னதாகவே மரித்து போனதால், சந்தேகத்திற்கு இடமின்றி, அவர்கள் சோர்வடைந்திருக்க வேண்டும். பத்தாயிரம் மோவாபியர்களுக்கு மேல் இஸ்ரயேலர்கள் கொன்றுபோட்டார்கள். ஏகூதின் வெற்றி மீண்டும் இஸ்ரயேலுக்கு விடுதலை அளித்தது. சுற்றியுள்ள எதிரிகளிடமிருந்து எவ்வித தொந்தரவும் இல்லாமல் 80 ஆண்டுகள் தேசம் மகிழ்ச்சியாக இருந்தது. தேவனுடைய ஜனங்கள் உடன்படிக்கைக்கும் தங்கள் மூதாதையருக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து, இப்படிச் செய்வதினால் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களில் மகிழ்ச்சி அடைந்ததற்கு, சந்தேகத்திற்கு இடமின்றி ஏகூவின் விசுவாசமே அவர்களை ஊக்குவித்திருக்க வேண்டும்.

**நமக்குண்டான ஒரு பாடம்**

இந்த விசுவாசமுள்ள தலைவர்கள், மற்றவர்களை தங்களுடைய மாதிரியை பின்பற்ற தூண்டியவர்கள் நமக்கும் நல்ல முன்மாதிரிகளாக இருக்கிறார்கள். நம் அன்றாட வாழ்வில் பலம் அல்லது வலிமை இழந்ததாக நாம் உணர்ந்தால், அல்லது ஒரு குறிப்பட்ட அனுபவத்தால் நொறுக்கப்பட்டால், சவால்களை எதிர் நோக்கினாலும், தொடர்ந்து தேவன் மேல் விசுவாசமுள்ளவர்களை வேதாகமம் தேர்வு செய்து வைத்திருக்கிறது. அப்படிப்பட்டவர்களின் ஊக்கமளிக்கும் வாழ்க்கைகளிலிருந்து பெலத்தை பெற்றுக் கொள்வதற்கு ஆலோசிக்கலாம். "ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிற வரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்.(எபிரெயர் 12:1-3)

இறுதியாக, விசுவாசமுள்ள மாதிரிகளாக நம்மை கவனித்துக் கொண்டிருப்பவர்களை நாம் கவனித்து, நாம் செய்யக்கூடிய எல்லாவற்றிலும் தேவன் பிரியப்படுத்தும், ஒரு நிலைப்பாட்டில் நாம் வாழ்வதற்கு நம்மால் முடிந்தவரை சிறந்த வாழ்க்கையை வாழ்வோமாக

கண்ணானது காதை விடவும் நல்ல மாணவனல்லவா?
காதை விடவும் கண் மிகவும் சக்தி வாய்ந்த அவயம் தானே.
அருமையாய் கூறப்படும் அறிவுரையை விடவும்
எடுத்துக்காட்டாய் வாழ்ந்து காண்பிப்பதே
தெளிவானதாய் இருக்குமன்றோ?

உயர் தொழில்நுட்பம் தேவனை தோற்கடிக்க முடியாது

# தெபோராள் மற்றும் பாரக்கிற்கு எதிராக யாபீன் மற்றும் சிசெரா



"வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று; நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம் பண்ணின." (நியாயாதிபதிகள் 5:20)

**Michael Costelli**

தெபோராள், பாராக், யாபீன், சிசெரா ஆகியோரின் பதிவுகள் நியாயாதிபதிகள் நான்காம் அதிகாரத்தில் காணப்படுகிறது. இது இஸ்ரயேலின் முன்னாள் நியாயாதிபதியாகிய ஏகூத்தின் மரணத்தோடு துவங்குகிறது"ஏகூத் மரணமடைந்த பின்பு இஸ்ரவேல் புத்திரர் திருப்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தார்கள்." (நியாயாதிபதிகள் 4:1) எகிப்தில் இவர்கள் விடுதலைப் பெற்றதிலிருந்து, இந்த சம்பவங்கள் நடைபெறும் காலம் வரையில் இந்த அக்கிரமமான சூழ்நிலை மீண்டும் மீண்டும் தோன்றியது. "அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள்."(நியாயாதிபதிகள்4:4)

அவள் ஞானமுள்ளவளும், நியாயந்தீர்க்கும் உயர் பண்புள்ளவளுமாக இருந்ததால், இந்த குணங்கள் நிமித்தம் இஸ்ரயேலர்கள் அவளை தேர்வுசெய்தார்கள். "இஸ்ரயேலில் ஒரு தாயாக நான் எழும்பும் வரையிலும்" என்று தெபோராள் தன்னையே விவரித்துக்கொள்கிறாள். (நியாயாதிபதிகள்5:7) தெபோராள் குறிப்பிட்ட குழந்தைகளின் தாயாக இருந்ததற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. ஆகவே ஜார்ஜ் வாஷிங்டனை அவருடைய நாட்டிற்கு தந்தையாகக் நாம் குறிப்பிடுவது போல,"இஸ்ரயேலில் தாய்" என்ற வார்த்தை அவள் இஸ்ரயேலின் மேல் பெற்றிருந்த அதிகாரத்தையும் , நியாயாதிபதி என்ற நிலையையும் குறிப்பிடலாம்.

இஸ்ரயேல் வனாந்தரத்தை விட்டு கானானுக்குள் பிரவேசித்தது முதல், தலைமையின் தேவை பெரிதாக இருந்தது. அது யோசுவாவிடம் காணப்பட்டது. அவர் காலேபுடன் (எண்ணாகமம் 14:6) சேர்ந்து, இஸ்ரயேல் தேசத்திற்குள் நுழைவதற்கு முன் கானானை வேவு பார்த்து வந்தார். தேவன் மேல் யோசுவா கொண்ட விசுவாசத்தினாலும், இஸ்ரயேலை பாதுக்காக்கும் போர் திறம் வாய்ந்த அவருடைய ஞானத்தினாலும், கானானை கைப்பற்றுவதற்கு, அவர் இஸ்ரயேலை வழிநடத்தினார். 110 வயதில் அவர் மரித்தார். இது சுமார் கி.மு1406ல் நடந்திருக்கலாம்.

நியாயாதிபதிகளின் புத்தகம் யோசுவாவின் மரணத்தோடு துவங்குகிறது. அதற்கு பின் பல ஆண்டுகளாக வரிசையாக நியாயம் விசாரித்த நியாயாதிபதிகளைப் பற்றி விவரிக்கப்படுகிறது. இஸ்ரயேலின் ஆவிக்குரிய மற்றும் தற்காலிக விவகாரங்களில் நியாயாதிபதிகள் அவர்களுக்கு ஞானத்தையும் வழிக்காட்டுதலையும் கொடுத்தார்கள். யோசுவாவுக்கு முன், இஸ்ரயேலுக்கு தேவனுடைய கட்டளைகள் அதிகபட்சமாக, நேரடியாக வெளிப்படுத்தப்பட்டது. அவர்களுடைய மத்தியஸ்தராகிய மோசேயின் மூலமாகவும், ஊரீம் மற்றும் தும்மிம் பயன்படுத்திய பிரதான ஆசாரியர் வழியாகவும் வெளிப்பட்டது. சரித்திராசிரியர் ஜோசபஸின் கருத்தின்படி, நாம் காணக்கூடிய காலத்தில் பினியாஸ் பிரதான ஆசிரியராக இருந்தார்.

**தெபோராளின் தீர்க்கதரிசனம் மற்றும் பிரகடனம்:**

"ஏகூத் மரணமடைந்த பின்பு இஸ்ரவேல் புத்திரர் திருப்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தார்கள்." (நியாயாதிபதிகள் 4:1) எஸ்ட்ராலியோன் சமவெளி என்று அறியப்பட்ட செழிப்பான எஸ்ரயேல் பள்ளத்தாக்கின் மீது கானானிய கட்டுபாட்டை இஸ்ரயேலர்களால் முறிக்க முடியவில்லை. இது நாடு முழுவதும் மேற்கிலிருந்து

கிழக்கு வரைக்கும் நீண்டதாகவும், கர்மேல் வீச்சுக்கு பின்னாலிருந்து கீழே கலிலேயா கடல் மற்றும் யோர்தான் நதி துறைகள் வரைக்கும் விரிவானதுமாக இருந்தது. யாபீன் இராணுவ வாகனங்கள், 900 இரும்பு இரதங்கள், இஸ்ரயேலரின் இருதயத்தை பயத்தால் உறையச் செய்தது. அவன் இஸ்ரயேல் புத்திரரை இருபது வருடங்களாக கடுமையாக ஒடுக்கினான், ஆகவே அவர்களால் யாபீனை கீழ்படித்த முடியவில்லை. (நியாயாதிபதிகள் 4:3)

யாபீனை மேற்கொள்ள உதவும்படிக்கு இஸ்ரயேல் ஜனங்கள் தெபோராளை அணுகினார்கள். தேவனிடமிருந்து கட்டளைப் பெற்ற தெபோராள், உடனடியாக எதிரிகளை எதிர்த்து தாக்கும்படிக்கு அவர்களை ஊக்குவித்தார். எதிராளியாகிய யாபீன் படையை தளபதியாகிய சீசேரா நடத்திச் சென்றான். இவைகளை நாம் நியாயாதிபதிகள் 4:4-7 ம் வசனங்களில் வாசிக்கலாம்."அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள். அவள் எப்பிராயீம் மலைத்தேசமான ராமாவுக்கும் பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற தெபொராளின் பேரீச்சமரத்தின் கீழே குடியிருந்தாள்; அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாயவிசாரணைக்குப் போவார்கள்.அவள் நப்தலியிலுள்ள கேதேசிலிருக்கிற அபினோகாமின் குமாரன் பாராக்கை வரவழைத்து: நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய் என்றும், நான் யாபீனின் சேனாதிபதியாகிய சிசெராவையும், அவன் ரதங்களையும், அவன் சேனையையும், கீசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்திற்கு வர இழுத்து, அவனை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா என்றாள்." "இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட வில்லையா?" என்ற தெபோராளின் வெளிப்பாடு, விசாரனையான ஒரு கேள்வியாக இராமல் உறுதியான ஒரு தகவலை, பாராக்கின் புரிந்துக்கொள்ளுதலுக்குஅவள் குறிப்பிடுவதை காணலாம்.

பாராக்கிற்கு ஒரு இராணுவ தேடலை வழி நடத்துவது மட்டுமல்லாமல், அவர் எடுக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கு தேவன் அவருக்கு உதவும் முறையையும் விளக்கினாள். அவன் உடனடியாக நடவடிக்கை எடுக்க தூண்டும்படிக்கு தெபோராள் பட்டாளங்களின் எண்ணிக்கையிலிருந்து போரின் முடிவு வரையும்,வெற்றிப் பெறுவதற்கான ஒரு காட்சியை அளித்தாள். இருப்பினும், பாராக் தன்னுடைய நடவடிக்கையில் தெபோராள் கலந்துக்கொள்ளும்படிக்கு ஒரு கோரிக்கையுடன் தன்னுடைய விருப்பத்தை தகுதிப்படுத்த அவர் விரும்பியதால்அவருடைய விடை மந்தமாகவே இருந்தது. "அதற்குப் பாராக்: நீ என்னோடேகூட வந்தால் போவேன்; என்னோடேகூட வராவிட்டால், நான் போகமாட்டேன் என்றான்.

அதற்கு அவள்: நான் உன்னோடே கூட நிச்சயமாய் வருவேன். ஆனாலும் நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது. கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று சொல்லி, தெபொராள் எழும்பி, பாராக்கோடேகூடக் கேதேசுக்குப் போனாள்." (நியாயாதிபதிகள் 4:8.9) பாராக்கின் பதிலின் விளைவாக, கர்த்தருடைய சேனையின் வெற்றி பாராக்குக்கு அல்ல ஒரு பெண்ணுக்கே போய் சேரும் என்று கூறி தெபோராள் அவரை இகழ்ந்தாள். சீஷோன் நதி அண்டையில் சிசெரா அவரது கைகளில் ஒப்படைக்கப்படுவார் என்று பாராக்குக்கு தெபோராள் உறுதியளித்தாள். ஆனால் ஐந்தாம் அதிகாரம் வரை வாசகருக்கு எந்த விதமான விவரமும் அளிக்கப்படவில்லை. அதில் தெபோராள் தன்னுடைய ஜெபத்தை பாடலாக கூறுகிறார். இந்த விவரங்களை நாம் நியாயாதிபதிகள் 5:19-22ம் வசனங்களில் காண்கிறோம்.

"ராஜாக்கள் வந்து யுத்தம் பண்ணினார்கள்; அப்பொழுது கானானியரின் ராஜாக்கள் மெகிதோவின் தண்ணீர் அருகான தானாக்கிலே யுத்தம் பண்ணினார்கள்; அவர்களுக்குத் திரவியக்கொள்ளை கிடைக்கவில்லை. வானத்திலிருந்து யுத்தம்

உண்டாயிற்று; நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம் பண்ணின. கீசோன் நதி, பூர்வ நதியாகிய கீசோன் நதியே, அவர்களை அடித்துக் கொண்டு போயிற்று; என் ஆத்துமாவே, நீ பலவான்களை மிதித்தாய். அப்பொழுது குதிரைகளின் குளம்புகள், பாய்ச்சலினாலே, பலவான்களின் பாய்ச்சலினாலேயே, பிளந்து போயின.

**மெகிதோ:**

மெகிதோ வடக்கு இஸ்ரயேலில் உள்ள ஒரு பழமையான நகரமாகும். பயன்படத்தக்க வகையில், இது மெசொப்பொத்தோமியாவுடன் எகிப்தை இணைக்கும் ஒரு பாதையில் அமைந்துள்ளது. போர் நடந்த ஸ்தலம் "தாபோர் மலையை" நோக்கி உள்ளதாக நாம் நியாயாதிபதிகள் 4:6ல் அறிந்துக்கொள்கிறோம். 1866 வரை மெகிதோவின் சமவெளியில் அடியில் தாபோர் மலை தனியாக உயர்ந்தது. இன்றைய தினம் மலையேற்றம் என்பது கத்தோலிக்க பசலிக்காவின் மறுமலர்ச்சியாகும். இது 20ஆம் நூற்றாண்டின் பழைய பைசண்டைன் சன்னதியின் சீரமைப்பாகும். பழைய ஏற்பாட்டில் மெகிதோ என்ற வார்த்தை 11 இடங்களில் குறிப்பிடப்படுகிறது. மேலும் பல போர்களுக்கு இடமாக இருந்தது. சிசெராவுடன் நடந்த போருக்கு முன் மெகிதோ போர் (15ஆம் நூற்றாண்டு கி.மு) பார்வோன் தட்மோஸ் III, யின் கீழ் இயங்கின எகிப்து படைகளுக்கும் இராஜாவாகிய காதேஷினால் வழிநடத்தப்பட்ட ஒரு பெரிய கானானிய கலகத்தனமான கூட்டணியின் அடிமட்ட மாநிலங்களுக்கு இடையில் யுத்தம் நடந்தது. இதுவே முதல் போர் என்று வரலாற்று அறிஞர்கள் பொதுவான நம்பக்கூடிய விவரங்கள் இருப்பதினால் ஏற்றுகொள்கிறார்கள். மேலும் மெகிதோ போரில் முதல் முறையாக வில்களின் பயன்பாடும், உடல் எண்ணிக்கையும் பதிவுச் செய்யப்பட்டுள்ளது.

வேதமாணவர்களும், கிறிஸ்துவுக்குள்ளாக புது சிருஷ்டிகளாகிய நாம், மெகிதோவின் இடத்திலுள்ள முக்கிய ஆர்வமானது, கடைசி கால தீர்க்கதரிசனத்தின் பற்றிய முக்கியத்துவமாகும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேலின் அனுபவங்கள், நாம் ஆண்டவரோடு நடக்கும்போது நம் அனுபவங்களை நிழலிட்டு காட்டக்கூடியதாக உள்ளது என்ற நாம் கற்பிக்கப்பட்டிருக்கிறோம். "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" என்று பவுல் 1கொரிந்தியர் 10:11 ஆம் வசனத்தில் கூறுகிறார். இவ்வாறு, நாம் பழைய ஏற்பாட்டிலும், சுவிசேஷ யுகத்தின் முடிவுக்கும் உள்ள ஒற்றுமைகளை நாம் காணவேண்டும். சகோதரர் ரசல் இந்த ஒற்றுமைகளைப் பற்றி 5604 ல் விளக்கம் கூறுகிறார். இஸ்ரயேலரின் விக்கிர காராதனையில் ஈடுபட்டு, தீமை செய்ததினால், தேவன் அவர்களோடு செய்த உடன்படிக்கையின் படி, அவர்களின் எதிராளிகளை அவர்கள் மேல் வெற்றிக்கொள்வதற்கு தேவன் அனுமதித்து, இப்படியாக அவர்களை தண்டித்தார். அவர்கள் பெரும் நெருக்கடியை சந்தித்தார்கள். அவர்களுடைய எதிரிகள் வலுவடைந்து, உயர்ந்தார்கள். கானானியரின் தளபதியான சிசேரா, வடக்கு பாலஸ்தீனாவில் உள்ள இஸ்ரயேலரைத் தாழ்த்தி, ஒரு பெரிய இராணுவத்துடன், வெற்றிகரமாக தெற்கில் வெற்றி பெற்றார். அவரது இராணுவத்தின் வல்லமை, அவருடைய 900 இரும்பு இரதங்களில் காண்பிக்கப்பட்டது.

"மெகிதோ பள்ளத்தாக்கிற்கு தெற்கே கிழக்குப் பகுதிக்கு வந்திருந்த சமயத்தில், தூதுவர்கள் அவரை அடைந்து, இஸ்ரயேல் ஜனங்களுடனான ஒரு தலைவரான பாராக், அவர் இல்லாதிருந்த ஒரு வாய்ப்பை பயன்படுத்தி, தெற்கே இஸ்ரயேலின் பத்தாயிரம் படைவீரர்களை நடத்துகிறார் என்று அறிவித்தார்கள். தெய்வீக வழி நடத்துதலின் கீழ் பாராக், தாபோர் மலையை தன்னுடைய இராணுவ தளமாக ஏற்படுத்தினார் - அதே இடத்தில் இயேசுவின் நாட்களிலும், "மறுரூப மலை" என்று அவருடைய சிஷர்களுக்கு அறியப்பட்டிருந்தது. அங்கு வரக்கூடிய மேசியாவின் இராஜ்யம் ஒரு தரிசனமாக அவருடைய சீஷர்களுக்கு காண்பிக்கப்பட்டது. இவ்வாறாக, எதிர்காலத்தின் தோற்றத்தின் மற்றொரு குறிப்பான அம்சத்தின் சித்திரத்தை நாம் பெற்றுள்ளோம். அருகாமையில் உள்ள இராஜ்யத்தின் தரிசனத்தோடு பேரழிவின் அர்மகெதோனின் கூடுகைகள், இக்காலத்து அமைப்புகளை தூக்கியெறிவதை சித்தரிக்கிறது."

**முறியடிக்கப்பட்ட ஒரு இராணுவம்:**

மிக குறைவாக ஆயுதம் கொண்ட இஸ்ரயேலர்களை குறைகூறிய தளபதியாகிய சிசெரா, கிஷோன் நதிக்கு அருகிலுள்ள இரு பக்கங்களிலும் தனது படைகளுடன் தாபோர் மலையை நோக்கி முன்னேறினார். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை பாராக்குக்கு மறுபடியும் உண்டாகி, கானானியரின் சேனைக்கு எதிராக புறப்பட்டுபோகும்படிக்கு கூறினார். நம்முடைய பாடத்திற்கு தொடர்புள்ளதாக, மிக பெரிய சங்காரம் நடந்தது. சிசெராவின் சேனை பலவீனப்பட்டதால், அது சிதறி போயிற்று. மிக பெரிய புயலும், இடியுடன் மழையும் ஆற்றில் விழுந்து, தாழ்வான பள்ளத்தாக்குகளை சதுப்பு நிலமாக்கி, சிசெராவின் இரதங்களை பயனற்றதாக ஆக்கியது. தங்கள் உயிர் தப்ப ஓடினஅவரது வீரர்களை இஸ்ரயேலர்கள் வெட்டினார்கள். அதேநேரத்தில் மற்ற ஆயிரக்கணக்கானவர்கள் ஆற்றில் பிரவாகித்த ஜலம், அடித்து சென்று கடலில் சேர்த்தது. தம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலின் சார்பாக தேவனுடைய குறுக்கீடு, அடையாளமாக சொல்ல போனால், சிசெராவின் படைகள், "பரலோக நட்சத்திரங்களுக்கு" எதிராக சண்டையிடுவதை போல காட்சி அமைந்தது. அதேபோல, நெருங்கி வரும் அர்மகெதோன் யுத்தத்தில் மனித சக்திகள் பயனற்றதாக இருக்கும். ஆனாலும் கைவிடப்பட்ட ஜனங்கள், ஒவ்வொருவரும் தன் சகோதரனுக்கு அயலானுக்கும் எதிராக திரும்பி, தற்போதைய ஒழுங்குமுறைகளை முற்றிலும் தகர்த்து விடுவார்கள். (எசேக்கியேல் 38:21, சகரியா 8:10, 14:13) சத்தியத்தின் பெரும் வெள்ளம், மற்றும் உயரும் தண்ணீராகிய அறிவு, இந்த பெரிய மனித பேரழிவை கடந்து செல்ல வழிவகுக்கும். உலகத்தின் ஆசீர்வாதங்களுக்காக தேவன் இவைகளை தம்முடைய அதிகாரத்தால் நீக்குவார்.

**கூடுதலான எண்ணங்கள்:**

நம்முடைய கதையில் உள்ள தீர்க்கதரிசன முக்கியத்துவத்தை நாம் கருத்தில் கொள்ளும்போது, பாராக் பதிலளித்ததைப் பற்றியும், அதிலிருந்து நமக்கான பாடத்தை எவ்வாறு வரையறுக்கலாம் என்றும் நாம் சிந்திக்கலாம். அவர் தனியே போருக்கு செல்லாமல், தெபோராளின் உதவியோடு சென்றார். மாபெரும் உபத்திரவத்தில், தேவனை சேவிப்பதற்கு மாம்சத்தோடு தொடர்ந்து போராடும் திரள் கூட்டத்தின் நிலையை இது காட்டுகிறது அல்லவா ? தெபோராளின் பதவி மற்றும் தேவனிடம் அவள் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பை நாம் காணும்போது, பாராக் எதோ ஒரு வழியில் பொறுப்பற்றவராக இருந்திருக்கவேண்டும் என்று நாம் வாதிடலாம். ஆயினும்கூட, அவர் யுத்தத்திற்கு சென்றார். நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட நடைகளில் தேர்வுகளை எதிர்நோக்கும்போது, நாம் தேவனிடத்தில் கொண்டுள்ள பொறுப்புகளில் நாம் தளர்ந்துவிடாதபடிக்கு, எப்போதும் அவரை குறித்து நாம் சிந்திக்கலாம்.

உங்கள் கைகளால் செய்யப்படும் வேலையை விடவும்,
உங்கள் நாவினால் சொல்லப்படும் வார்த்தைகள்
நான் புரிந்துகொள்ளும் முன்பாக வேகமாகவே
வந்து விழுந்துவிடக்கூடும்.
நான் காணும்படி ஒரு காரியத்தை செய்துகாட்டினால்
என்னால் விரைவாகச் செய்யக் கற்றுக்கொள்ள இயலுமே.

தேவன் நமக்காக இருந்தால் (நியாயாதிபதிகள் 6-8)

# கிதியோன் மற்றும் மீதியானியர்கள்



"நியாயாதிபதியாகிய கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரருக்கும் அம்மோன் புத்திரருக்கும் நடுநின்று நியாயம் தீர்க்கக்கடவர் என்று சொல்லி அனுப்பினான்." (நியாயதிபதிகள் 11:27)

**Robert Davis**

கிதியோன் மனாசே கோத்திரத்தின் ஒருவராக இருந்தார். அவரது பெயர் வெளிப்படையாக (கிதியோன் - வெட்டுபவர் அதாவது ஒரு போர்வீரன்) இருந்தும், ஆரம்பத்தில் தேவதூதன் அவரை "வலிமை மிக்க வீரன்" என்று கூறி உரையாற்றினார், வேதாகமத்தில் பதிவுகள் செய்யப்படுவதற்கு முன்னதாகவே அவர் வலிமை மிக்க வீரராக நிறுவப்பட்டிருந்தார். ஆனாலும், மீதியானியர்களை அழித்து, அவர்களை கிதியோனின் கைகளில் ஒப்புக்கொடுப்பதற்கு, தேவதூதன் அவருக்கு முன் தோன்றிய போது, துணிச்சலற்றவராகவும், தன்னடக்கமான வராகவும் தோன்றினார்.

கிதியோன் ஒரு துணிச்சலான மனிதராக இருந்ததினால், அவர் அச்சத்தினால் தடுக்கப் பட்டிருக்கமாட்டார். ஆனால் தேவன் அவருக்கு நியமித்த பணிகளில் உள்ள அபாயகரமான காரியங்களில் முன் ஜாக்கிரதையோடு நடந்திருப்பார். ஆகவே அவரது தீர்மானத்தை சோதித்தது அறியவும், அதை சரிப்பார்க்கவும், அதற்கு ஆதரவாக தொடர்ந்து வரும் மிக பெரிய காரியத்திற்காக விசுவாசத்தை உறுதிப்படுத்த தேவன் இரகசியமாக ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். ஒரு தேவதூதன், கிதியோன் வைத்த உணவை, தொட்டு, தகனித்தவுடன் அவர் காணாமற்போன போது அந்த அற்புதம் நிகழ்ந்தது. பிறகு பாகால் பலிபீடங்களையும் தோப்புகளை அழிக்கும்படிக்கு கட்டளைப் பெற்றார். ஒரு இராத்திரி, ஒரு சிறிய கூட்டத்துடன் பதுங்கிச் சென்று அனைத்தையும் அழித்தார். இது அவரது பெரிய வெற்றியாகவும் இருந்தது. அவரது இந்த துணிச்சலான, நீதியுள்ள செயலின் பின்னர், கிதியோனுக்கு ஏருபாகால் என்ற நாமம் கொடுக்கப்பட்டது. இதற்கு "பாகால் அவனோடே வழக்காடும்" என்று பொருள். அவருடைய நாமங்களை சேர்த்து பார்க்கையில், அவர் ஒரு பாகாலுடன் (சாத்தான்) போரிடுவதற்கு ஒரு வல்லமை மிக்க வீரனாக நியமிக்கப்பட்டார் என்று குறிப்பிடப்படுகிறது.

### தேவனுடைய எதிராளிகள்:

நான்கு பேருக்கு ஒருவர் என்ற நிலையில் கிதியோனுடைய படைக்கு எதிராக 135,000 பேர் எதிரியினரால் நிறுத்தப்பட்டார்கள். (நியாயாதிபதிகள் 8:10) மீதியானியர், அமலேக்கியர் மற்றும் கீழக்கத்தி புத்திரர் அனைவரும் சேமுடைய வம்சத்தினர். ஆபிரகாம் கேத்துராளிடத்தில் பெற்ற குமாரன் மீதியான், அமலேக் ஏசாவின் பேரன் (ஆதியாகமம் 25:2, 36:12) கிழக்கித்தி புத்திரர், சேமின் உறவினர்களுக்குள் இரண்டு சாத்தியக்கூறுகளில் ஒன்று பின்னர் விவாதிக்கப்படும். வடக்கு மற்றும் கடலோரப் பகுதிகள் மிகவும் வளமானவைகளாகவும், கொள்ளையடிப்பதற்கு பயிர்கள் முதிர்ந்ததினாலும், அவர்கள் கலிலேயாக் கடலின் தெற்கே படையெடுத்து, இஸ்ரயேலின் கடற்கரை சமவெளிகளை தாக்கினார்கள்.

மீதியானியர், அகாபா வளைகுடாவின் கிழக்குப் பகுதியில் வறண்ட பிராந்தியத்தில் வாழ்ந்து வந்த நாடோடிகள். அவர்கள் மந்தைகள், ஒட்டகங்களைக் கொண்டு நடத்தப்படும் வர்த்தகம் மற்றும் கொள்ளையடித்து பிழைத்து கொண்டிருந்தனர்- இந்த மீறுதலில் அவர்களின் பங்கு சீராக இருந்தது. (அடிமைகளாக அவர்கள் கடத்தப்படுவதை கவனியுங்கள், ஆதியாகமம் 37:28) ஒரு பாலைவன கலாச்சாரமாக இருந்ததினால், ஒட்டகங்கள் முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது. ஏராளமான விநியோகிக்கப்பட்டது. (அவர்களின் ஒட்டகங்கள் எண்ணற்றவை."- நியாயாதிபதிகள்6:5) அமலேக்கியர்களும் நாடோடிகளாக,தென் புறமான பாலைவனமாக நேகேவ்வில் வாழ்ந்து வந்தனர். (எண்ணாகமம் 13:29) வனாந்திர

பயணத்தின் (யாத்திராகமம் 17:8-13) போதும், ஓர்மாவிலும் (எண்ணாகமம் 14:45) மோவாபியரும் (நியாயாதிபதிகள் 3:13) மற்றும் மீதியானியர்கள் இவர்கள் அனைவரும் தொடர்ந்து இஸ்ரயேலர்களை எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். புருஷர், ஸ்திரீகள் மற்றும் குழந்தைகள் அனைவரையும் அழிக்கும் படி சவுல் கட்டளைப் பெற்றார். குறிப்பாக இஸ்ரயேல் எகிப்தை விட்டு வெளியேறிய போது , கடைசியாக பின்தங்கி வந்தவர்களை படுகொலை செய்த குற்றத்திற்கு பதிலடியாக இருந்தது. ஒரு வேளை இதில் வயதானவர்கள். பெண்கள், குழந்தைகள் இருந்திருக்க வேண்டும். (உபாகமம் 25:17-19, 1 சாமுயேல் 15:2,3)

யாக்கோபின் மாமனாகிய லாபானின் வாழ்ந்த ஆரானுக்கு அருகில் உள்ள பதானாராம் பகுதிகளில் கிழக்கத்தி புத்திரர் வாழ்ந்ததாக ஆதியாகமம் 29:1-6 ம் வசனங்களில் விவரிக்கிறது. (ஆதியாகமம் 11:31) இது வடமேற்கு மெசோப்பொத்தாமியாவில் அமைந்துள்ளது. அம்மோனை அழித்தவர்களுக்கும் இந்த வார்த்தை பொருந்தும். ஆயினும், இந்த வார்த்தை ஆக்கிரமிப்புப் படைக்கு ஒட்டுமொத்தமாக பயன்படுத்தப்படுகிறது. (நியாயாதிபதிகள் 8:10) கிழக்கத்தி புத்திரருக்கு கொடுக்கப்பட்ட கொள்ளையடிக்கப்பட்ட மிகுதியான பொருட்களும், தங்க நகைகளையும், பார்க்கும்போது, அனைத்து கிழக்கு நாடோடிகள், பாலைவன பழங்குடியினர் - தீபகற்பத்திற்கு அப்பால் உள்ள அரேபியர்களையும் இந்த பெயர் அடையாளப்படுத்துவது போல தோன்றுகிறது. நியாயாதிபதிகள் 8:26ல் கொள்ளையடித்தவைகளில், வளர் பிறையை போலிருக்கும் ஆபரணங்களைப் பார்க்கும்போது, பூர்வ காலத்தில் சந்திரனை வழிப்பட்டதாக தோன்றுகிறது. அதனுடைய தாக்கத்தை நவீன இஸ்லாமியர்களிடம், ஒரு நட்சத்திரத்தோடு அந்த பிறையும் ஒரு முக்கிய சின்னமாக காணப்படுகிறது. இவற்றிற்கு சம்பந்தம் இல்லை என்று மறுக்கப்பட்டாலும், நிச்சயமாக இருப்பது போலவே தோன்றுகிறது.)

**கிதியோனின் சேனை:**

கிதியோனின் நாட்களில், இஸ்ரயேல் பழங்குடி இனமாக பிரிந்திருந்தது. மீண்டும் ஒன்றிணைந்த இஸ்ரயேல், தங்கள் சொந்த காரியங்களில் முதன்மையாக முக்கியத்துவம் கொடுப்பதில் ஆர்வமாக இருந்தன. இதிலிருந்து, இஸ்ரயேல் முழுவதிலும் ஒரு இராஜா வேண்டும் என்ற மாம்சத்தின் ஈர்ப்பை நாம் புரிந்துக்கொள்ளலாம். அலெக்ஸாண்டரின் கீழ் கிரீஸின் விஜயத்திலும், 1870ல் ஜெர்மனியின் ஒருங்கிணைப்பின் போதும் நடந்தது போல பொதுவாக, சுதந்திரமான தேசங்கள், தன்னுரிமைக்காக போட்டியிடும் போது, பகிர்ந்துக் கொள்ளும் இனம் மற்றும் கலாச்சாரத்தில், பெருமளவில் மாற்றம் ஏற்படுகிறது. ஒரு தலையின் கீழ் ஐக்கியப்பட்ட இஸ்ரயேலர் பல இஸ்ரயேலருக்கு பலமும் உறுதியும் அளித்திருக்கவேண்டும். இவ்வாறு, ஆசேர், செபுலோன், நப்தலி ஆகிய மனாசேயின் வடதிசையில் உள்ள கோத்திரத்தாரில் (அவரது உறவினர்கள்) தொண்டர்களை மட்டும் கிதியோன் அழைத்தார். படையெடுப்பவர்களுக்கு எதிராக இஸ்ரயேலின் முழு ஜனங்களும் கூடவில்லை. (நியாயாதிபதிகள் 6:34-35) ஒருவேளை இந்த வடக்கு பழங்குடியினர், இந்த மிகப்பெரிய கொள்ளையை நடத்தியிருக்கலாம். அவரது நெருங்கிய குடும்பமாகிய அபியேஸ்ரியர்களுக்கு எக்காளத்தின் வழியாக ஆரம்பத்தில் அழைப்புக் கொடுக்கப்பட்டது. இவர்கள் மிக ஆர்வத்தோடு பதிலளித்தார்கள். அங்கிருந்து மீதியுள்ள மனாசே கோத்திரத்திற்கும் மற்றும் மூன்று மற்ற கோத்திரத்தாருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது.

அழைப்புக்கு 32,000 பேர் மட்டுமே பதிலளித்தனர், நான்கு கோத்திரங்களில், போருக்கு செல்லும் வயதில் மொத்த ஆண்களின் எண்ணிக்கை இதுவே. இவர்கள் தைரிமான ஆண்கள், தங்களுடைய தாயகத்தை பாதுகாப்பதற்கு வைராக்கியமுள்ளவர்கள். கர்த்தர் கிதியோனை போருக்கு அழைத்தபோது, அதற்குபின் கிதியோன் போர் வீரர்களுக்கு அழைப்பை கொடுத்தபின், அத்தகைய சவாலான காரியம் செய்வதற்கு ஆதாரமாக இரண்டு அற்புதங்களை அவர் தேவனிடம் கேட்டுக்கொண்டார். குறைவான விசுவாசத்திற்காக தேவன் அவரை கடிந்துக் கொள்ளாமல், உடனடியாக அவருடைய கோரிக்கையை நிறைவேற்றினதால், ஒருவேளை இந்த வேண்டுகோள் கோழைத் தனத்தை காட்டிலும் விவேகமான செயலாக இருக்கவேண்டும். ஒரு

படை, தன்னைவிட நான்கு மடங்கு பெரிய எதிரி படையை எதிர்த்து போராடுவது, கேள்விப்படாத ஒன்றாகும். உதாரணமாக, மகா அலெக்சாண்டர், பல சந்தர்ப்பங்களில் விகிதாசாரமாக பெரிய பெர்சிய வல்லமைகளை தோற்கடித்தார். எனவே, அத்தகைய பிரச்சனைகளுக்கு எதிரான வெற்றி ஒரு பெரிய சாதனையாக கருதப்பட்டாலும் அது மனித திறனுக்கு அப்பாற்பட்டது. தேவன் தம்முடைய வல்லமையைக் கொண்டு வெற்றியடைய செய்தார் என்பதை இஸ்ரயேல் மற்றும் சுற்றியுள்ள நாடுகளுக்கு வெளிப்படையாக காண்பிக்கும்படியாக, பயந்தவர்கள் வீடு திரும்பும்படி கூறி, இராணுவத்தை 10,000 பேராக குறைத்தார். (நியாயாதிபதிகள் 7:13)

ஆயினும் தேவனுடைய வல்லமையை மனுஷருக்குள் ஆழமாக பதிய வைப்பதற்கு இந்த 10,000 பேர்களும் அதிகமாக இருந்தார்கள். இது பாகால் தீர்க்கதரிசகளோடு, எலியாவின் அனுபவத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது. (அதே 450: 1 விகிதம்) எரியும் பொருட்கள், தண்ணீரில் நனைக்கப்பட்டபின், எளிதாக பற்றவைப்பது ஒரு அதிசயமாக இருந்தது. (1இராஜாக்கள் 18:34-35) இது தேவனால் ஏற்பட்ட வெற்றி, யாரும் இதை மறுக்க முடியாது.

இறுதியான ஒரு பிரிவு தேவைப்பட்டது. எதிராளிகளுக்கு அருகாமையில், ஒரு நதியில் தண்ணீர் குடித்தபோது, முழங்காலிட்டு, தண்ணீரில் தங்கள் முகங்களை கொண்டுபோய் தண்ணீர் குடிக்கும் தனி நபர்களையும், எதிராளிகள் வருவதை கண்காணித்து கொண்டு, உடனடியாக செயல்பட ஆயத்தமாக, தண்ணீரை தங்களுடைய முகத்திற்கு அள்ளி குடிக்கும் தனி நபர்களையும் கவனிக்கும் படிக்கு கிதியோனுக்கு சொல்லப்பட்டது. தண்ணீரை தன் முகத்திற்கு எடுத்து குடிப்பவர்கள் 300 பேர்கள் மட்டுமே கண்டுபிடிக்கப் பட்டார்கள். (நியாயாதிபதிகள் 7:4-6) தயாராக இருந்த நிலைமை கொண்டு இவர்கள் பிரிக்கப்பட்டனர். இந்த 300 பேர்களும் கவனமாக, உடனடியாக செயல்பட ஆயத்தமாக இருந்தார்கள், மற்றவர்களோ அதில் குறைவானவர்களாக இருந்தனர். 300 பேருக்கு மேல் அதிகமான கவனம் செலுத்தப்பட்டது. கொடுக்கப்பட்ட வேலை முதன்மையாகவும், மாம்சத்தின் தேவைகள் இரண்டாவதாகவும் இருந்தது. மீதியுள்ள அந்த பெரிய கூட்டத்தாருக்கு தங்களுடைய மாம்சத்தின் தேவைகள் முதன்மையாக இருந்தது.

**வெற்றி:**

வெற்றியை உறுதிப்படுத்தும் படிக்கும் கிதியோனுக்கு மற்றொரு அடையாளம் தேவைப்பட்டது. தேவன் எதிரிகள் இருதயத்தை பயத்தினால் உறைய வைத்தார். தேவன் அவர்களின் நிலைமையை கிதியோனுக்கு வெளிப்படுத்தினார். அந்த 300 பேரும், மூன்று குழுக்களாக பிரிந்து, தங்கள் கையில் உள்ள மண்பானைகளை உடைத்து, அதற்குள்ளிருந்த வெளிச்சத்தை வெளிப்படுத்தி, அவர்களின் பிரசன்னத்தை குறிப்பிட எக்காளங்களை ஊதினார்கள். குழப்பம் அடைந்த அந்த மூன்று எதிரிகளும், தங்கள் அருகாமையில் உள்ளவர்களை இஸ்ரயேலர்கள் என்று எண்ணி வெட்டி வீழ்த்தினார்கள். ஒருவேளை இருட்டில் அவர்களின் வஸ்திரங்களின் நிறம் அறியாதவர்களாக மற்றும் ஒரு பொதுவான மொழி இல்லாததால், சரியான தகவல் பரிமாற்றம் இல்லாததினால் இது நடந்திருக்க வேண்டும். மீதியுள்ளவர்கள் முற்றும் சோர்வடைந்தவர்களாக, குழப்பமடைந்து, பீதியில் யோர்தான் நதியின் மேற்குப் பக்கமாக தெற்கை நோக்கி பின்வாங்கி ஓடினார்கள்.

ஒருவேளை கிதியோனின் உற்சாகமுள்ள மீதி 10,000 வீரர்கள் இந்த வழியில் சென்றிருக்கவேண்டும். யோர்தான் நதியின் கிழக்கு கரையை கடப்பது மிக கடினமாக இருந்தது. அதன் கிழக்கு எல்லை பின் வாங்கும் பாதையில் இருந்ததினால், இவர்கள் அனைவரும் சுற்றி வளைக்கப்பட்டு எப்ராயினிற்கு இறையானார்கள். இறுதியில் 135,000 அரபு படைகள் அழிக்கப்பட்டன, இந்த நாடுகள் மீண்டும் இஸ்ரயேலை அச்சுறுத்தவில்லை. (நியாயாதிபதி 7:9-25) (பொறுப்பாசிரியரின் குறிப்பு :அவர்கள் நீரோட்டத்துக்கு எதிராகவும், கீழ்நிலையாகவும், மற்றும் மலைகளுக்கு இடையே செங்குத்து சாலையில் தங்களை நிறுத்தி இருக்கலாம் என்று “முப்படைப்பிரிவு” கூறுகின்றன. எதிரிகள் ஹரோத் நதியை படையை தோற்கடிக்காமலோ முழ்கடிக்காமலோ முன்னேற இயலாமல் இருந்திருப்பார்.

ஹெர்சொக் மற்றும் கிகோன், 1997 வேதாகம போர்கள், கிதியோன் போர் மீதான தங்கள் இராணுவ முன்னோக்கைப்பற்றி இதில் கூறியிருக்கிறது.)

**ஆவிக்குரிய பயன்பாடு:**

கிதியோனின் சேனைகள் மூன்று கட்டங்களில் தேர்வு செய்யப்பட்டது. அதேபோல, பரம அழைப்பின் முன்னேற்றத்திற்கு மூன்று நிலைகள் உள்ளது - அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள் மற்றும் உண்மையுள்ளவர்கள். மிக பரவலான இந்த முதல் அழைப்பை 32,000 பேர்கள் அடையாளப்படுத்துகிறார்கள். அவர்கள் மத்தியில் உள்ள உற்சாகம் பயத்தினால் மங்கியது. கிறிஸ்துவை புரிந்துக்கொண்ட பல உத்தமமான கிறிஸ்தவர்கள் இந்த 32,000 பேரை அடையாளப்படுத்தினாலும், அவர்களின் அநேகர் கிறிஸ்துவின் பலியின் வாழ்க்கையை பின்பற்றக்கூடிய அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியத்தை தொடர் தயங்குபவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, ஆண்டவரின் பணிக்காக பலியின் ஜீவியம் வாழ்வதை காட்டிலும், இந்த பூமியின் மேல் தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதே என்று அவர்கள் யோசிக்கிறார்கள்.

மீதமுள்ள 10,000 பேர், உண்மையிலேயே தைரியமுள்ள அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருந்தனர். அவர்களின் குறைவான எண்ணிக்கை கண்டு, பயத்தினால் அவர்களின் சக சகோதரர்கள் சென்ற காரியம், விசுவாசத்தின் மிக பெரிய பயிற்சியை நோக்கி தங்களுடைய இருதயத்தை திருப்பியிருக்கவேண்டும். இன்னும் அவர்களில் பெரும்பாலோர் கையில் உள்ள பணியின் மேல் கவனம் வைக்கவில்லை. இவர்கள் விசுவாசம் நிறைந்தவர்களும், ஆண்டவருக்காக தங்களுடைய ஜீவனை கொடுக்க ஆயத்தமானவர்களாக இருந்தாலும், அவர்களின் முயற்சிகள் மாம்சத்தின் காரியங்களினால் வலுவற்று போய்விடுகிறது. அவர்கள் விசுவாசத்தில் உறுதியானவர்கள், ஜீவ தண்ணீரை பருகுவதில் மிகவும் ஆர்வமுள்ளவர்கள். அவர்கள் மனதார பருகினாலும், வேத படிப்புகளை முழுமையாக உட்கொண்டாலும், தேவனுடைய எதிராளிகளைப் பற்றி புரிந்துக்கொள்வதில், தவறுகிறார்கள். இவ்வாறு, பிசாசின் உபாய தந்திரங்களை பற்றி அவர்கள் குறைவாக அறிந்திருப்பதால், எதிரிகளை எதிர்த்து போராடுவதில் அவர்கள் குறைவான ஆயத்தத்தோடு காணப்படுகிறார்கள். இந்த மூன்ற எதிரிகளும் - வலுசர்ப்பம், மிருகம் மற்றும் வெளிப்படுத்தல் 16 மற்றும் 19 இல் (இந்த கதையானது ஓரளவிற்கு 1நாளாகமம் 20டு தொடர்புடையதாக காணப்படுகிறது, அங்கு மீண்டும் மூன்று படைகள் (அம்மோன், மோவாப் மற்றும் சேயீர்) இஸ்ரயேலை மூழ்கடிக்க அச்சுறுத்திக் கொண்டிருந்தது, ஆனால் தேவன் அற்புதமாக இடைப்பட்டு அவர்களை இரட்சித்தார். இது அதே எதிர்கால நிகழ்வுகளின் பாடமாக இருக்கலாம், ஆனால் வேறு ஒரு கண்ணோட்டத்தில் இருந்து பார்க்கப்படுகிறது. இதே போன்ற மாதிரி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது எதிரிகளின் இரு தொகுதிகளும் ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட மக்களை கொண்ட இரண்டு நாடுகளை கொண்டது. ஒரு நாடு கிழக்கில் இருந்த மக்களைக் கொண்டிருந்ததது, மற்றொரு நாடு சேயீரிலிருந்து மையூநைட்ஸ் என்று அழைக்கப்படும் ஓர் குழுவை கொண்டிருந்தது. இதே மாதிரியை வெளிப்படுத்தலிலும் காணலாம். அங்கு வலுசர்ப்பம் மற்றும் மிருகம் கள்ளத்தீர்க்கதரிசியோடு (ஓர் மனித உருவம்) இணைவதை குறிப்பிட்டுள்ளது. கருத்து என்னவாக இருக்குமெனில். முதல் இரண்டு மத அரசியல் சக்திகளை பிரதிநிதித்துவப்படுகிறது, பிந்தையது இறுதி நிகழ்வுகள் குறித்த தவறான விவிலிய விளக்கங்களை முன் வைக்கும் ஒரு மத செல்வாக்கை குறிக்கிறது, பொறுப்பாசிரியரின் குறிப்பு : மூன்று அசுத்த ஆவிகள் பற்றி முன்மொழியப்பட்ட அடையாளம் காணப்பட வேண்டும், மிருகம் மற்றும் கள்ளத்தீர்க்கதாசி வலுசர்ப்பத்திற்கு முன் அழிக்கப்படுகிறார்கள், வலுசர்ப்பம் சாத்தானைக் குறிக்கிறது, மதத்திற்கு எதிரான தலைவராக இருக்க வாய்ப்பிருக்கிறது (வெளி 19 :20, 20 :2,10) மத அமைப்புகளுக்கு, கத்தோலிக்கம், புரோட்டஸ்டன்டிசம் மற்றும் இஸ்லாம் அனைத்துமே கூறலாம். சொல்லப்பட்ட கள்ள தீர்க்கதரிசி. நம்முடைய நாட்களில் இவர்களை நாம் அடையாளம் காணலாம். அந்த 9,700 பேரும் திரள் கூட்டத்தை அடையாளப்படுத்தும்.

இறுதியாக 300 பேராகிய "சிறு மந்தை" தேவனுடைய எதிராளிகளைப் பற்றி புரிந்துக்கொண்டு,

எச்சரிக்கையாக இருப்பவர்கள். அவர்கள் இரவில், (கர்த்தரின் நாளின் இருளான பகுதியில் - யோயேல் 2:1-2) தங்கள் கையில் உள்ள மண்பானையை உடைத்து (அவர்களின் மாம்சத்தின் மரணம்)அதன் விளைவாக அதற்குள்ளிருந்த வெளிச்சத்தை பிரகாசித்து (இருளான உலகத்தை பிரகாசிப்பிக்கும், குறிப்பிட்ட சத்தியங்களை கடைசி சாட்சியாக அறிவித்து) இது எதிரிகளை குழப்பமடைய செய்து, தங்களை தாங்களே மாய்த்து கொண்டனர். (அராஜகம் இந்த உலக ஒழுங்கின் எல்லா கூறுகளையும் அழிக்கும்) வெளிப்படுத்தல் 19 ம் அதிகாரம், கிறிஸ்துவுடனான (கிதியோன்) இந்த இறுதி நிகழ்வை காட்டுகிறது. இவர் தம்முடைய சபைக்கு (300 பேர்) தலைமை வகித்து, வலுசர்ப்பம், மிருகம் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசியை அழிப்பதற்கு வழி நடத்துகிறார்." 1.அல்லேலூயா, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக. 2.இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும், சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங்கடவர்கள். 3.அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து, தம்புரினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணக்கடவர்கள். 4.கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்; சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார். 5.பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்கள். 6. ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், 7.அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும், 8.அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். 9.இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா."சங்கீதம் 149 அந்த நாள் எவ்வளவு மகிழ்ச்சியான நாள் !" (பொறுப்பாசிரியரின் குறிப்பு :எப்படி 300 பேர் போர் செய்யாமல், எதிரிகளே ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளும் வரை நின்றனரோ, கிறிஸ்துவர்களாகிய நாமும் இந்த யுகத்தில் வன்முறையில் ஈடுபடக்கூடாது.)

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" (1பேதுரு 4:7)

நீங்கள் ஆற்றும் சொற்பொழிவானது உண்மையானதும்
அறிவுமிகுந்ததுமாய்க் காணப்பட்டாலும்,
நான் எனக்குரிய பாடங்களை கண்களால் கவனித்து
உற்றுநோக்கி, புரிந்து செய்யவே ஆசைப்படுகின்றேன்.

தேவன் அவருக்கு சித்தமானவர்களை பயன்படுத்துகிறார்

# யெப்தாவுக்கு எதிராக அம்மோன்



"அவன் அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணுகிறாய்; நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றக்கூடாது என்றான்." (நியாயாதிபதிகள் 11:35)

**Cecil Norde**

இஸ்ரயேலில், மனாசேவின் பாதி கோத்திரம், தெற்கு அண்டைய எதிரியாகிய அம்மோனியர்களால் அச்சுறுத்தப்பட்டபோது, யோசுவாவிலிருந்து எட்டாவது நியாயாதிபதியாகிய கீலேயாத்தியனாகிய யெப்தா இஸ்ரயேலுக்கு வந்தார். கீலேயாத்தில் வசிப்பவர்கள் தேவனுக்கேற்ற பக்தி கொண்டிராததினாலும், அவருடைய கட்டளைகளுக்கு செவி சாய்க்காததாலும் அதிகமாக பாதிக்கப்பட்டார்கள். ஆனால் அதற்கு பதிலாக, அவர்கள் தங்கள் எதிரிகளாகிய புறஜாதியாரின் உள்ளூர் தெய்வங்களை வணங்க ஆரம்பித்தார்கள். கீலேயாத் தேசத்திலே குடியிருந்த, தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனங்களின் பாவத்தினால் தேவனுடைய கோபம் மூண்டது. அம்மோன் புத்திரரின் கைகளில் அவர்களை அவர் ஒப்புக்கொடுத்தபோது, அது தெளிவாக தெரிந்தது. கலிலேயாவிலிருந்து சவகடல் மற்றும் அர்னோன் நதி வரையில், யோர்தான் பள்ளத்தாக்கின் கிழக்கே உள்ள மலைகளில், கீலேயாத் அமைந்துள்ளது.

"இஸ்ரவேல் புத்திரர், மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்புச் செய்து, கர்த்தரைச் சேவியாமல் அவரை விட்டுப் போய், பாகால்களையும், அஸ்தரோத்தையும், சீரியாவின் தேவர்களையும், சீதோனின் தேவர்களையும், மோவாபின் தேவர்களையும், அம்மோன் புத்திரரின் தேவர்களையும், பெலிஸ்தரின் தேவர்களையும் சேவித்தார்கள். அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டு, அவர்களைப் பெலிஸ்தர் கையிலும், அம்மோன் புத்திரர் கையிலும் விற்றுப்போட்டார். அவர்கள் அந்த வருஷம் முதற்கொண்டு பதினெட்டு வருஷமாய் யோர்தானுக்கு அப்பாலே கீலேயாத்திலுள்ள எமோரியரின் தேசத்தில் இருக்கிற இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்கினார்கள். அம்மோன் புத்திரர் யூதாவின் மேலும், பென்யமீன் மேலும், எப்பிராயீம் குடும்பத்தார் மேலும் யுத்தம் பண்ண யோர்தானைக் கடந்து வந்தார்கள்; இஸ்ரவேலர் மிகவும் நெருக்கப்பட்டார்கள்." (நியாயாதிபதிகள் 10:6-9)

யெப்தா ஒரு வலிமையான, திறமையான போர் வீரனாக இருந்தார். அவர் கீலேயாத்தின் குமாரர்களில் ஒருவராக இருந்தார். ஆயினும், அவருடைய தாய் ஒரு விபச்சாரியாக இருந்தாள். கீலேயாத்துக்கு ஒரு மனைவியும் இருந்தாள். அவள் அவருக்கு அநேக குமாரர்கள் பெற்றாள். இது யெப்தாவை அவருடைய குடும்பத்திலிருந்து நீக்கி வைத்தது. அவர் சட்ட விரோதமான ஒரு குமாரன் என்று சொல்லி, அவரது சகோதரர்கள் அவரை ஒதுக்கி வைத்தார்கள். யெப்தா யுத்தத்தை கற்றுக்கொண்டு, வலிமைமிக்க போர் வீரராக வளர்ந்தார். இதன் விளைவாக, வாலிபமாக வளர்ந்த அவர் கீலேயாத்தில் சட்டவிரோதமான ஆட்களை நண்பர்களாக ஆக்கிக்கொண்டார். அவருடைய முறைகேடான காரியங்களை அவருடைய சகோதரர்களால் சகித்துக்கொள்ளமுடியாததினால், அவர் குடும்பத்தை விட்டு வெளியேறும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். இறுதியாக யெப்தா, தனது சட்டவிரோதமான நண்பர்களுடன், தனது நகரத்தின் வடகிழக்கில் தோப் (நல்லது என்று பொருள்) தேசத்தில் குடியேறினார். அவருடைய குழு அளவுக்கு அதிகமாக வளர்ந்தது. ஜீவனுக்கு தேவையான உணவு, பொருட்களுக்காக அவர்கள் திடீர் தாக்குதல்களை நடத்தினார்கள். சட்டத்திற்கு புறம்பான ஒரு போர் வீரனாக யெப்தா வெற்றி பெற்றார். சீக்கிரத்திலேயே அவரது புகழ் அதிகரித்ததினால், கீலேயாத்தின் மூப்பர்களும் அவரை மரியாதையுடன் நடத்தினார்கள்.

பத்தொன்பது வருடங்களாக கீலேயாத்திலுள்ள பட்டணங்களும், கிராமங்களும், அம்மோன் புத்திரர்கள் ஒடுக்கினார்கள். கீலேயாத்தில் குடியிருந்த இஸ்ரயேலர்கள், மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் அவர்களது நிலங்களை எடுத்துக் கொண்டார்கள் என்று அம்மோனியர்கள் எண்ணினார்கள். (நியாயாதிபதிகள் 11:13,26) உண்மையில், இஸ்ரயேல் அம்மோனியர்களிடமிருந்து அல்ல, அதை ஹெஸ்போனின் விரோத அரசனிடமிருந்து எடுத்துக் கொண்டது. இறுதியில், கிலேயாத்தின் மூப்பர்கள், அம்மோனியர்களிடமிருந்து தங்களை காப்பாற்றவும், தேவன் அவர்களுக்குக் கொடுத்த தேசத்தை மீட்பதற்காகவும் யெப்தாவின் உதவி கேட்டு வந்தனர். "யெப்தாவை நோக்கி: நீ வந்து, நாங்கள் அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ண எங்கள் சேனாதிபதியாயிருக்க வேண்டும் என்றார்கள். அதற்கு யெப்தா கீலேயாத்தின் மூப்பரைப் பார்த்து: நீங்கள் அல்லவா என்னைப் பகைத்து, என் தகப்பன் வீட்டிலிருந்து என்னைத் துரத்தினவர்கள்? இப்பொழுது உங்களுக்கு ஆபத்து நேரிட்டிருக்கிற சமயத்தில் நீங்கள் என்னிடத்தில் ஏன் வருகிறீர்கள் என்றான்." (நியாயாதிபதி 11:6,7),

அவரது ஜனங்கள் அவரை மரியாதையாக நடத்தினதை எண்ணி யெப்தா மகிழ்ச்சி அடைந்தார். அவரும் அவருடைய மனுஷரும் அம்மோனியர்களை எதிரிகளாகக் கண்டார்கள். யெப்தாவை அவருடைய வீட்டிற்கு, கீலேயாத்திற்கு வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதன் மூலம் மூப்பர்களின் கீழ்படிதலை பெற்றார். இந்த மரியாதையை ஏற்றுக்கொண்டதன் நிமித்தம் அம்மோனியர்களுக்கு எதிராகப் போரிட வேண்டியதாக இருந்தது. யெப்தாவின் படைத்தளபதியாக அவர்கள் தங்கள் இராணுவ அதிகாரத்தை சரணடைந்தார்கள். அவரது இராணுவம் விரிவுபடுத்தப்பட்டது. பின்னர் அம்மோனியர்களை வீழ்த்தும்படிக்கு போர் யுக்திகளும், தந்திரோபாயங்களிலும் அவரது ஆட்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. கீலேயாத் படைகளின் தளபதியாக அவர் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதன் மூலம் இறைவன் முன் அவரது மனத்தாழ்மை வெளிப்பட்டது. "அப்பொழுது யெப்தா கீலேயாத்தின் மூப்பரோடே கூடப்போனான்; ஜனங்கள் அவனைத் தங்கள் மேல் தலைவனும் சேனாதிபதியுமாக வைத்தார்கள். யெப்தா தன் காரியங்களையெல்லாம் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியிலே சொன்னான்." (நியாயாதிபதிகள் 11:11)

எதிர்கால போர்களில் இரத்தம் சிந்துதலை குறைப்பதற்கு, அம்மோனியர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த யெப்தா புத்திசாலித்தனமாக முயன்றார். ஆனால் அது பயனற்றதாக போனது. யோசுவாவுக்கு முன்னால் அவர்கள் இருந்தது போல, இஸ்ரயேலர்கள் கீலேயாத்தின் உண்மையான ஜனங்கள் அல்ல என்று அம்மோனியர்கள் உணர்ந்தார்கள். கீலேயாத்தியரை அடிபணியச் செய்வதற்கான உரிமை, வல்லமை, சக்தி அவர்களுக்கு உண்டென்று அவர்கள் நம்பினார்கள். எனினும், யெப்தாவின் சேனை, தேவனுடைய பாதுகாப்பை பெற்றிருப்பது குறித்து அவர்களுக்குத் தெரியாது. எப்போதெல்லாம் அம்மோனியருக்கு எதிராக யுத்தங்கள் நடத்தப்படுகிறதோ அப்போதெல்லாம் வெற்றிப் பெறும்படிக்கு தேவனுடைய பாதுகாப்பைப் பெற்றிருந்தார்கள். இறுதியில், அம்மோனியர்கள் முழுமையாக தோல்வியடைந்ததினால், பின்வாங்க வேண்டியிருந்தது.

**பொறுத்தனை:**

யுத்தத்திற்கு முன், "யெப்தா தேவனிடம் ஒரு பொறுத்தனை செய்தார்","(நியாயாதிபதிகள் 11:30-32) அவர் வெற்றியடைந்து, அம்மோனியரிடமிருந்து விடுதலை பெற்ற பின், யெப்தா வீடு திரும்பினார். துரதிருஷ்டவசமாக, மற்றும் அவரது துயரத்தை தூண்டும்படியாக, அவருடைய வீட்டிலிருந்து அவருடைய மகள், அவரை வரவேற்கும்படி, தம்புரு வாசித்து கொண்டு, நடனம் ஆடிக்கொண்டு வந்தாள். அவள் யெப்தாவுக்கு ஒரே மகளாக இருந்தாள். கர்த்தருக்கு அவள் தகனபலியாக செலுத்தப்படவேண்டும் என்பதை யெப்தா கண்டார். ஆனால் அவர் கர்த்தருக்கு சொன்ன வார்த்தைகளை திரும்ப பெற்றுக்கொள்ள இயலாது. யெகோவா தேவனுக்கு பொருத்தனை செய்ததை அவர் கட்டாயமாக நிறைவேற்றவேண்டியதாக இருந்தது. அவர் தன்னுடைய மகளை கண்டபோது மிகுந்த துயரத்திற்கும் வருத்தத்திற்கும் அடையாளமாக அவரது வஸ்திரங்களை கிழித்துக்கொண்டார். அவர் செய்த பொருத்தனையைப் பற்றி அவளுக்கு சொல்ல வேண்டியதாக இருந்தது. அவர் இப்படிப்பட்ட

பொருத்தனையை செய்திருக்க வேண்டாமே என்று விரும்பினாலும், அந்த பொருத்தனை அவர் நிறைவேற்ற வேண்டியிருந்தது. "நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்து கொண்டதைச் செய். நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப்பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம்.உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே; அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே; தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்?" (பிரசங்கி 5:4-6)

அவரது மகள் தன் தகப்பனை அதிகமாக நேசித்ததினால், அவள் தன் தகப்பன் செய்த பொருத்தனையை செலுத்துவதற்கு ஒப்புக் கொண்டாள். அவளுடைய கன்னிமையையின் நிமித்தம் துக்கங்கொண்டாடும்படிக்கு இரண்டு மாதங்கள் மலைகளுக்கு தன் தோழிகளோடு செல்வதற்கு தகப்பனிடம் அனுமதிக்கேட்டு கொண்டாள். இரண்டு மாதங்களின் முடிவில் அவள் தன் தந்தையிடம் திரும்பி வந்தாள். "இரண்டு மாதம் முடிந்த பின்பு, தன் தகப்பனிடத்திற்குத் திரும்பி வந்தாள்; அப்பொழுது அவன் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான்; அவள் புருஷனை அறியாதிருந்தாள்.." (நியாயாதிபதிகள் 11:39) என்று கூறுகிறது. அதிர்ஷ்டவசமாக நியாயப்பிரமாணத்தில், மனித பலிகள் கண்டிப்பாக தடை செய்யப்பட்டிருந்தது. (உபாகமம் 12:30-32) ஆகவே, இந்த மரணத்திற்கு பதிலாக அதற்கேற்ற பலி செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அவரது தந்தையின் மீதான அவளுடைய அன்பும், கீழ்ப்படிதலும் அவளது வாழ்நாள் முழுவதிலும் நிரந்தரமான ஒரு கன்னியாக வாழ்ந்து கொண்டிருந்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. திருமணம் செய்து கொள்ளவும், பிள்ளைகளை பெற்றுக்கொள்ளவும் முடியாதபோது, மரிப்பதே நலமாயிருக்கும். இதன் விளைவாக, யெப்தா அவர் செய்த பொருத்தனையை செலுத்த வேண்டி இருந்ததினால், அவர் வாழ்ந்த மீதியுள்ள ஆறு வருடங்களும், மரித்தவளாக இருக்கும் அவர் மகளை எண்ணி துயரத்தில் வாழ்ந்தாலும், அதே நேரத்தில் அவருடைய பொருத்தனையையும் நிறைவேற்றினார். (ரீபிரிண்ட் 2897-ஐ படிக்கவும்) (பொறுப்பாசிரியரின் குறிப்பு நியாயாதிபதிகள் 11:31 (KJV) "நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும் போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்ட வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும், அதைச் சர்வாங்க தகனபலியாகச் (அதாவது ஓர் தெரிவு செய்ய வாய்ப்பு இருக்கிறது) செலுத்துவேன் என்றான். மற்றொரு அறிவுறுத்தல் என்னவெனில், ரீபிரிண்ட் 2897-ஐ பார்க்கவும். எபிரேய பதம் v'haghaliythihu, பொருள்: "அல்லது நான் அதை / அவனை (ளை) சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன்," எவ்வகையிலும் மனிதர்கள் பலியாக சுத்தமுள்ளவர்கள் அல்ல (உபாகமம் 12:29-31, 14:3-8) அதினால், யெப்தாவின் மகள் யெகோவா தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட மட்டுமே முடியும் (கன்னியாகவே இருந்து விடுவது),

**சுருக்கம் - ஒரு ஆன்மீக மனநிறைவு:**

பழைய ஏற்பாட்டின் காலங்களில்,தேவன் புருஷரையும், ஸ்திரீகளையும் தெரிந்துக்கொண்டு, அடக்கு முறைக்கு எதிராகவும், தேவன் அவர்களுக்கு தந்த தேசத்தில் இஸ்ரயேலுக்கு சுதந்திரம் அளிக்கவும், அவர்களை வழி நடத்தினார். இஸ்ரயேல் தேவனுடைய கற்பனைகளையும், பிரமாணங்களையும் கடைபிடிக்காத படிக்கு பாவம் அவர்களை தடுத்தது. அதனை தொடர்ந்து, தேவனுடைய கோபம் இஸ்ரயேல் ஜனங்களுக்கு நீதியை வழங்கியது. நித்தமும் தேவனை ஆராதித்து, துதித்து ஒரு ஆவிக்குரிய மனநிறைவை திரும்பப் பெற இயலாதபடி அவர்களை செய்தது. இது மிக எளிமையானது, பாவம் நம்மை குருடாக்குவதால், சில நேரங்களில் மிக கடினமாகவே உள்ளது. அம்மோனியருக்கு எதிராக வெற்றி பெற யெப்தா ஏற்கனவே தேவனுடைய கிருபையின் கீழ் இருந்தார். அவர் பொருத்தனை செய்யவேண்டிய அவசியம் இருக்கவில்லை. தேவன் அவருக்கு கொடுத்த கிருபையில் அவர் மனநிறைவோடு இருந்திருக்கலாம். நம்முடைய வாழ்க்கையை தேவனுக்காக அர்ப்பணிக்கப்படவர்களுக்கு தேவனுடைய அன்பும் மற்றும் தெய்வீக அருளும் கிடைக்கப்பெற்று கண்முடித்தனமான பொருத்தனைகளை அவரிடம் ஏற்படுத்த நம்மை தடுக்கும்.

நம்முடைய உடன்படிக்கையின் பொருத்தனையின் கீழ், கிறிஸ்துவின் புது சிருஷ்டிகளாகிய நாம் அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு நாம் அபிஷேகிக்கப்பட்டு, இறுதியில் கிறிஸ்து இயேசுவுக்குள் ஆயிர வருட ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு உதவி செய்ய வேண்டும். நம்முடைய குடும்பங்கள், சகோதரர்கள், சிநேகிதர்கள் ஆகியோருக்கு நம்முடைய தினசரி சேவை மற்றும் பொறுப்புகள் நிறைவேற்றுவதைப் போலவே, இந்த ஆவிக்குரிய மனநிறைவும் நம்முடைய இருதயங்களிலும், மனதிலும் வியாபித்திருக்க வேண்டும். "உண்மையாக அர்ப்பணிக்கப்பட்ட அனைவரிடமும் கேட்கப்படும் தலையான ஒரு முக்கிய கேள்வியாகும். நாம் முழுமையாக நம்மை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தபோது, நமக்காக சுயமாக எதையும் எடுத்துக்கொள்ளமாட்டோம் என்று பொருள்பட்டது. இதில் நம்முடைய உடைமைகள், நம்முடைய நேரம், நம்முடைய சக்தி, மற்றும் மனரீதியான சகலமும் அடங்கும். மேலும், நம்முடைய முன்னாள் பூமிக்குரிய இலக்குகள், நம்பிக்கைகள், நோக்கங்கள் ஆகியவற்றை, இனி எந்த வகையிலும் தொடராதபடிக்கு அவைகளை பலி செலுத்த வேண்டும் என்பதை குறிப்பிட்டு காட்டுகிறது. நம்முடைய முழுமையான அர்ப்பணிப்பின் பொருத்தனை இதுவே, கொஞ்சமும் குறையக்கூடாது என்பதை முக்கியத்துவப் படுத்துகிறது. ஆனால், மேலும் தாலந்துகள் என்று தேவன் அழைக்கும், தனிப்பட்ட தகுதிகள் மற்றும் உடமைகள், இந்த உலக இலட்சியங்களுக்காகவோ, நோக்கம் இல்லாத செயல்திறனுக்காகவோ அல்ல, அதற்கு பதிலாக தேவனுடைய சேவையில், அவருடைய திட்டத்திற்காகவும், அவருடைய பிள்ளைகளுக்காகவும் பயன்படுத்த வேண்டும்" என்று சகோதரர் ரசல் மிக அருமையாக கூறுகிறார். (ரீபிரின்ட் 1281)

**தேவனுக்கே மகிமை !**

**நிழலைப்பற்றிய ஒரு குறிப்பு**

யெப்தா முறை தவறி பிறந்தவர், ஆதலால் அவர் சகோதரர்களால் நிராகரிக்கப்பட்டார். அவர்கள் உபத்திரவத்தில் இருந்தபோது, அவரை அழைத்தார்கள். அவர்கள் அவரைத் தங்களுடைய தலைவராக ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டபோது, அவர் அவர்களை விடுவித்தார். தேவனுடைய குமாரனாகிய இயேசு, முறை தவறி பிறந்தவராக எண்ணி, இஸ்ரயேலர்கள் அவரை நிராகரித்தார்கள். (யெப்தாவிடமிருந்து அவர்கள் கற்றுக் கொண்டிருக்கலாம் அல்லவா?) இப்போது இஸ்ரயேலர்கள் தேசத்திற்கு திரும்பி வருவதால், அவர்கள் ஆபத்தில் சிக்கியிருக்கிறார்கள். அர்மகெதோனிலிருந்து இஸ்ரயேலை விடுவிக்கும் இரட்சகர், இயேசு கிறிஸ்துவே. அப்பொழுது ஆயிரவருட ஆட்சியில், அவர்கள் இயேசுவை தங்களுடைய தலைவராக ஏற்றுக்கொள்வார்கள். (யெப்தாவின் குமாரத்தி, விசுவாசமுள்ள சபையை அடையாளப்படுத்தலாம்.)

மிகவும் உயரிய கருத்துக்களை நீர் கூறிடும் போதினில்
நான் அதைத் தவறாகக்கூட புரிந்துகொள்ள வாய்ப்பு உண்டே,
ஆனால் நீர் வாழும் வாழ்க்கையைக் கண்நோக்கும் போதினில்
அதுபோலவே வாழ்வதில் தவறேதும் ஏற்படாதே.

**சிம்சோன், சபையைப் போலவும், சபை போலில்லாமலும்**



# சிம்சோன்:நேற்று இன்று மற்றும் நாளை

"பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்லவேண்டுமானால் காலம் போதாது. விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்."*(எபிடிரயர் 11:32-34)*

ஆபிரகாமின் நாளில் பெலிஸ்தியர்கள் நட்புடன் இருந்தனர். எகிப்தியர்கள் காப்டர் (கிரீட்) குடியேறினார்கள். அதன் பின் கிரேட்டன்ஸ் நவீன காசா பகுதிக்கு குடியேறினார்கள். (ஆதியாகமம் 10:13-14, 21:32, உபாகமம் 2:23, எரேமியா 47:4) சிம்சோனின் காலத்தில் நாற்பது வருடங்கள் பெலிஸ்தியர்கள் ஒடுக்கப்படும் வரையில், அதிகமான கிரேட்டன்ஸ் வந்தார்கள். (கி.மு. 1615 மற்றும் 12 ஆம் நூற்றாண்டு)

சிம்சோன் ஒரு இஸ்ரயேலனும், மனோவாவின் குமாரனும், தாண் கோத்திரத்தை சேர்ந்தவர். அவர் இஸ்ரயேலர்களை அவர்களுடைய அண்டை தேசமாகிய பெலிஸ்தியர்களிடமிருந்து மீட்கக்கூடிய, ஒரு விடுவிப்பாளராகவும், ஒரு நியாயாதிபதியாகவும் இருந்தார். அவர் கிமு 12ம் நூற்றாண்டில், மத்தியதரைக் கடலின், பெலிஸ்கியரின் கடற்கரைப் பகுதியின் பாதி வழியில் இருக்கும் மேற்கு எருசலேமில் உள்ள சோராவில் பிறந்தவர். சிம்சோனின் பிறப்பு, யெகோவா தேவனுடைய தூதரால், மலடியாக இருந்த அவருடைய தாய்க்கு முன் அறிவிக்கப்பட்டது. அந்த தூதன், அவளுக்கு ஒரு குமாரன் பிறப்பார் என்றும், அந்த குமாரன் பிறந்த நாள் தொடங்கி நசரேயனாக இருக்க வேண்டும் என்றும், இதனால் பெலிஸ்தியரின் கைகளுக்கு இஸ்ரயேலை இரட்சிப்பதற்கு கர்த்தர் அவரை பயன்படுத்துவார் என்றும் அறிவித்தார். சிம்சோனையும் பெலிஸ்தியரையும் நாம் வேறுபடுத்தலாம்.

நமது ஆராய்ச்சியிலிருந்து கருத்துக்கள் - இது தேவனால் வந்தது. மோசேவின் நியாயப்பிரமாணம், இஸ்ரயேலின் நியாயாதிபதிகள் மற்றும் குறிப்பாக அவர்களை தொல்லைப்படுத்தன யெகோவா தேவனை பெலிஸ்தியர்கள்பகைத்ததை காட்டிலும் ஒடுக்கினவர்களுக்கு சிம்சோன் செய்த உதவி மேலும் உறுதியானது என்பதை நாம் சிந்திக்கலாம். (ரீப்பிரிண்ட்டு 5613,3-5 வற்றை நாம் கவனிக்கலாம்)

அந்த தூதனிடம் பெயரை கேட்ட போது, "அதிசயம்" என்று அவர் பதிலளித்தார். (நியாயாதிபதி 13:18 ஐ ஏசாயா 9:6 ஆம் வசனத்தோடு ஒப்பிட்டு பார்க்கவும்) ஒருவேளை, இஸ்ரயேல் ஜனங்களோடு நம்முடைய ஆண்டவருடைய (மனுஷனாக வருவதற்கு முன்) நேரடியான சந்திப்பு, இதுவே கடைசியாக இருந்திருக்க வேண்டும். சிம்சோனின் சிந்தையும், சரீரமும் லோகோஸ் தாமே உற்சாகப்படுத்தியிருக்கவேண்டும்.

**சிம்சோன் ஒரு நசரேயர் -நியாயாதிபதி 13:11-18**

தங்களுடைய சரீரத்தின் இயல்புகளை கட்டுப்படுத்த நசரேயர்கள், தேவனோடு விசேஷித்த பொருத்தனை செய்தார்கள். தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற வேண்டுமானால் சுயத்தை வெறுக்க வேண்டும் என்றும் தேவனுடைய உடன்படிக்கையின் பிள்ளைகளாக தங்களை காத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஜனங்களுக்கு காட்டியது.

நமது ஆய்வுகளிலிருந்து கருத்துக்கள் - பழங்கால இஸ்ரயேலர்கள் தேவனுக்கு சேவை செய்ய தங்களை அர்ப்பணித்தார்கள், அவருடைய இராஜ்யத்தை கட்டினார்கள், பூமியில் என்றும் வாழ்வார்கள். (பூமிக்குரிய உயிர்த்தெழுதலுக்கு பின்) ஒரு நசரேயராகிய சிம்சோன் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இயல்பான வாழ்க்கையை அமைதியுடன் வாழ்ந்திருக்கலாம். ஆனால் சிம்சோனை பொருத்தவரையில் தேவனுடைய நோக்கம் வேறுப்பட்டது. சிம்சோன் விசுவாசமுள்ள ஒரு மனுஷனாக இருந்தார். பெலிஸ்தியருக்கு எதிராக இஸ்ரயேல் ஜனங்களுக்கு அவர் உதவி செய்ய வேண்டும் என்பதை அவர் நன்கு உணர்ந்து, ஆற்றலோடு போராடினார். ( இதற்கு மாறாக, சுவிசேஷ யுகத்தின் சில

குறைபாடுகளாகிய, செயலற்ற தன்மை, குளிராகவோ, அனலாகவோ இராமல், காலத்திற்கு ஏற்ற உணவுகள், உபதேசங்கள் மற்றும் செயல்முறை கற்பனைகளை உட்கொள்வதற்கு தவறிவிட்டன.)

**சிம்சோனின் பலம் - நியாயாதிபதிகள் 13:24**

சிம்சோன் தனது வாழ்க்கையில் பல்வேறு நேரங்களில் காட்சியளிக்கப்பட்ட அற்புதமான பலம், இயற்கையாக அவர் ஒரு இராட்சிதராக இருந்ததினால் அல்ல, மிக பெரிய வேலைகளை செய்வதற்காக தேவனுடைய ஆவி அவர் மேல் வந்ததால் மட்டுமே கருத்து - சிம்சோனின் செயல்களில் தேவனுடைய பலத்தை அவருடைய சார்பாக வெளிப்படுத்தியது.

கல்லினாலான தெய்வங்களை வணங்கிய பெலிஸ்தியர்கள் ஆயிரம் பேர் சிம்சோனுக்கு முன் விழுந்தார்கள். (நியாயாதிபதிகள் 15:15) தேவன் அவர்களுக்காக இருக்கிறார் என்ற காரியம் இஸ்ரயேலரை உற்சாகப்படுத்தியது. உலகம், மாம்சம், பிசாசு ஆகிய நம்முடைய எதிரிகளையும் ஜெயிப்பதற்கு தேவனுடைய வல்லமை நம்மோடிருக்கும் என்பதை சிம்சோனின் காரியங்கள், இப்பொழுது இருக்கிற விசுவாசிகளுக்கு நம்பிக்கையையும் ஊக்கத்தையும் தருகிறது.

**கற்பனைகளுக்கு எதிராக ஊழல்**

இஸ்ரயேல் மீண்டும் தேவனுக்கு முன்பாக பொல்லாப்பானதைச் செய்ததினால், சிம்சோன் பிறந்தபோது,பெலிஸ்தியர்கள் நாற்பது வருடங்கள் அவர்களை ஒடுக்கினார்கள்.

கருத்து - இளைய யூதர்கள் தாகோன், ஒருவேளை பாகால் மற்றும் அஸ்திரேத்தை வணங்குவதன் மூலம் தீமை செய்திருக்கலாம். (நியாயாதிபதிகள் 10:6) இந்த புறஜாதியாரின் தெய்வங்களின் வழிபாடு, பிசாசுகளின் வழிபாடு, குழந்தை பலிகள் கருவுறுதல் சடங்காசாரங்கள் ஆகியவற்றோடு சம்மந்தப்பட்டுள்ளது. "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்." (யாத்திராகமம் 20:3) என்று தேவன் சொன்னபோது இவை அனைத்தும் தடை செய்யப்பட்டது.

சிம்சோன் ஒரு பரிசுத்தமான பணிக்காக, தீமைக்கு எதிராக இராணுவத்தோடு போராடினார். இன்று கிறிஸ்தவ சகோதரர்களுக்கு தீய ஆவிகளோடு போராடுவதற்கு மிக பெரிய ஆவிக்குரிய நூலகம் உண்டு. நம்முடைய சிறந்த உதாரணம் - "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்." (2கொரிந்தியர் 10:4,5)

**சிம்சோன் கர்த்தருடைய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டார் - நியாயாதிபதிகள் 14:15**

"பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்." (நியாயாதிபதிகள் 13:24,25)

கருத்து - பெலிஸ்தியர்களுக்கு எதிராக செயல்படவும், அவர்களை தொந்தரவு செய்யவும், எதிரிகளின் சொத்துக்களை உடைப்பதற்கும், இஸ்ரயேலர்களை ஊக்குவித்து, அவர்களின் சுமையை அகற்றுவது தேவனுடைய சித்தமாக இருந்தது. பெலிஸ்தியர்கள் இரும்புக் கத்திகளையும் இரதங்களையும் கடினப்படுத்தினார்கள். ஆனால் இஸ்ரயேலர்கள் அவைகளைச் செய்யாதபடிக்கு தடை விதித்திருந்தார்கள். "எபிரெயர் பட்டயங்களையாகிலும் ஈட்டிகளையாகிலும் உண்டுபண்ணாதபடிக்குப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று பெலிஸ்தர் சொல்லியிருந்தபடியால், இஸ்ரவேல் தேசத்தில் எங்கும் ஒரு கொல்லன் அகப்படவில்லை." (1சாமுயேல் 13:19) சிம்சோன் ஒரு கழுதையின் தாடையைக்கூட ஆயுதமாக பயன்படுத்தினார். (நியாயாதிபதிகள் 15:15) அவருடைய வெற்றி இப்போதைய கிறிஸ்தவர்கள் ஜெயிப்பதற்கு ஊக்கமளிக்கிறது. 1948, 1967, முதற்கொண்டு, அற்புதமான இரட்சிப்புகளை கண்டதினால், இவைகள் மாம்ச இஸ்ரயேலர்களுக்கும் ஊக்கமளிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் "யுத்த நாளில் போராடுவதைப் போல" (சகரியா 14:3) இனி வரக்கூடிய அர்மகெதோனில் தேவன் இஸ்ரயேலர்களுக்காக யுத்தம் செய்வார்.

**சிம்சோன் கட்டுகடங்கா உணர்ச்சிகளுக்கு அடிமையா? - நியாயாதிபதிகள் 14:15**

சிம்சோன் கட்டுக்கடங்கா உணர்ச்சிகளுக்கு அடிமையா? அவருடைய பெற்றோரின் தடையை எதிர்த்து, அவருடைய சொந்த ஊராகிய சோராவிற்கு அருகாமையில் உள்ள திம்னாத்தின் பெலிஸ்தியர் பெண்ணை மணமுடிப்பதற்கு பொறுப்பற்ற முறையில் வலியுறுத்தினார்.

கருத்து - சிம்சோன் பெண்களிடம் சகஜமாக பழகக்கூடியவர். ஆனால் இஸ்ரயேலின் நன்மைக்காக தேவன் அவருடைய பலவீனத்தை ஒதுக்கி வைத்தார். (நியாயாதிபதிகள் 14:4) அது முன்னணியிலிருந்த பெலிஸ்தியர்களுடன் நெருங்கிய தொடர்புக்கு சிம்சோனை அழைத்து வந்தது. அதற்கு பின் இவர்கள் சிம்சோனின் கைகளில் உபத்திரவப்பட்டார்கள்.

**வஸ்திரங்களுக்காக சிம்சோன் கொன்றார் நியாயாதிபதிகள் 14:15-19**

திருமண விருந்தின் போது, சிம்சோன் ஒரு விடுகதையை விடுவிக்கும்படிக்கு விருந்தாளிகளை கேட்டு கொண்டார். அவர்கள் அதை விடுவித்துவிட்டால், 30 மாற்று வஸ்திரங்களை கொடுப்பதாக பந்தயம் கட்டினார். அவருடைய மணமகளின் உயிரை அச்சுறுத்தி, சிம்சோனிடமிருந்து பதிலை பெற, அவளை அவர்கள் கட்டாயப்படுத்தினார்கள். ஏமாற்றப்பட்டதை சிம்சோன் அறிந்தவராக, அஸ்கலோனின் பெலிஸ்தியர்கள் 30 பேரை கொன்றதுடன், கொல்லப்பட்டவர்களின் ஆடைகளை விருந்தாளிகளுக்கு வழங்கினார். இப்படியாக அவர் எதிரிகளை அழித்து, அவரது வார்த்தையை காத்துக் கொண்டார்.

கருத்து - பெலிஸ்தியர்கள் செய்த துரோகத்தினால், ஏற்படுத்தப்பட்ட உபத்திரவத்தின் விதத்தில் அவர்களது குணங்கள் வெளிப்பட்டது. தேவனுடைய வல்லமையை இஸ்ரயேலர் நம்புவதற்கு அவர்களை ஊக்கப்படுத்தும்படியாக, சிம்சோனின் உத்தரவு மேற்கொள்ளப்பட்டது.

வித்தியாசமான உடன்படிக்கையின் கீழ், வேறுப்பட்ட தரங்களில், வித்தியாசமான தேசங்களில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். (மத்தேயு 5:1-12) ஆயினும், மரணபரியந்தம் தங்களை அர்ப்பணித்தவர்கள், பூமியின் மேல் தங்களுடைய உரிமைகளை விட்டு கொடுத்தவர்கள், இன்று சிம்சோனை போல் இல்லாவிட்டாலும் சிம்சோனை போலாவது அதிக பெலனையும் தத்தம் செய்தலையும் பயன்படுத்த வேண்டும். ஓநாய்களுக்கு நடுவில், ஆட்டுக்குட்டிகளை போல, "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்த முள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே." (எபிரெயர் 12:14) அப்பொழுது, அவர்கள் கிறிஸ்துவோடு ஆட்சிச் செய்ய தகுதிப் பெறுவார்கள். கிறிஸ்துவின் மணவாட்டிகளாக வெற்றிப் பெற்ற வகுப்பார், ஆட்டுக்குட்டியானவரின் மனைவி, தேவனுடைய பலத்தால், அவர்களின் பந்தயத்தை முடிப்பார்கள். அதிக எண்ணிக்கையில் உள்ள திரள் கூட்டத்தார், அவளுடைய தோழிகள், சிங்காசனத்திற்கு முன் நிற்பதற்கு, தங்களுடைய வஸ்திரங்கள் தோய்த்து, வெளுத்தார்கள்.

சிம்சோன் போன்ற நீதிபதிகள் பரிபூரண மனித வல்லமையோடு எழுப்பப்படுவார்கள். ஒருவேளை அவர்கள் இஸ்ரயேலரை அர்மகெதோன் நெருக்கடி மூலம் பலவீனத்திலிருந்து பலப்பட்டார்கள். (மீகா 5:5, சகரியா 12:10) பின்னர் அவர்கள் உயிர்த்தெழுதலின் திட்டத்தை நிர்வகிப்பார்கள். இஸ்ரயேலில் உள்ள சிலர், அவர்களின் தலைவர்களிடம் தலைமையை திரும்ப பெற முயற்சித்தார். "ஆனாலும் அவர் - நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்று போங்கள் என்ற சொல்லுவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிதனையும் தேவனுடைய சாஷ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்." (லூக்கா 13:27,28)

சபையின் நிறைவடைதலே, சிம்சோன் மற்றும் எல்லா முற்பிதாக்களின் பரிசுக்கான திரவுக் கோலாகும். இவர்கள் சிம்சோனை போல பலவீனத்தில் பலப்படுத்தப்பட்டார்கள். இவர்களின் சிலர் கல்லெறியப்பட்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், நிந்தனைகளையும் அடிகளையும், கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். இவர்களுக்கு இந்த உலகம் பாத்திரமாக இருக்கவில்லை. இவர்கள் விசுவாசத்தினால் நற்சாட்சிப் பெற்றும், பரலோகத்தின் (உயிர்த்தெழுதலை) வாக்குத்தத்தத்தைப் பெறாமல்,

அவர்கள் நம்மை அல்லாமல் பூரணராகாதபடிக்கு நமக்கு விசேஜித்த காரியத்தை வைத்திருக்கிறார். (எபிரெயர் 11:33-40) கிறிஸ்து மற்றும் அவருடைய சபை இந்த உன்னதமானவர்களை உயித்தெழுப்பி, "பூமியின் மேல் பிரபுக்களாக வைப்பார்கள்" (சங்கீதம்45:16) ஏசாயா, மோசே, யோசுவா, எரேமியா, தாவீது மற்றும் ஸ்நானகன் யோவான், சிம்சோன் மற்றும் இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள், இஸ்ரயேலையும், இந்த உலகத்தையும் உயிர்த்தெழுப்பி, பரிசுத்தமான பெரும்பாதையில் பரிப்பூரணத்தை நோக்கி நடத்துவார்கள்.

**காசாவில் சிம்சோன் -நியாயாதிபதிகள் 16,17**

சிம்சோன் காசாவின் நுழைவாயிலுக்குள் சிக்கிக்கொண்டா. ஆனால் இரவில் அதை தகர்த்து, பட்டணத்து கனமான வாசல் கதவுகளை பிடுங்கி, பெலிஸ்தியர்களை ஏளனம் செய்யும் வகையில் அவைகளை மலையின் மேல் எறிந்துவிட்டார். பின்னர் தேளிலாள் அவரை வஞ்சித்து, பெலிஸ்தியர்கள் அவருடைய கண்களை குருடாக்கி, அவரை சிறையில் அடைக்கும்படிக்கு, அவருடைய மயிரை கத்தரித்தாள். அவர் பார்வையற்றவராக இருந்தாலும், 3000பெலிஸ்தியர் தலைவர்களை அழித்து போடுவதற்கான ஒரு வாய்ப்பை கண்டார். சிம்சோன் உயிரோடிருக்கும் போது கொன்றவர்களை காட்டிலும் அவர் மரிக்கும்போது, அதிகமாக எதிரிகளை கொன்றுப் போட்டார். (www. biblear chaeology.org, Bible and Spade, Between the Pillars, Winter 2005.)

**நமக்குண்டான சிம்சோனின் பாடங்கள்**

கிறிஸ்தவர்களாகிய நமக்கும் கூட, வெட்டப்பட வேண்டிய எதிரிகள் உண்டு- நபர்கள் அல்ல, ஆனால் நமக்குள்ளிருக்கும் விழுந்துபோன பண்புக்கூறுகள். இவைகளே நமக்குள்ளிருக்கும் "பெலிஸ்தியர்கள்". அதை செய்ய நமக்கு ஆற்றலும், வீரியமும் தேவை. நம்முடைய எதிரிகளாகிய உலகம், மாம்சம் மற்றும் சாத்தானை சமாளிக்க சிம்சோனின் வலிமையும், வீரியமும் நம்மை ஊக்கப்படுத்தலாம். இப்படி செய்வதினால், வெற்றிப்பெறும் மணவாட்டி வகுப்பார், கிறிஸ்துவோடு இணைந்து, இந்த உலகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஆயத்தம் செய்து, தேவனுடைய தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுவார்கள். வெட்டுதலுக்கான வேலை எப்படி நிறைவடையும்?

அகாபே அன்பு, சகோதரத்துவம், ஒவ்வொரு விசுவாச வீட்டில், நமக்குள்ளிருக்கும் பெலிஸ்தியரை அழிக்க வேண்டும். அழைக்கப்படவேண்டியவர்களை உற்சாகத்தோடு நாம் தேடி, இன்னும் கடைசி உறுப்பினர் வரைக்கும் நாம் அழைத்து, அவர்களின் பழைய சிருஷ்டியை அழிக்க ஊக்குவித்து, புதிய சிருஷ்டியை போஷிக்க வேண்டும்.

கடைசி காலத்து, அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு 13-17 நியாயாதிபதிகளில் அநேக உதவிகரமான பாடங்கள் உண்டு.

(1) சிம்சோன் சபையை போலவும், சபையை போல் அல்லாமலும் இருக்கிறார். "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்." (மத்தேயு 11:11) யோவானும், சிம்சோனும், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் உருவாக்கப்பட்டது, அதே நேரத்தில் சபை ஆபிரகாமின் உடன்படிக்கையின், கிருபையின் பிரமாணத்தின் கீழ் உருவாக்கப்படுகிறது.

(2)இந்த இரண்டிலும், தேவனை உற்சாகத்தோடு சேவிப்பது மிக அவசியம், குறிப்பாக நம்முடைய செலவில் இதைச் செய்யவேண்டும்.

(3) தேவனால் ஏவப்பட்ட வேதவாக்கியம் அனைத்தும், நன்றியுடன் பெற்றுக்கொண்டு, முற்காலங்களில் போலவே, அவைகளை கவனிக்க வேண்டும்.

(4) நம்பிக்கையுள்ளவர்களைத் தெரிந்துக் கொள்ளுவதில் கவனமாக இருங்கள். ஆண்டவரால் கொடுக்கப்பட்ட எதையும் நம்புங்கள். "பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்." (1யோவான் 4:1) பெலிஸ்திய ஸ்திரீயைத் தேடிச் செல்ல, தேவன் சிம்சோனை வழி நடத்தினார். ஆனால், உலகத்தை விட்டோடும் படிக்கு சபையை வலியுறுத்துகிறார்.

5.மற்றவர்களின் இரகசியங்களை பாதுகாக்க சூழ்நிலைகள் எழும்போது, "என் முகத்தை கற்பாறையைப் போலாக்கினேன், நான் வெட்கப்பட்டுப்போவதில்லை" என்று நமக்குள் சொல்லலாம். (ஏசாயா 50:7-9)

(6)பெலிஸ்தியர்கள் சிம்சோனின் திருமணத்தை முறித்து போட்டார்கள், அவர் மனசோர்வடைந்தார். ஆனாலும் சிம்சோன் தன் அமைதியை காத்துக்கொண்டு, பெலிஸ்திய இராணுவத்திற்கு உணவு வழங்கும், முதிர்ந்த வெள்ளாமையை அழிப்பதற்கும் வாலில் நெருப்பு கட்டப்பட்ட நரிகளோடு சென்றார். அவர் காலத்தையும், பலத்தையும் வீணாக்கவில்லை. ஒரு நல்ல போர் வீரனைப் போல சிம்சோன் தனது கவனத்தை காத்துக்கொண்டார்.

(7) தேவன் அவரிடம் என்ன எதிர்ப்பார்க்கிறார் என்பதை அவர் கண்டறிந்தார். அவர் ஒரு சிங்கத்தை கொன்று போட்டார். பல நாட்களுக்கு பின் அந்த வழியில் அவர் வந்த போது, காய்ந்து போன அதன் சடலத்தில் தேன் கூடிருந்ததை அவர் கண்டார். ஆகவே அவருடைய விடுகதை இவ்வாறு இருந்தது. -"அப்பொழுது அவன்: பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது என்றான்; அந்த விடுகதையை அவர்களால் மூன்று நாள் மட்டும் விடுவிக்கக்கூடாதே போயிற்று." (நியாயாதிபதிகள் 14:14) சிம்சோன் கொன்ற அந்த சிங்கம் உலர்ந்து, தேனிக்களுக்கு தேவையான தேனைக்கொடுக்கும் வீடாக மாறியது. சுறுசுறுப்பான தேனிக்களின் கூடுபோல இஸ்ரயேல் சந்தோஷமாக விளங்கும். சிம்சோன் சிங்கத்தைப் போல சண்டையிட்டு மரித்தபோது, வருங்காலத்தில் இஸ்ரயேலுக்கு அவர் தேனைப்போல மதுரமான வெற்றியை கொடுப்பார். குறிப்பாக, கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கும் கொடுப்பார்.

(பதிப்பாசிரியரின் குறிப்பு - சிம்சோனின் தைரியமான செயல் அவருடைய ஊனமான வாழ்வினால் வந்தது. இந்த இறுதியான செயல், பூமியிலுள்ள உண்மையான சபை முடிவடைந்தவுடன், அர்மகெதோன் வரும் என்று தெளிவாக காட்டுகிறது.

வலிமை குன்றிய சகோதரன் தடுமாறும் போதினிலே,
வலிமைமிக்க சகோதரன் பின் தங்கி நடக்கும் போதினிலே,
இரக்கமான செயல்கள் உம்மால் செய்யப்படுவதை நான் கண்ணுறும் போது,
நானும் கூட இரக்கமிகு செயல்கள் செய்வதிலே ஆர்வம் மிகக் கொள்வேனே.

**நீடித்து நின்ற ஒரு பிழை**

# விக்கிரகாரதனையும், தாண் கோத்திரத்தாரும்



"தேவனுடைய ஆலயம் சீலோவிலிருந்த கால முழுவதும் அவர்கள் மீகா உண்டுபண்ணின சுருபத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள்."(நியாயாதிபதிகள் 18:31)

**David Rice**

சிம்சோனைப் பற்றி விவரிக்கப்பட்டப் பிறகு, நியாயாதிபதிகளின் புத்தகத்தில் எழுதப்பட்ட மூன்று சம்பவங்களிலும், எந்த குறிப்பிட்ட நியாயாதிபதிகளும் அதில் தொடர்புள்ளவர்களாக காணப்படுவதில்லை. சிம்சோனுக்குமுன், நியாயாதிபதிகளின் வரிசையில் இந்த விவரங்கள் இடம்பெற்றது. இருப்பினும், புத்தகத்தின் முடிவில், சாமுயேல் புத்தகங்களைத் தொடருவதற்குமுன், ரூத்தின் கதையை எழுதினார்கள்.

தாண் கோத்திரம் விக்கிரகாரதனைக்குள் எப்படி சென்றது என்று நியாயாதிபதிகள் 17-18 அதிகாரங்கள் விளக்குகிறது. இதிலிருந்த அவர்கள் மீட்கப்படவே இல்லை. பென்னியமின் கோத்திரம் தங்கள் மத்தியிலிருந்து அகற்றமுடியாத ஒரு பாவத்திற்காக அவர்கள் எப்படி அழிக்கப்பட்டார்கள் என்று நியாயாதிபதிகள் 19-21 ம் அதிகாரங்கள் விளக்குகிறது. ரூத்தின் கதை நியாயாதிபதிகளின் புத்தகத்தை பின்தொடர்ந்தாலும், நியாயாதிபதிகளின் காலத்திற்கு தொடர்புடைய, இராஜாவாகிய தாவீதின் கொள்ளு பாட்டியின் வரலாற்றை விளக்குகிறது. இந்த மூன்று குறிப்புகளும் பெத்லகேமுக்கு ஏதோ ஒரு வகையில் தொடர்புடையதாக உள்ளது. மேலும், சில நேரங்களில் பெத்லகேம் முத்தொகுப்பு என அழைக்கப்படுகிறது. இந்த கட்டுரையில், தாண் கோத்திரத்தைச் சார்ந்த நியாயாதிபதிகள் 17 மற்றும் 18 ஆம் அதிகாரங்களின் மேல் கவனம் செலுத்துகிறோம்.

**1100 வெள்ளி காசுகள்**

எப்பிராயீம் கோத்திரத்தில் மீகா என்ற பெயருள்ள ஒரு மனுஷன் 1100 வெள்ளிக்காசுகளை தனது தாயிடம் கைப்பற்றி ஓடிபோனான், பின்னர் மனம் வருந்தி, அவளிடம் அதை திரும்ப ஒப்படைத்தான். ஆயினும், அவருடைய தாய்க்கு பணம் மீது விருப்பமில்லை. அவள் மனப்பூரவமாக " வெட்டப்பட்ட ஒரு சுருபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ண, நான் என் கையிலிருந்த இந்த வெள்ளியை என் மகனுக்காக முற்றிலும் கர்த்தருக்கென்று நியமித்தேன்..." என்று கூறினாள்.(நியாயாதிபதிகள் 17 :3) இது யாத்திராகமம் 32:4ல் ஆரோன் உருவாக்கின கன்றுக்குட்டியை நமக்கு நினைப்பூட்டுகிறது. இந்த உருவம் யெகோவா தேவனையும் அடையாளப்படுத்துவதாக யாத்திராகமம் 32 :5ம் வசனம் காட்டுகிறது. ஆனால், ஒரு உருவமாக யெகோவா தேவனை வணங்குவது, பத்து கட்டளைகளில் ஒன்றான இரண்டாம் கட்டளையில் நேரடியாக தடை செய்யப்படுகிறது. "கர்த்தர் இஸ்ரவேலரின் மிருக ஜீவன்களுக்கும் எகிப்தியரின் மிருக ஜீவன்களுக்கும் வித்தியாசம் பண்ணுவார்; இஸ்ரவேல் புத்திரருக்கு உரியவைகள் எல்லாவற்றிலும் ஒன்றும் சாவதில்லை என்றார்"(யாத்திராகமம் 20:4)

இதுவே இஸ்ரயேலின் 10 கோத்திர இராஜ்யத்தின் முதல் இராஜாவான யெரோபெயாமின் பாவமாகவும் இருந்தது. (1இராஜாக்கள் 12:28, இங்கு "தேவர்கள்", என்பது ஒருமையிலும் சொல்லப்படலாம் - "தேவன்"-elohim, )

மீகாவின் தாய் அவளுக்கு ஒரு பொருத்தமான தோற்றத்தை உருவாக்க ஒரு உலோக தொழிலாளிக்கு 200 ஜெக்கேளை எடுத்துச் சென்றாள். அவர் அவ்வாறு செய்தார், அவளுடைய மகன் மீகா இந்த சிலைக்கு ஒரு வழிபாட்டை முறைப்படுத்தினார். அவர் "அப்பொழுது மீகா: எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டபடியினால், கர்த்தர் எனக்கு நன்மை செய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றான்." (நியாயாதிபதிகள் 17:13) இப்படி, வெளிப்படையாக செய்யப்படும் மரியாதைகள், யேகொவா தேவனுடைய களஞ்சியத்திலிருந்து இரக்கம் பெற்றுக்கொள்ளலாம் என்று மீகா எண்ணினார். ஆனால் இது சட்டத்திற்கு முரணானதும், அனைத்தும் சட்டவிரோதமானதுமாக இருந்ததினால், மீகா மிக பெரிய தவறுச் செய்தார். "அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான்." (நியாயாதிகள் 17:6)

என்றும் சொல்லப்படுகிறது. நிச்சயமாக, சரியான நியாயம் என்ன என்ற அறிவு கிடைக்கக்கூடியதாக இருந்தது. பத்து கற்பனைகளை காத்துக்கொள்ளவேண்டும் என்று பக்தியுள்ளவர்கள் யாரேனும் எண்ணினால் அவைகளை நினைவில் வைத்தக்கொள்ளும் அளவுக்கு மிகவும் சுருக்கமானவைகள்.

அதுபோல, நாம் தேவனையும், அவருடைய குமாரனாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் பின்பற்றுவதாக உரிமை பாராட்டிக் கொண்டு, நம்முடைய நடத்தையினாலோ, செயலினாலோ, நினைவில் இருக்கும் மலைப்பிரசங்கத்தின் எளிமையான வார்த்தைகள் சிலவற்றை நாம் மதிக்கவில்லை என்றால், மீகாவை போல நாமும் தவறு இழைக்கக்கூடியவர்களாக இருப்போம். லேவிய ஆசாரியத்துவத்தைப் பற்றி அவர் அறிந்திருந்ததை போலியாக பின்பற்ற மீகா அதிகமான பிரயாசம் எடுத்துக்கொண்டார். ஆனால் அவருடைய நடத்தையில் முழுமையாக தவறிவிட்டார். தேவபக்தியுள்ள ஒரு உருவத்தை நாம் கவனமாகக் கட்டி எழுப்பி, நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையான, எளிமையான கட்டளைகளை நாம் தவறவிடுவோமா?

நம்முடைய கூடுகைகளில், நாம் கிறிஸ்தவ தராதரங்களை போலியாக பிரதிபலிக்கும் போது, இது நடக்கலாம். ஆனால் தொடர்ந்து வரும் வாரத்தில் மதச்சார்பற்ற விவகாரங்களில் அவர்களுக்கு குறைவான கவனம் செலுத்தக்கூடியவர்களாக இருப்போம். அல்லது நாம் மற்றவர்களின் போதனைகளை போலியாக பிரதிபலித்தோமானால் இது பொருந்தும். ஆனால் அவ்வாறு செய்வதால், கிறிஸ்துவினுடைய ஆவியை சிறிதளவே பிரதிபலிக்கமுடியும். இயேசு காய்பாவுக்கு முன் நின்ற போது, காய்பா தேவனுடைய பரிசுத்த தன்மையை காத்துக்கொள்வதில் மிகவும் கவனம் வைத்தவர் போல் காட்டிக்கொண்டார், ஆனால் அவர் கோபத்தை தவிர வேறு எதையும் பிரதிபலிக்கவில்லை. நீதிபதிக்கு முன் அமைதியாக நின்ற இயேசு, தன்னடக்கம் என்ற அவருடைய குணத்தையும், அவர் பதிலளிப்பதற்கு கூறப்பட்ட வார்த்தைகளில் அவருடைய மனநிலையையும் வெளிப்படுத்தினார். ஆகவே, பரிசுத்தமானவைகளை பேசுவதை போலவும், செய்வதை போலவும் நடித்து, கிறிஸ்துவின் எளிமையான கட்டளைகளை நாம் விட்டுவிடாதிருப்போம்

**ஒரு லேவி**

யூதாவில் உள்ள பெத்லகேமிலிருந்து ஒரு இளம் லேவியன் இப்பகுதிக்கு எவ்வாறு பயணம் செய்தார் என்று நியாயாதிபதிகள் 17: 7-18:31 வசனங்கள் விளக்குகிறது. மீகா இதை உணர்ந்த போது, ஒரு உண்மையான லேவியனை, ஆசாரியனாக நியமித்து, அவருடைய பரிசுத்தத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்பை கண்டார். "அப்பொழுது மீகா: எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டபடியினால், கர்த்தர் எனக்கு நன்மை செய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றான். "(நியாயாதிபதிகள் 17:13)

இங்கு பரிசுத்தமாக்கப்படுவதைக் குறித்து ஒன்றும் இல்லை என்று இந்த கதையிலும், இதை வாசிக்கும் எந்த வாசகருக்கும், தெளிவாக தெரிகிறது. இந்த விவகாரம், அதாவது தேவனை ஒரு விக்கிரக வடிவில் வணங்குவது, இன்னும் விக்கிரகாராதனையாக இருந்தது. நமக்கு ஆலோசனை கூறும்போது, இந்த பிரச்சனையை அப்போஸ்தலனாகிய யோவான், இன்னும் உயர்வான நிலையில் எடுத்துக்கொண்டார். "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்." (1யோவான் 5:21) நம்முடைய பரலோக தகப்பனுக்கு மேலாக நாம் எதை வைத்தாலும், அது நமக்கு விக்கிரகமாகும். பயபக்திக்குரிய இடத்திலிருந்து அவைகள் அகற்றப்பட வேண்டும். இனிமையான கொள்கைகளாகிய நியாயம், நீதி மற்றும் அன்பு கிறிஸ்துவின் நடத்தைகளில் முதலாவது இடம் பெறவேண்டும். இது கிறிஸ்துவுக்குள், தாழ்மையுள்ள சகோதரர், சகோதரிகளிடமும் வெளிப்படவேண்டும்.

**தாண் கோத்திரத்தார் எப்படி சம்பந்தப்பட்டார்கள்**

இதுவரை, மீகாவின் பாவம் அவருக்கும் அவருடைய குடும்பத்திற்கும் உட்பட்டிருந்தது. அவர் உண்மையான தேவபக்தியில் ஆர்வமுள்ளவராக இராமல், தேவபக்தியின் வேஷத்தை தரித்துக்கொண்டு சில தந்திரமான காரியங்களை ஏற்படுத்தி, இவ்வுலகின் ஆதாயத்தை தேடினார். "தேவன் தம்மை பரியாசம் செய்யவொட்டார்" என்பதால் இந்த உபாயங்கள் வேலைச் செய்யவில்லை. இந்த தவறான முயற்சிகளிலிருந்து எந்தவிதமான உண்மையான ஆசீர்வாதம் வராது. (கலாத்தியர் 6:7)

இந்த முறை, தாண் கோத்திரத்திலிருந்து ஐந்து பிரதிநிதிகள் கடந்து சென்றனர். அவர்கள் சிம்சோனின் உன்னதமான ஆவியைப் பெறவில்லை. மேலும் யோசுவா தேசத்தை பங்கிடுகையில், தேவனுடைய முன்னேற்பாட்டின் படி, தாண் கோத்திரத்தாருக்கு கொடுக்கப்பட்ட தேசத்திலிருந்து ஒருவரை போலவும் இவர்கள் இல்லை. இந்த தாண் கோத்திரத்தார் வித்தியாசமாக இருந்தனர், அவர்கள் தேவனால் ஒதுக்கப்பட்ட நிலங்களைப் பெற சலிப்படைந்தார்கள். "தாண் கோத்திரத்தார் குடியிருக்கிறதற்கு, தங்களுக்குச் சுதந்தரம் தேடினார்கள்" (நியாயாதிபதிகள் 18:1,2) இந்த தேடலில் அவர்கள் வடக்கில் பயணித்து, இறுதியாக இஸ்ரயேலின் வடக்கு எல்லையில் ஒரு செழிப்பான பகுதியை கண்டுபிடித்தார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த சுதந்தரத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். இவ்வாறு "தாண் முதல் பெயெர்செபா வரை" என்பது வழக்க சொல்லாயிற்று. இது இஸ்ரயேலின் வடக்கிலும் தெற்கிலும் உள்ள எல்லைகளாகும். (1 சாமுயேல் 3:20)

அவர்கள் மீகாவின் வீட்டிலும், அந்த சொரூபத்தையும், ஏபோத்தையும் அந்த லேவியன் சேவித்து வருவதை கவனித்தார்கள். அவர்கள் ஈர்க்கப்பட்டனர். ஆனாலும் அவர்கள் கடந்துச் சென்று, லாயீஸ் பட்டணத்தின் வடக்கை நோக்கி சென்றனர். யோசுவாவின் மூலம் தேவன் அவர்களுக்கு கொடுத்த தேசத்திற்கு எதிர்மாறாக, அங்கு அவர்கள் இந்த நிலப்பகுதியைப் பெறவேண்டும் என்று தீர்மாணித்தார்கள். ஆகையால் அவர்கள் மற்ற தாண் கோத்திரத்தாரிடம் திரும்பி இந்த இடத்தை ஜெயிப்பதற்கு 600 ஆட்களைக் கூட்டிச் சேர்த்தார்கள்.

## இது நம்மை பற்றி

வருங்கால கிறிஸ்துவின் சபை உறுப்பினர்களாகிய நம்மை பற்றிய அடையாளங்களே இந்த கதையில் தெளிவாக சொல்லப்படுகிறது. ஐந்து, சபையை அடையாளப்படுத்தும் எண். உதாரணமாக, ஐந்து புத்திசாலி கன்னிகைகள், அவர்களின் தோழியர்களாகிய ஐந்து புத்தியில்லாத கன்னியர்கள். வெளிப்படுத்தல் 13:18ல் 600 எண்ணை போல, 666 என்ற எண் எதிர்மறையான ஒரு தாத்பரியத்தை தரக்கூடியதாக உள்ளது. மேலும் 600 என்ற இலக்கமானது, வெளி 13:18ல் குறிப்பிடப்பட்டுள்ள 666-யும், இன்னும் துல்லியமாக சவுலோடு சென்ற 600 பேரையும் (1 சாமுயேல் 13:15, 14:2) அல்லது கோலியாத்தின் ஈட்டியினுடைய 600 சேக்கல் எடையை குறிப்பதால், (1 சாமுயேல் 17:7) இந்த இலக்கம் எதிர்மறை கண்ணோட்டத்தை கொண்டுள்ளது. ஆறு என்ற எண், முழுமையான எண் ஏழிலிருந்து குறைவானது. இது பாவத்தையோ அல்லது விழுந்து போன நிலையையோ குறிப்பிடலாம்.

இதில், தாண் கோத்திரத்தார் தேவன் அவர்களுக்கு தொடுத்ததை நிராகரித்த காரியமானது, நம்முடைய ஆவிக்குரிய எதிரிகளாகிய உலகம், மாம்சம் மற்றும் சாத்தானை ஜெயிப்பதற்கான கஷ்டங்களினால், ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சுதந்திரத்தை புறக்கணிப்பவர்களின் ஒரு சித்திரம் இங்கு காணப்படுகிறது. அதற்கு பதிலாக, தேவன் நமக்காக வைத்திருப்பவைகளை விட்டு, நாம் செழிப்பான பூமிக்குரிய பகுதிகளை தேடலாம். நாம் இப்படியாக தொடர்ந்தால், நம்முடைய ஆவிக்குரிய சலுகைகள், நம்முடைய ஆவிக்குரிய சுதந்திரம் மற்றும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையை இழந்து விடுவோம். வெளிப்படுத்துதல் ஏழாம் அதிகாரத்தில், ஆவிக்குரிய இஸ்ரயேலரின் கோத்திரங்கள் மத்தியில் தாண் கோத்திரம் காணப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பரலோக மகிமைக்கு அழைக்கப்பட்டவர்கள், அதை அடைய முடியாமல் பின் வாங்கி போகக்கூடியவர்கள் தாண் கோத்திரத்தாரை அடையாளப்படுத்துகிறார்கள். இவர்கள் திரள் கூட்டத்தார் அல்ல, ஆனால் இவ்விரண்டையும் பெற தவறுபவர்கள். (இது ஆதியாகமம் 49:17ல் யாக்கோபின் வார்த்தைகளுக்கு ஒத்திருக்கிறது.)

## அறுநூறு மனுஷர்:

அறுநூறு புருஷர் அவர்களின் வடக்கு எல்லையை கைப்பற்றினார்கள். பின்னர் மீண்டும் மீகாவின் வீட்டை கடக்கும்போது, மீகாவின் வீட்டில் அந்த சொரூபத்தையும், எபோத்தையும், கைவேலைகளையும் சேவிக்கக்கூடிய ஒரு ஆசாரியனாக இருப்பதற்கு பதிலாக அந்த லேவியனை தங்களோடு சேர்ந்து, தங்களுடைய கோத்திரத்திற்கு சேவைச் செய்யும் படிக்கு வலியுறுத்தினார்கள். வாய்ப்பை கண்ட லேவியன், அவர்களோட இணைந்து செல்ல மகிழ்ச்சியாக இருந்தான். பின்னர் மீகா, தாண் கோத்திரத்தாரை எதிர்த்து போராடினார், ஆனால் அவர்கள் அதிகமானவர்களாக இருந்ததினால், அவர்களின் அச்சுறுத்தலுக்கு பயந்து, அவர் வீட்டிற்கு வெறுமையாய் திரும்பினார்.

அவர்கள் கைப்பற்றின லாயீஸ்க்கு திரும்பி, அதற்கு தாண் என்ற மறுநாமம் இட்டு, லேவியின் விக்கிரகாரதனையையும், மீகாவின் சொரூப வழிபாட்டையும் ஸ்தாபித்தார்கள். “அப்பொழுது தாண் புத்திரர் அந்தச் சுருபத்தைத் தங்களுக்கு ஸ்தாபித்துக் கொண்டார்கள்;மனாசேயின் குமாரனாகிய கெர்சோனின் மகன் யோனத்தானும், அவன் குமாரனும் அந்தத் தேசத்தார் சிறைப்பட்டுப் போன நாள் மட்டும், தாண் கோத்திரத்தாருக்கு ஆசாரியராயிருந்தார்கள்.” (நியாயாதிபதிகள் 18:30)

இப்படியாக தாண் விக்கிரகாராதனைக்குள் பிரவேசித்து, அங்கு தங்கினார்கள். ஆவிக்குரிய விக்கிரகாராதனைக்கு திரும்பி செல்பவர்கள், பூமிக்குரிய நல்ல காரியங்களை பாராட்டுவதோடு, அவர்களுடைய பரலோக நம்பிக்கையையும் இழப்பவர்களுக்கு இந்த காட்சி சரியாக பொருந்துகிறது.

இந்த லேவியன், பாடத்தை நமக்கு கற்றுக்கொடுக்கிறார். RV, Rotherham, NIV மற்றும் , Companion Bible,"மோசேயின் குமாரனாகிய கெர்சோனின் குமாரனாகிய யோனத்தான்" என அவரது வம்சாவளியைக் குறிப்பிடுகிறார். அந்த இளம் லேவியன், மோசேயின் பேரன். (பழ[illegible] காலங்களில், மோசேயின் பேரன் செய்த காரியம், மோசேவை அவமதிக்கப்படாதபடிக்கு, அவருடைய பெயரை "மனாசே" என்று மாற்றியமைக்கப்பட்டது.) மிகத் தேவபக்தியுள்ள சகோதரர்களுடனோ அல்லது குடு[illegible]த்தோடும் நமக்கு தொடர்பிருந்தாலும், வஞ்சகமான ஆவி நம்மிடம் வரலாம். நாம் விழலாம். ஆகையால் பரலோக காரியங்களில் நாம் நம் கவனத்தை காத்துக் கொள்ள வேண்டும்.

"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்." (கொலோசெயர் 3:2)

நாம் பாடத்தை கவனிக்கலாம். மலைப் பிரசங்கத்தின் எளிமையானது, எளிதில் புரிந்துக் கொள்ளப்படும் கட்டளைகளை பின்பற்றுவோமாக. நாம் தாழ்மையுள்ளவர்களாகவும், சாந்தமான வர்களாகவும், நேர்மையின் மேலும், இரக்கத்தின் மேலும் தாகமுள்ளவர்களாகவும், இருதயத்தில் தூய்மையானவர்களாகவும், சமாதானம் செய்கிறவர்களாகவும், தேவைப்படும் போது, துன்புறுத்தலை சகிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். (மத்தேயு 5:3-12) இங்கே மனதில் எந்த சவாலும் அல்லது புரிந்துக்கொள்ள கடினமான காரியம் எதுவும் இல்லை. ஆவியின் இந்த இனிமையான கனிகளை நாம் பின்பற்றுவதற்கு தகுந்த பொருத்தமான அங்கீகாரத்தைக் கொண்டுள்ளோம். ஆனால் இங்கு வெற்றிக்கு தேவைப்படுவது - கவனிப்பு, பராமரிப்பு மற்றும் சுயமதிப்பீடு. கவனம் இல்லாமல் இருந்தால் நாம் அசைக்கப்படுவோம் மற்றும் புண்படவும் கூடும்.

நமது ஆவிக்குரிய எதிரிகளுக்கு எதிராக நாம் உன்னதமாக போரிடுவோம். நாம் தனி நபர்களை எதிர்த்து அல்லது சகோதரர்களோடு போராட அழைக்கப்படவில்லை அல்லது காய்பாவை போல நேர்மையான கோபத்தை வெளிப்படுத்துவதை போல பாசாங்கு செய்வதற்காக அழைக்கப்படவில்லை. அதற்கு பதிலாக, நாம் இந்த உலகத்தின் செல்வாக்கு, நம்முடைய சொந்த சுயநல மனது மற்றும் எதிரிகளின் அனைத்து கவர்ச்சிகளையும் எதிர்க்க வேண்டும். இந்த பிரதிகளில் நாம் நம்முடைய ஆற்றலை, மிக பெரிய அளவில் அதிகரித்துக் கொள்ளலாம்.

சொல்லக்கூடிய ஒருவரை விடவும் செய்து வழிகாட்டக்கூடிய
ஒருவரே சிறந்த சாட்சியாகவே திகழ்வாரே,
இன்றைக்கு சிறப்பான வழிகாட்டிகளாகத்திகழும்
பயணம் மேற்கொண்டு போதித்துவரும் யாத்ரீகர்கள்
யாவரும் சிறந்த சாட்சியாகவே திகழ வேண்டுமே.

குற்றத்தை தோற்கடித்தல்

# குற்றவாளியா - இல்லையா?



"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்" (நீதிமொழிகள் 24:16)

கிறிஸ்துவின் வருகைக்கு முன், நம்மில் சிலர் வெறுப்பூட்டுகிற, இன்னும் இழிவான வாழ்க்கையை நாம் வாழ்ந்திருக்கலாம். நாம் கர்த்தருக்குள் வளரும்போது, நம்முடைய பாவங்களின் அடர்த்தி தெளிவாக அதிகரிக்கிறது. மன்னிப்பு உண்மையில் நமக்கு பயன்படுகிறதா என்பதை நம்புவதே ஒரு போராட்டமாக இருக்கலாம். நம்முடைய கிறிஸ்தவ பயணத்தின் போது, நம்முடைய பாவம் நிறைந்த மனப்பான்மைகளோடு, இன்னும் போராடுவதை நாம் காணும்போது, இது உண்மையாக இருக்கலாம். ஒருவேளை, ஒருமுறை நாம் இயேசுவிடம் திரும்பினால், இந்த சிற்றன்பங்கள் சிதைக்கப்படலாம் என்று நாம் எதிர்பார்க்கலாம் அல்லது குறைந்தபட்சம் நம்பலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசு நம்மைக் குணமாக்குவார் என்ற வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றனவா?

ஆகவே, நாம் உண்மையான தேவனுடைய பிள்ளைகளா என்று தொடர்ந்து சந்தேகப்படலாம் மற்றும் குற்ற உணர்வுகள் நீடிக்கலாம். நாம் செய்த பாவங்கள் மிக மோசமானதாக இருந்தாலும். ஒருவேளை அது மற்றவர்களுக்கு நிரந்தரமாக தீங்கிழைத்திருந்தாலும், பெரும்பாலும் அந்த குற்றம் தீவிரம் அடைகிறது. ஒரு முறை நாம் மாற்றிவிட்டால், தொடர்ந்து குற்றவுணர்வோடிருப்பது தவறா?

மற்றொரு புறத்தில், நாம் தொடர்ந்து குற்றவுணர்வில்லாமல் இருப்பது தவறா? என்ற கேள்விகள் எழுகிறது. இந்த இரண்டில் ஒரு சிந்தனை, மனசாட்சியுள்ள விசுவாசிகளுக்கு அதிர்ச்சியூட்டும் ஒரு ஆதாரமாகும்.

### குழப்பத்திற்கு ஒரு விடை:

நம்முடைய குழப்பத்திற்கு, நம்பிக்கையான பதிலை கண்டுபிடிப்பதற்கு, நமக்கு ஒரே ஒரு ஆதாரம் உண்டு - வேத நூல்.

வேதவாக்கியங்களில், தன்னுடைய சொந்த பாவமுள்ள சுபாவத்தின் பாரத்தின் கீழ் போராடின தேவனுடைய ஒரு குறிப்பிட்ட மனுஷன் தாவீதை நாம் காணலாம். சங்கீதங்களில் நாம் வாசிக்கிறபடி, தாவீது போராடிய பல சந்தர்ப்பங்களை நாம் காணலாம். அவர் தம்முடைய மனித விரோதிகளோடு மட்டும் போராடாமல், தேவனுக்கு முன் அவருடைய சொந்த அபாத்திரமான நிலையோடும் போராடினார்.

சில நேரங்களில், தேவன் இன்னும் அவரது வேண்டுகோளைக் கேட்டுக்கொண்டிருக்கிறாரா என்றும், தேவன் அவரை இன்னும் பராமரித்துக் கொண்டிருக்கிறாரா என்ற யோசனை, கவலை மற்றும் ஆச்சரியத்தில் இருப்பதை போல் தோன்றுகிறது. இதற்கான ஒரு உதாரணத்தை சங்கீதம் 40ல் காணலாம்.

"எண்ணிக்கைக்கு அடங்காத தீமைகள் என்னைச் சூழ்ந்துகொண்டது, என் அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்துபிடித்தது, நான் நிமிர்ந்து பார்க்கக்கூடாதிருக்கிறது, அவைகள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறது, என் இருதயம் சோர்ந்து போகிறது." (சங்கீதம் 40:12)

இங்கு, தாவீது அவருடைய சொந்த பாவ தன்மையின் ஆழத்தை மிகுந்த துக்கத்தோடு விவரிக்கிறார். மீண்டும், சங்கீதம் 42:6ல், "என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது; ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்." என்று உணர்ச்சிப் பொங்க பேசுகிறார். தன்னுடைய சிருஷ்டிகர் தன்னை நினைவுக்கூறும்படி விரும்பினாலும், அவர் நினைக்கப்படுவதற்கு பாத்திரவான் என்று 9ம் வசனத்தில் கோருகிறார். "நான் என் கன்மலையாகிய தேவனை நோக்கி: ஏன் என்னை மறந்தீர்? சத்துருவினால் ஒடுக்கப்பட்டு, நான் ஏன் துக்கத்துடனே திரிய வேண்டும் என்று சொல்லுகிறேன்."? "என் அரணாகிய தேவன் நீர்; ஏன் என்னைத் தள்ளிவிடுகிறீர்? சத்துருவினால் ஒடுக்கப்பட்டு நான் ஏன் துக்கத்துடனே திரிய வேண்டும்?" (சங்கீதம் 43:2) என்றும் கூறுகிறார்.

நம்மை சில சிந்தனைகள் வாதிப்பது போல தாவீதையும் வாதித்தது. ஆனால் தேவன் தாவீதுடன் தொடர்ந்து வேலைச் செய்து கொண்டிருந்தார் என்பதையும், அந்த அளவுக்கு அவர் தேவனால் நேசிக்கப்பட்டார் என்பதையும் நாம் மற்ற வேத பகுதிகளிலிருந்து அறிந்துக் கொள்கிறோம். இப்படிப்பட்ட சந்தேகம் இருந்தபோதிலும், தாவீது தேவனுக்கு பிரியமானவராக இருப்பதற்கு அவர் எவ்வாறு சமாளித்தார்?

தாவீது அவரது எண்ணங்களை எதிர்மறையாக இருப்பதற்கு விடாமல் இருப்பதினாலோ ? ஆண்டவருடைய இரக்கத்தின் மேலுள்ள நம்பிக்கையை கொஞ்சம் கொஞ்சமாக விட்டிருக்கலாம். ஆனால் தாவீது அவ்வாறு செய்யவில்லை.

**சிந்தனை மாற்றப்பட்டது**

சங்கீதம் 42:11ல் தாவீது தன்னுடைய சிந்தனைகளை திருப்புவதற்கு எவ்வாறு முயன்றார் என்று நாம் காணலாம். "என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்." தாவீது தன்னுடைய இருதயத்தின் மனப்பான்மையைக் கண்டனம் செய்வதை நாம் காண்கிறோம்.

தன்னுடைய இருதயம் தவறான சிந்தை கொண்டிருப்பதை, நம்மை போல தாவீதும் அறிந்திருந்தார். ஆகவே, அவருடைய மனபான்மையை மாற்ற, தீர்மானித்தார்.

புதிய மொழிபெயர்ப்பில், அவர் எடுத்த தீர்மானத்தின் சுருக்கத்தை காணலாம் - நம்முடைய இரட்சகராகிய இயேசுவின் ஈடுபலியை கொடுப்பதற்கான உத்திரவாதம் கொடுக்கப்படா விட்டாலும், தாவீது தேவனுடைய இரக்கத்தின் மேல் நம்பிக்கை வைப்பதை தேர்வு செய்தார் என்று நாம் இவ்வசனங்களின் வழியாக காணலாம். ஆனால் இன்னும் இருக்கிறது. தேவனே தன்னுடைய ஒரே நம்பிக்கை என்று தாவீது உணர்ந்து, இதற்காக தேவனை துதிப்பதற்கு காலத்தை எடுத்துக் கொண்டார். ஒருவேளை, இதுவே திறவுகோலாக இருக்கலாம்! நம்முடைய கண்களுக்கு முன்பாக, தேவனுடைய நற்குணத்தை வைப்பதற்கும், அவரை புகழ்வதற்கும் என்ன செய்ய வேண்டுமோ அவைகளை நாம் செய்ய வேண்டும். தாவீது தேவனுடைய நற்குணங்களை ருசிப்பார்த்து, அதை நம்புவதற்கு தீர்மானித்தார். அவர் தேவனுடைய இரக்கத்திற்கு பாத்திரவான் அல்ல என்பதை நன்கு அறிந்திருந்தார். ஆயினும், அவர் தேவனை நம்பினார். நாமும் கூட, தேவனுடைய நன்மைகளை ருசிப்பார்த்திருக்கிறோம். இது நம்முடைய நம்பிக்கையை அதிகரிக்க வேண்டும்! இயேசுவின் இரத்தத்தின் வழியாக, இந்த கிருபையைப் பற்றிய புரிந்துக்கொள்ளுதலை நாம் பெற்றிருக்கிறோம். இயேசுவின் வாழ்க்கை சுவிசேஷங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதன் வழியாக பிதாவின் அன்பான, அழகான இயல்புகள் பிரதிபலிக்கிறது. தாவீது இராஜாவை காட்டிலும் தேவனுடைய இரக்கங்களை நம்புவதற்கு நமக்கு இன்னும் அதிகமான காரணங்கள் உண்டு.

**சந்தேகங்கள்**

அப்படியானால், சந்தேகங்கள் ஏன் நுழைகிறது? நம்முடைய கண்களுக்கு முன்பாகவும், நம்முடைய நெற்றிகளிலும், தேவனுடைய நன்மைகளை முன் வைப்பதற்கு, நம்முடைய சார்பில், நாம் செய்ய வேண்டிய காரியங்கள் எப்போதும் செய்யாமல் விடுகிறோமா? சொல்லபோனால், நாம் தொடர்ந்து தேவனை நம்பி, புகழ வேண்டுமோ ? இந்த விஷயத்தில், நாம் பெற்ற பொறுப்புகளை மறந்து விடுகிறோமோ? நாம் கட்டளைகளைப் பெற்றிருக்கிறோம். நாம் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கூறுகிறார். நாம் அவருக்குள்ளும், அவருடைய வார்த்தைகளிலும் நிலைத்திருக்க வேண்டும். நாம் வேதவாக்கியங்களை புறக்கணிக்கக் கூடாது, அப்படிச் செய்தால், தேவன் நமக்கு செய்த எல்லாவற்றையும் மறந்துவிடுவோம்.

அதை நாம் அறிந்திருந்தாலும், அதைப் பற்றிய முழுமையான உணர்ந்துக் கொள்ளுதலை பெறமாட்டோம். இதனால், அவருடைய வாக்குத்தத்தங்களை நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் பொருத்திப் பார்ப்பதற்கு சந்தேகம் வரலாம். நாம் அவருடைய வார்த்தைகளில் மூழ்கினால், அவருடைய சுபாவம் வெளிப்படும், அவருடைய இருதயத்தில் நாம் மூழ்கலாம். நாம் உதவ முடியாமல் போனாலும், நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பு கேட்கும்போது, அவர் நம்மை மன்னிப்பதோடு மட்டும் அல்ல, நம்முடைய பாவமுள்ள இயல்புகளையும், விருப்பங்களையும் ஜெயிப்பதற்கு உண்மையாக விரும்பக்கூடிய நம்முடைய சித்தங்களை பலப்படுத்தி நாம் வெற்றிப் பெற அவருடைய விருப்பத்தை நாம் காணலாம். பிலிப்பியர் 2:13."ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி

விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்."

**குற்றங்கள் மன்னிக்கப்பட்டன:**

தாவீதுக்குள் ஏற்றபட்ட மாற்றத்தைப் பற்றிய ஒரு சாட்சியை 32 ஆம் சங்கீதத்தில் நாம் காண்கிறோம். நம்முடைய சொந்த தவறுகளால் நாம் ஆவிக்குரிய ரீதியில் குறைவுள்ளவர்களாகவும், வெறுமையாவும் உணர்கையில் இது நமக்கும் ஓர் சிறந்த அத்தியாயமாக காணப்படுகிறது. நம்முடைய ஆழந்த அனுதாபங்கள் ஏன் நம்மை ஜெயித்து விடுகிறது என்று நாம் இங்கு காணலாம்.

அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, சுமை அகற்றப்பட்டதைப் பற்றி கண்டறிந்த போது, அவருடைய மகிழ்ச்சியை நாம் முதலாம் வசனத்தில் காண்கிறோம். "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்." .

இறுதியில், நம்முடைய கர்த்தராகிய இயேசுவினுடைய பலியின் மரணம் செலுத்தின கிரயத்தனால் நமக்கு மன்னிப்பு கிடைத்தது.

மறுரூபமாக்கப்படுவதற்கான குறிப்பை 2 ஆம் வசனத்தில் நமக்கு தருகிறார். "எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்." ! நம்முடைய பாவங்களைப் பற்றிய நமது சிந்தனைகளின் வடிவங்களை முதலில் நாம் விட்டொழிக்க வேண்டும். அவைகள் சாக்குப்போக்கு சொல்ல இடமில்லாதபடிக்கு, அவைகள் என்ன என்பதை நாம் கண்டறிய வேண்டும்!

3 மற்றும் 4ம் வசனங்களில் இதற்கான குறிப்பை நாம் காணலாம். "நான் அடக்கி வைத்த மட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று. இரவும், பகலும் என் மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ண கால வறட்சி போல வறண்டு போயிற்று."இது மனச்சோர்வைப் பற்றி துல்லியமான விளக்கம் அல்லவா ?

**பிரச்சனையை எதிர்க்கொள்ளுதல்**

நம் பாவங்களைப் பற்றிய (சிந்தையில், வார்த்தைகளில் அல்லத கிரியைகளில்) உண்மையை பொருத்தவரையில், நம்மை நாம் வஞ்சிப்பதை நிறுத்துவதற்கு அநேக வருடங்கள் எடுத்துக் கொள்கிறோம். நம்முடைய விழுந்துபோன நிலைமையில், இந்த விருப்பங்கள், நோக்கங்கள் அல்லது செயல்கள் நியாயமானதாக தோன்றலாம். நாம் குற்றத்தோடு போராடுவதற்கு இதுவும் ஒரு காரணம். இத்தகைய பாவங்களை நாம் அறிந்துக்கொள்ளும் போது, நம்முடைய தவறுகளை நாம் ஒப்புக்கொள்ளலாம்.

வசனம் 5- "நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்."

இந்த அதிகாரத்தின் 8 ஆம் வசனத்தில் தேவன் தாவீதுக்கு எவ்வாறு பதில் அளித்தார் என்பதை நாம் காணலாம். "நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக்காட்டுவேன்; உன் மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்."

**இந்த அழகான செய்தியில் இவ்வளவு அதிகமான காரியங்கள் உண்டு!**

முதலில், தாவீது எதை செய்தாரோ, அது உண்மையில் பாவம் என்று அறிக்கையிடுவதற்கு யெகோவா தேவன் எவ்வாறு காத்திருந்தார் என்று முதலில் நாம் உணர வேண்டும்.

தேவனுடைய அறிவுரை இல்லாமல், தாவீது எவ்வாறு சரியாக வாழ வேண்டும் என்று அவர் அறியமாட்டார் என்ற புரிதலையும் நாம் பெறுகிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, தேவன் தாவீதுக்கு கற்பிக்க ஆயத்தமாக இருக்கிறார் என்பதை அவர் தாவீதிடம் கூறுகிறார்.

இது நமக்கும் பொருந்தும். நம்முடைய பாவங்களுக்காக சாக்குப்போக்கு சொல்லுவதை நிறுத்திவிட்டு, அவைகளை அறிக்கையிட்டு, நம்முடைய வழிகளை மாற்றுவதற்கான முயற்சிப்பதற்கு தேவன் காத்திருக்கிறார்!

இது இங்கே இருக்கிறது. எளிமையோடு முன் வைத்து, மனம் வருந்தலாம். ஆனால் இதை நாம் தனியாக செய்ய வேண்டியதில்லை. நம்முடைய பாவச் செயல்களில் இருந்து நம்மை வெளியேற்றக்கூடிய நம்முடைய ஆண்டவர் மேல் நாம் சார்ந்திருக்க வேண்டும்.

ஆகவே 9 ஆம் வசனத்தில் அவர் நம்மை முன்னெச்சரிக்கிறார். "வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத

புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்க வேண்டாம்".

வேறு வார்த்தைகளில் சொல்லபோனால், ஒரு குறிப்பிட்ட வழியில் நம்மை தேவன் நடத்துவதை உணரும்போது, தேவனை நாம் எதிர்த்து நிற்கக்கூடாது. அவருடைய வழிநடத்துதலை நாம் காணாதவர்கள் போல் நடிக்கக்கூடாது. நாம் அவருக்கு கீழ்படிய வேண்டும். நாம் அவருக்கு செவி சாய்க்காவிட்டால், நேரிடும் தவிர்க்க முடியாத விளைவுகளை அவர் 10ஆம் வசனத்தில் முன்னறிவிக்கிறார். "துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்."அவர் நம்மை நடத்துவதை நம்பி, அவரை பின்பற்றினால், நம்மேல் தேவன் வைத்திருக்கும் மகத்துவமான அன்பை நாம் மதித்துணரலாம்.

## குற்றத்தை விட்டு வெளியேறுதல்

"நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்த முழக்கமிடுங்கள்." என்று 11ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். நாம் இன்னும் அபூரணமான நடையில் நடக்கிறோமென உணர்ந்து கொண்டு, அவர் நமக்கு அளித்திருக்கும் மூடலைச் சார்ந்து, நாம் "செம்மையான இருதயங்கள்" உள்ளவர்களாக, அவருடைய சித்தம் செய்ய விரும்பி முயற்சித்து, நாம் அவருடைய வழிகளில் நடக்க முயன்றால், நாம் இன்னும் நீதிமானாக எண்ணப்படுவோம். இந்த பாவங்களை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்டால், இயேசுவின் இரத்தம் இவைகளை மூடும் என்று நமக்கு தெரியும். அவைகளை நாம் புறக்கணிக்கக்கூடாது.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."(1யோவான் 1:9)

வேதவாக்கியத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதைப் புறக்கணித்தால், குற்றங்களில் புரளுவதற்கான அபாயத்தில் நாம் இருப்போம். அவருடைய வார்த்தைகளை வாசிப்பது, ஜெபிப்பது, குற்றங்களை அறிக்கையிடுவது போன்றவைகளின் வழியாக நாம் தேவனிடத்தில் "இணைந்திருக்கவில்லை" என்றால் அவர் மேல் உள்ள நம்பிக்கையை இழப்பதற்கான ஆபத்தில் இருப்போம். தேவனுடைய வார்த்தைகள் சுத்திகரிக்கும். நம்மை பிரித்தெடுக்கக்கூடிய வல்லமையுள்ளது. தேவன் நமக்கு அறிவுறுத்தும் முறைகளில் இது மிகவும் மேலானது. நாம் எங்கு தவறு செய்தோம் என்று நமக்கு காண்பித்து, அதை சரியாக செய்வதற்கு நமக்கு கற்பிக்கும். இது அவருடைய வல்லமையையும், தேவையான மாற்றங்களை செய்ய நமக்கு உதவக்கூடிய விருப்பத்தையும் நமக்கு உறுதிப்படுத்துகிறது. நம்முடைய விழுந்துபோன சுபாவத்தை அவர் புரிந்துக்கொள்வதை அறிவதில் நமக்கு ஆறுதல் அளிக்கிறது. இயேசுவின் மகத்தான அன்பளிப்பின் மூலம் அவர் நமக்களித்த மன்னிப்பின் வாக்குறுதி நம்மை உற்சாகப்படுத்துகிறது.

இந்த தொடர்ச்சியான உள்ளீடு இல்லாமல், நாம் வாழ்ந்தால், நம்முடைய சொந்த குறைவுகளில் நிலைத்திருப்போம். இதை அப்போஸ்தலனாகிய பவுல் தொகுத்து கூறும்போது, "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை." (ரோமர் 8:1) நம்மில் நாம் குற்றவாளிகளாக இருக்கிறோம், ஆனால் அவரின் வழியாக நாம் குற்றவாளிகள் இல்லை.

தேவனை துதிப்பதில் நாம் சகோதரர் பவுலோடு இணையலாம், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்." (ரோமர் 7:25)

ஒரு நல்ல மனிதனால் பலவற்றை போதிக்க முடியும்,
ஆனால், மனிதர் தங்கள் கண்களால்
உற்றுக் கவனிப்பதையே நம்பிடுவாரே,
ஒரு இரக்க செயல் செய்வதைக் கண்ணுறும் போதினிலே,
அது 40 முறை சொல்வதைவிடவும் மேலானதான்றோ?

இன்னும் சில புதிய விலை உயர்ந்த இரத்தினங்கள் தோன்றுகிறது

# மேலும் கற்றுக்கொள்வதற்கு



**சில துணை தொல்பொருள், நிழல்கள் மற்றும் கதாபாத்திரத்தின் விவரங்களைப் பற்றி இங்கு ஆலோசிக்கப்படுகிறது.**

**தெபோராள்** — பாராக்கின் படைகள் வடக்கில், தாபோர் மலையிலும், சீசேரா கர்மேல் மலைத்தொடரின் வடபகுதியிலும் இருந்து வந்தார். எனவே, தெபோராள் தெற்கில் இருந்து புயல் மேகங்களைக் கண்டு, பாராக்கை யுத்தத்திற்கு அழைத்தாள். அதே மேகங்களை கானானிய படைகள் தாமதமாக கண்டார்கள். அதேபோல நாமும் நம்முடைய வழி நடத்துலுக்காக இந்த உலகத்தை நோக்கி அல்ல, பரலோகத்தை நோக்கி பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**கிதியோன்** - ஒடுக்கப்பட்ட பருவங்கள் பொதுவாக இஸ்ரயேல் புத்திரரால் அறிமுகப்படுத்தப்படுகிறன்றன "இஸ்ரவேல் புத்திரர் **மறுபடியும்** கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள் அவர்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவை இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பலக்கபபப்பண்ணினார்."(நியாயாதிபதிகள் 3:12, 4:1, 10:6, 13:1) ஆயினும், நியாயாதிபதிகள் 6:1ல் "மீண்டுமாக" என்று வார்த்தையின்றி கிதியோனின் காலத்தின் ஒடுக்குதல் அறிமுகப்படுத்தப்பட்டது. (முதல் விடுவித்தலுக்கு முன்,2:11மற்றும் 3:7 ஆம் வசனங்களிலும் காணலாம்) ஆகவே தெபோராளின் காலத்தை போல அவளுக்கு பின் வந்த கிதியோனுக்கு பின் வந்த நாற்பது வருடங்கள் தேசம் அமைதியாக இருந்ததாக தோன்றுகிறது. (நியாயாதிபதிகள் 8:28 மற்றும் 5:31) இரண்டு யுத்தங்களும் யெஸ்ரயேல் பள்ளத்தாக்கில் சில நாட்கள் அல்லது வாரங்கள் மட்டும் நடைப்பெற்றது. ஆகவே, மேற்கு பகுதியின் சதுப்புநிலங்களில் சிசேராவின் இரதங்களுக்கு நேரிட்டதை மீதியானியர்கள் அறிந்திருந்தார்கள். மீதியானியரின் கூட்டணி, ஹரோட்டற்றின் வடப்பக்கத்தில் உள்ள மோரியா மலையில் முகாமிட்டது. (தெபோராளின் புயல் வெள்ளம் ஏற்பட்ட இடம் போல தோன்றுகிறது), மற்றும் கிதியோனின் இராணுவம் ஹரோட ஆற்றின் தென்பகுதியில் இருந்தன. மீதியானியர்களுக்கு தப்பிச்செல்ல மூன்று வழிகள் மட்டுமே இருந்தது. நீரோட்டத்திற்கு எதிராக (மேற்கில், சிசேராவின் இரதங்கள் அழிந்த சதுப்பு இடங்களை நோக்கி), வடக்கிழக்கை நோக்கிய சாலை (கலிலேயா கடலை நோக்கி) மற்றும் கீழ்நோக்கி (அவர்கள் இத்தேசத்திற்கு வந்த வழி) இவ்வாறு, கிதியோன் தனது படைகளை மூன்றாக பிரிப்பதற்கான செயல் முறை காரணமாக இருந்திருக்கும். (நியாயாதிபதிகள் 7:16) பொதுவாக மீதியானிய வீரர்கள் ஏற்கனவே நடுங்கிக் கொண்டிருந்தார்கள். (நியாயாதிபதிகள் 7:13-14) மீதியானியர்கள் திடீரென்று எக்காளங்கள் மற்றும் மண் பானைகள் உடைக்கும் சத்தங்களையும் கேட்டு, பிரகாசமான தீ பந்தங்களை கண்டார்கள். (வீரர்கள் தீ பந்தங்களையும் எக்காளங்களையும் அல்ல வாள்களைப் பயன்படுத்துவார்கள். எனவே, மீதியானியரும் அவர்களது கூட்டணிகளும், ஒவ்வொரு தீ பந்தத்தையும் ஒவ்வொரு நூற்றுக்கு அதிபதியை அடையாளப்படுத்துவதாக கண்டிருப்பார்கள்.) பாளையத்தின் விழும்பின் அருகில் இருந்து பயமுள்ள மீதியானியர்கள் தீ பந்தங்கள் மற்றும் எக்காளங்களை விட்டு பாளையத்தின் நடுவாக ஓடியிருப்பார்கள், அங்கு நடுவாக இருந்தவர்கள் இஸ்ரயேல் இராணுவம் துரிதமாக ஓடிவருவதை போல் கண்டு, போர் தீவிரித்திருக்கிறது என்று எண்ணியிருப்பார்கள்! சைமன் ஹெர்சோக் & மொர்தேக்காய் கீகோன், பைபிள் போர்கள், 1997, டெபோரா மற்றும் கிதியோனின் போர்களைப் பற்றிய வரைபடங்களையும் கிதியோனின் விசுவாசமும், தைரியமும் தேவனால் பரிசளிக்கப்பட்டது. ஆனாலும், கிதியோன் தன்னுடைய மதியீனத்தினால், கொள்ளையிடப்பட்ட ஆடைகள் மற்றும் பொன்னினால் ஒரு ஏபோத்தை உண்டாக்கி, இதனிமித்தமாக இஸ்ரயேலர் எல்லாரும் பாவம் செய்தார்கள்.

**லேவியன்** - மோசேவின் பேரன் விக்கிரகாரதனைக்கு தன்னேயே விற்றுபோட்டார். ஒரு ஆசாரியன் விசுவாச துரோகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்பதை இது காட்டுகிறது. (நாமும் அல்ல)

**அர்மகெதோனைப் பற்றிய தகவல்கள்:**

இஸ்ரயேலின் ஒடுக்குதல் மற்றும் அவர்களது விடுதலையிலிருந்து, நாம் இந்த உலகத்தை முடிவுக்கு கொண்டு வரும் அர்மகெதோனைப் பற்றின தகவல்களைப் பெறலாம். பாபிலோனின் வீழ்ச்சியை தடுக்க எந்த வலுவான கோட்டையும் கட்டமுடியாது. (யோசுவாவும் எரிகோவும்) * இந்த அளவுக்கு தீமை, இந்த உலகத்தை பயமுறுத்தி ஆள முடியாது. (ஒத்தனியேல்) * அழிக்கப்பட முடியாத அளவுக்கு எந்தவொரு அமைப்பும் செல்வந்தமாக இருந்ததில்லை. (ஏகூத்) தேவனால் ஜெயிக்கக்கூடாத எந்த ஒரு தொழில் நுட்பமும் இல்லை (தெபோராள் மற்றும் பாராக்) தேவன் ஜெயம் பெறுவதற்கு ஜன திரள் ஒரு பொருட்டல்ல (கிதியோன்) * சட்டவிரோதமாக பிறந்த குமாரனையும், தேவன் விடுதலைக்கு பயன்படுத்துவார். (யெப்தா) விசுவாசமுள்ள சபை நிறைவடைந்தால் மட்டுமே அர்மகெதோன் துவங்கும். (சிம்சோன்)

**மேலே உள்ள கட்டுரைகளில் உள்ள பாடங்கள்**

யோசுவா தனது வாழ்க்கையில் செய்த வீர செயல்கள் நமக்கொரு நல்ல மாதிரியாக முன் வைக்கப்படுகிறது. *எந்த அளவிலான துன்மார்க்கமோ, செல்வமோ எப்போதும் நிலைத்திருக்கமாட்டாது. (கூஷான், எக்லோன்) * பாராக் விசுவாசமுள்ளவராக இருந்தார், ஆனால் தெபோராளிடம் விசுவாசம் முழுமையாக இருந்தது. நாமும் இப்படிப்பட்ட விசுவாசத்தை பெற்றிருக்க வேண்டும். * வீர செயல்கள், எதிர்கால ஞானத்திற்கு உத்திரவாதம் அளிப்பதில்லை என்று கிதியோன் காட்டுகிறார். நாம் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியதால் , அவைகளை கவனமாக கொடுக்கவேண்டும் என்று யெப்தா காட்டுகிறார். மரணபரியந்தம் சிம்சோன் தேவனுடைய ஜனங்களின் மேல் அன்பை செயலாற்றினார். *சிறந்த உறவினர்களாக இருந்தாலும், ஒருவர் தன்னைதானே பரிசுத்தமாக்கிக் கொள்ள முடியாது என்று மோசேயின் பேரன் காட்டுகிறார். *கடந்த கால குற்றங்கள், எதிர்காலத்தில் நீதியின் அர்ப்பணிப்பை தடுக்கக்கூடாது.

ஒரு நாவண்மைமிக்க சிறந்த திறமை வாய்ந்த பேச்சாளர்
என்னைக் கவர்ந்துவிட்டாலும், நான் கேட்கும்
போதனையைவிடவும் எப்போதும் நான் பார்த்துக்கற்றுக்
கொள்ளும் போதனையைத்தான் அதிகம் விரும்புகின்றேனே.

# வட மற்றும் தென் கொரியா போரை நிறுத்தியது

"அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை." (மீகா 4:3)

**1910** ஆம் ஆண்டில், கொரியா ஜப்பனால் ஆக்கிரமிக்கப்பட்டது.. 1945 வுக்கு பிறகு, இரண்டாம் உலகப் போரின் முடிவில், ஜப்பான் சரணடைந்த போது, கொரியா இரண்டு மண்டலங்களாக பிரிக்கப்பட்டது, வடக்கில் சோவியத்தும், தெற்கில் அமெரிக்கர்களும் ஆக்கிரமித்தனர். மீண்டும் இணைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன, 1948ல், இருவேறு அரசாங்கங்கள் உருவாகின - வடக்கில் கொரிய சமதர்ம ஜனநாயகக் குடியரசும், தெற்கில் கொரியாவின் முதலாளித்துவ குடியரசாக இருந்தது. வடகொரியாவால் தொடங்கப்பட்ட படையெடுப்பு கொரியப் போருக்கு வழிவகுத்தது (1950-1953) கொரிய போர்நிறுத்த ஒப்பந்தம் யுத்தத்தை நிறுத்தியது, ஆனால் சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்படவில்லை.

ஏப்ரல் 2018ல் கொரியர்களின் தலைவர்கள் தங்கள் தீபகற்பத்திலிருந்து அனைத்து அணு ஆயுதங்களையும் அகற்றுவதாக உறுதியளித்தனர் மற்றும் 65 ஆண்டுகால விரோதப் போக்கிற்கு அதிகாரப்பூர்வமாக முடிவெடுப்பதற்கு உறுதியளித்தனர். வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் - உனுக்கம் தென்கொரிய ஜனாதிபதி மன் - ஜே-க்கிற்கும் இடையிலான ஒரு சந்திப்பு பல காரியங்களை கொண்டிருந்தது. தென் கொரியாவிற்குள் அடியெடுத்து வைத்த முதல் வட கொரிய நலைவர் கிம் ஆவார். யாரும் எதிர்பார்க்காத தருணத்தில் இரண்டு தேசங்களையும் பிரிக்கும் எலலை கோட்டினை தாண்டு வரும்படி வட கொரிய தலைவர் "மூன்" - ஐ அழைத்தார். கைகளை பிடித்து, பின்னர் தென் கொரியாவிற்குள் நுழைந்து அவ்வாறு செய்தனர். "முழுமையாக அணு ஆயுதமற்ற கொரியா, அணுசக்தி இல்லாத கொரிய தீபகற்பம் என்ற பொதுவான இலக்கை தென்கிழக்கு மற்றும் வட கொரியா உறுதிப்படுத்திய பின்,"வரலாற்றில் இந்த மோதலை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்காக நான் இங்கு வந்தேன்" என்று இந்த இரண்டு தலைவர்களும் ஒரு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டதாக, கிம் கூறினார்.

மூன்று உச்சி மாநாடுகளுக்கு (2000, 2007 மற்றும் 2018) பின்னர், "கொரிய தீபகற்பத்தில் இனி எந்த போரும் நடைப்பெறாது, எனவே ஒரு சகாப்தம் தொடங்கிவிட்டது" என்றும் தென் மற்றும் வட கொரியாவின் தலைவர்கள் இறுதியாக உறுதியளித்தார்கள். இரு தலைவர்களும்,"உயர் மட்டத்தில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நடந்த பேச்சுவார்த்தைகளை நடத்தவும், உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த தீவிர நடவடிக்கைகளை எடுக்கவும் ஒப்புக்கொண்டனர். " அவர்கள் இருவர்களிடமிருந்தும் வசிக்கும் பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டு உறவு அலுவலகத்தை நிறுவி, தீவிர ஒத்தழைப்பு, பரிமாற்றங்கள், வருகைகள் மற்றும் அனைத்து மட்டங்களிலும் தொடர்புகளை ஊக்குவிக்கிறது. ஆகஸ்ட் 15ம் தேதி, தேசிய விடுதலை தினத்தின் போது, வடக்கு மற்றம் தென் கொரியாவிற்கு இடையில் பிளவு ஏற்பட்டுள்ள குடும்பங்களுக்கான மறு இணக்க நிகழ்ச்சிகளுடன் தொடர அவர்கள் உடன்பட்டனர். 2007 ஒப்பந்தத்தில் ரயில்வே மற்றும் சாலைகள் நவீனமயமாக்கி, அவைகளை தொடர்புப்படுத்த, நடைமுறை படிகளை பயன்படுத்தப்படும்.

கொரிய யுத்தத்தை முறையாக முடிவுக்கு கொண்டுவருவதற்கான சமாதான உடன்படிக்கையை எவ்வாறு கொண்டுவருவது என்பது மூனுக்கு கேள்விக்குரியானது - நிறுத்தப்பட்டாலும், 1953ல் தொழில் நுட்ப ரீதியாக முடிவுக்கு வரவில்லை - இதன் விளைவாக,

அவர் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப உடன் சந்தித்து, ஒரு வகையான அணு ஆயுத ஒப்பந்தம் செய்தபோது,எப்படி கிம்முக்கு சில நிபந்தனையை அமைக்க உதவினார். இரு தலைவர்களின் கூட்டு அறிக்கையையும், சமாதானத்தின் "பொதுவான இலக்கு" மற்றும் கொரிய தீபகற்ப அணு ஆயுதமற்ற நிலை ஸ்தாபிப்பதாகவே இருந்தது. அது உண்மையில் நிறுவப்படவில்லை. பியோங்யாங்கின் அணுசக்தி நிலையங்களை ஆய்வு செய்ய எந்தவொரு உடன்படிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும், கிம் ஆயுதங்களை தயாரிக்கும் திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் அகற்ற வேண்டும் என்பதை சரிபார்க்க வேண்டும்.

## போர் நடத்துவதற்கான செலவு - பணம் மற்றும் வாழ்க்கை

இன்றைய டாலர் மதிப்பால் கொரிய போர் , 340 பில்லியன் செலவாகியது. அமெரிக்காவில், போரில் இறந்தவர்கள் 33,686 மற்றும் 2,830 போர் அல்லாத காரணத்தினால் இறந்தவர்கள் என்று பாதுகாப்பு துறை கணக்கிடுகிறது. தென் கொரியாவில் 373,599 குடிமக்கள் மற்றும் 137,899 இராணுவ இறப்புக்கள் ஏற்பட்டது என்று அறிக்கைகள் கூறுகிறது. சீனர்கள், 114,000 போரில் இறந்தனர் என்றும், 34,000 போர் அல்லாத காரணத்தினால் கொல்லப்படாதவர்கள் என்றும் சீன ஆதாரங்களில் இருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.வட கொரியாவில் 290,000 பேர் உயிர் இழந்தனர், 90,000 பிடிக்கப்பட்டனர் மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் இறந்தார்கள் என்ற சீன ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. நாடு பிரிந்திருந்ததால், தென் கொரியதாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்க பாதுகாக்க வேண்டியது அவசியமாக இருந்தது. இது அனைத்து இராணுவ கிளையிலிருந்து 26,000 சேவை உறுப்பினர்களுக்கும், ஆண்டு ஒன்றிற்கு 1.5பில்லியன் டாலர்கள் செலவழிக்கப்பட்டது. கொரிய வரி செலுத்துவோர் மூலம் இதில் அரை பங்கு திரும்ப கொடுக்கப்பட்டது.

"போரைப்பற்றி ஒவ்வொரு நபரும் அறிந்திருக்க வேண்டும்" என்ற கிறிஸ் எட்ஜஸின் எழுத்தாளர் பதிவுகளில், கடந்த 3,400 ஆண்டுகளில், போரில்லாமல் 268 அண்டுகள் மட்டுமே இருந்தன என மதிப்பிட்டுள்ளார். அதாவது நவீன வரலாற்றில் 8 சதவீதம் மட்டுமே. 20ம் நூற்றாண்டில் போர்களில் கொல்லப்பட்ட மக்கள் 108 மில்லியன் என்று அவர் மதிப்பிடுகிறார். மாவோ மற்றும் ஸ்டாலின் ஆகியோரால் சின மற்றும் உக்ரேனிய விவசாயிகள் பட்டினியினால் கொல்லப்பட்டோர் பல்லாயிரக்கணக்கானோர் இதில் உள்ளடக்கப்படவில்லை. காங்கிரஸ் ஆராய்ச்சி சேவை மையத்திலிருந்து, 24/7வால் ஸ்ட்ரீனைச் சேர்ந்த ஒரு அறிக்கையைப் பயன்படுத்தி அமெரிக்க வரலாற்றில் மிக விலை உயர்ந்த போர்களை மறுபரிசீலனை செய்தார். மெக்சிக்கன் - அமெரிக்கப் போரில் செலவழிக்கப்பட்டது - 2.4 பில்லியன் டாலர்கள், அல்லது 1847ல் மொத்தம் உள்நாடு உற்பத்தியில் 1.4 சதவீதமாகும். ஆனால் 1945ல் இரண்டாம் உலகப்போருக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 36 சதவீதம் அல்லது 4.1 டிரில்லியன் டாலர் செலவழிந்தது. இவை அமெரிக்க வரலாற்றில் மிக விலை உயர்ந்த போர்கள். பிரவுன் பல்கலைக்கழகத்தில் வாட்சன் நிறுவனம் தெரிவித்த தகவலின்படி, 2001ல் அமெரிக்காவின் மீதான பயங்கரவாத தாக்குதல்கள் காரணமாக, 27 நாடுகளில் இராணுவ நடவடிக்கைகளுக்காக 5.6 டிரில்லியன் டாலர் செலவழிந்துள்ளது. உலகளாவிய ரீதியில் நேரடி வன்முறையில் சுமார் 370,000 பேர்களும், மறைமுகமாக 370,000 பேர் இறந்துள்ளனர். அதோடு 10.1 மில்லியன் அகதிகள் இடம்பெயர்ந்துள்ளனர்.

## தேவனுடைய வழிக்கு எதிராக மனிதனின் சமாதான வழி

கிம் ஜாங் அன் போன்ற ஆட்சியாளர்கள அவர்கள் மனித விதியை சறிந்த தலைவர்கள் என்று தங்களை கற்பனை செய்துக்கொண்டனர் என்றும் அவர்களின் இராணுவத்தின் வலிமையைப் பயன்படுத்த மாட்டோம் என்ற வாக்குறுதி அளிப்பதன் மூலம் சமாதானத்தை அடையலாம் என்று எண்ணினார்கள். ஆயினும், இப்படிப்பட்ட கற்பனைகள் டாலர்கள் மற்றும் வாழ்க்கைக்கு மிக விலை உயர்ந்ததாக உள்ளது. இறுதியில், எங்கேயாவது தொடர்ந்து போர்நடந்துக்கொண்டிருக்கிறது.ஒரு சமாதானமான உலகை உருவாக்கவேண்டும் என்ற மனிதனின் முயற்சிகள், அர்மெகதோன் என்று அழைக்கப்படும் இறுதி மோதல்களில் தோல்வியடையும் என்று வேதாகமம் தீர்க்கதரிசனமாக கூறுகிறது. இந்த மோதலுக்குப் பிறகு, உதவிக்காக தலைவர்கள் உயர் அதிகாரங்களை நோக்கி துவங்குவார்கள். இது எந்த அளவுக்கு நடைப்பெறும் என்று நமக்கு தெரியவில்லை என்றாலும், இது மீகா தீர்க்கதரிசியினால் விவரிக்கப்படுகிறது.

"ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடிவருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன் தன் திராட்சைச் செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று."(மீகா 4:1-4)

இந்த மலையை அல்லது ஆண்டவரின் இராஜ்யத்தை, கர்த்தரின் வீடாகிய பர்வதம் என்று மீகா விவரிக்கிறார். கர்த்தருடைய ஆலயம், யெகோவாவின் ஆட்சியின் வீடும், இவர்கள் கர்த்தருடைய சொந்த புத்திரர்களின் குடும்பத்தாராக வேதவாக்கியங்கள் அடையாளம் காட்டுகிறது. இவற்றில் இயேசு தலைமை வகிக்கிறார், அவருடன் அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு, அவருடன் துன்பப்பட்டு, அவரோடு மரித்தவர்கள். அவரோடு வாழ்ந்து, அவரோடு ஆளுகை செய்வார்கள் என்ற வாக்குத்தத்தம் இவர்களுக்கே கொடுக்கப்பட்டது. "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப்பாடுபட்டால் அப்படியாகும்." (ரோமர்8:16,17) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். "எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடி வருவார்கள்." என்று மீகா கூறினார். தேசங்களின் மேல் வல்லதிகாரம் பெற்ற அரசாங்கங்கள் தங்களுடைய ஆதிக்கத்தை விரிவுபடுத்தும்போது மற்ற நாடுகளில் அடைக்கலம் புகுந்து விடும் அனுபவங்களை மனுஷர் பெற்றிருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அப்படி இருக்காது. ஜனங்கள் அதன் ஆசீர்வாதங்களையும், பாதுகாப்பையும் அறிந்துக் கொள்வதால், அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு ஓடிவருவார்கள். "திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்" தீர்க்கதரிசனத்தின் இந்த பகுதி நிறைவேறின காலத்திலிருந்தே, ஜாதிகள் கடந்தகால யுத்தங்களை இரக்கமில்லாமல் அகற்றிவிடுவர். தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் சமாதானத்தைக் கொடுக்கக்கூடிய வரும், அப்போது பூமியின் மீது சரியான இராஜாவாக அங்கீகரிக்கப்படும் பிதாவாகிய தேவனை மட்டுமே நோக்குவதற்கு ஆயத்தமாக இருப்பார்கள்.

சமாதானத்தை நிலைநிறுத்த ஒரே வழி, போருக்கு தயாராக இருக்கவேண்டும் என்ற மனித ஞானம் எப்போதும் திருப்தியடைந்திருக்கிறது. ஆனால் அந்த ஒழுங்கு சீக்கிரத்தில் பூமியின் புதிய அரசால் மாற்றப்படும். இது மனித கண்ணோட்டத்திலும் அனுபவத்திலும் மிகப் பெரிய மாற்றங்களை கொண்டுவரும். யுத்தத்திற்கான அல்லது போருக்கான எந்தவொரு ஆயத்தம் இல்லை என்பதற்கு இனி எந்த இறப்பும் இல்லை. போரினால் பாதிக்கப்பட்டோரும் இல்லை என்று பொருள். காட்டு மிராண்டித்தனத்தின் பயத்தை அனுபவித்தவர்கள் உண்மையில் பாதுகாப்பை உணருவார்கள். கிறிஸ்துவின் இராஜ்யம் சமாதானத்தின் கல்வித்திட்டத்தை ஏற்படுத்தும். இறுதி சோதனைக் காலத்திற்குப்பின் அழிக்கப்படும். "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா 11:9)

அவனுக்கு உதவி செய்வதை நான் பார்க்க வேண்டுமே,
உதவி செய்யும் எண்ணம் எனக்குள் பலமாக வளருகின்றதே,
நண்பனாக எண்ணக்கூடிய அளவுக்கு
உயர்ந்து காணப்பட வேண்டுமே.

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள், திருச்சி.**
**கைப்பேசி : 9244611241, 8122224919**